
KALKI 18.12.94
ரூ. 3.00
கல்கி
இளம் கலைஞர்களின்
பாடா விரதம்!



# சேக்சேரிப்பு!

''என்ன கன்றாவி இது, ஜீன்ஸூம், டி ஷர்ட்டும் போட்டுண்டு பாடறார்?''

''இந்த கச்சேரி முடிஞ்ச உடனே, ராப் மியூசிக் கச்சேரிக்குப் போகணு மாம்!''

• • •

''அரசியல்வாதி கச்சேரி பண் ணினா எப்படி இருக்கும்?''

''கை தட்றதுக்கு ஆளுங்களை லாரியில் கொண்டு வர வேண்டி யிருக்கும்.''

• • •

''பாகவதர், மேடையிலே தன் முன்னே எதுக்கு ஒரு சின்ன பேப் பரை வைக்கக்கிறார்?''

''மியூசிக் காலேஜ்லே பிட் அடிச்சு பாஸ் பண்ணியிருப்பாரோ என்னமோ!''

• • •

''பாகவதர் பாட்டுப் படறதோட ஜெராக்ஸ் கம்பெனியும் நடத்தறா ராம்....''

''அதான் அசல் அச்சு குருநாதர் மாதிரியே பாடறதுல தெரியுதே!''

• • •

''இது என்ன புது பழக்கம்? ஒவ் வொரு பாட்டுக்கு முன்னாலயும் ராகம் சொல்லிட்டு பாகவதர் ஆரம்பிக்கிறார்?''

''அப்படி சொல்லலேன்னா ஆடியன்ஸ்ல ஆளுக்கு ஒரு ராகமா புரிஞ்சுக்கறாங்களாம்!''

• • •

''இந்த சேனுக்கு ஏழே ஏழு கச்சேரிக்குத்தான் டிக்கெட் வாங்கியிருக்கியா, ஏன்?''

''என்கிட்டே ஏழுபட்டுப் புடைவைதானே இருக்கு!''

• • •

''அவர் வித்யாசமாய்க் கச்சேரி பண்ணுவாருன்னு சொன்னீங் களே... எப்படி?''

''முகாபுலா பாட்டை சங்கரா பரண ராகத்திலே பாடுவாருன்னா பார்த்துக் குங்களேன்!''

• • •

''கச்சேரி பண்ண ஆயிரம் ரூபாய் தரேன்னு சொல்லியும் அவர் ஏன் ஒப்புக்கலை?''

''கச்சேரி பண்ணாம இருந்தால் பத்தாயிரம் ரூபாய் தர்றதா ரசிகர்கள் சொல்லிட்டாங்களாம்!''

• • •

''கச்சேரி செய்யும் போது கூடவே ஒரு அஸிஸ்டென்ட்டை வெச்சுப்பீங்களா? எதுக்கு?''

''என் தொடைலயே ஓங்கி ஓங்கித் தாளம் போட்டுக்கிட்டா வலிக்குமே!''

• • •

''நேத்திக்குக் கல்யாணக் கச்சேரியில் எந்தப் பாட்டை ரொம் பவும் ரசிச்சீங்க?''

''சாப்'பாட்டை!''

— குழல்

ஜெ. கச்சேரி 48-ம் பக்கம்....

# இளம் கலைஞர்களின் பாடா விரதம்

***மியூசிக் அகடமி - இசைக் கலைஞர்களின் மெக்கா! ஆண்டு தோறும் இங்கே பாட/வாசிக்க வாய்ப்புக் கிடைத்தால், nothing like it... அப்படியிருக்க, சில இளைஞர்கள் இவ்வாண்டு அகடமி வாய்ப்புக்கு 'no thank you" சொல்லியிருக்கிறார்கள்! கேட்டால், 'சண்டையெல்லாம் ஒண்ணுமில்லைங்க....' என்கிறார்கள். பாடுவதில்லை என முடிவெடுத்த உன்னி கிருஷ்ணன், விஜய் சிவா, பாட ஒப்புக் கொண்டுள்ள சௌம்யா, ஆகியோரின் தன்னிலை விளக்கம் இந்தக் கலந்துரையாடல் :***

**விஜய் சிவா :** அகடமியில 'ஜூனியர், சப்-சீனியர், சீனியர்'னு மூணு பிரிவா கலைஞர்களைப் பிரிக்கறாங்க. முதல் இரண்டு பிரிவுகள்ல பாடறவங்க கச்சேரிக்கு டிக்கெட் கிடையாது - ரசிகர்கள் இலவசமா கேட்கலாம். இவங்க கச்சேரி பிற்பகல் நேரத்துலதான் இருக்கும். மாலை நேரக் கச்சேரிகள்ல சீனியர் கலைஞர்கள்தான் பாட முடியும்.

**உன்னிகிருஷ்ணன் :** இவ்வளவு வருஷமா அதாவது 1987 முதல் '93 வரைக்கும் நான் ஜூனியர் பிரிவுலதான் பாடிக்கிட்டிருந்தேன். இந்த வருஷமும் அதே பிரிவுல என்னைப் பாடச் சொன்ன போது ஒப்புக் கொள்ளலை. அடுத்த பிரிவில் (சப்-சீனியர்) வாய்ப்பு கொடுக்கறப்போ 'பாடறேன்'னு சொல்லிட்டேன்.

**விஜய் சிவா :** அதேதான் நானும் சொன்னேன். நாலு வருஷம் ஜூனியர் பிரிவுல பாடினேன். அப்புறம் '88லேருந்து சப் சீனியர் பிரிவில் பாடிக்கிட்டிருக்கேன். இனிமேல், எப்ப சீனியர் பிரிவுக்கு என்னை மாத்தறாங்களோ அப்போ பாடுவேன். இதே முடிவைத்தான் நெய்வேலி சந்தான கோபாலனும் (டி.என். சேஷகோபாலனின் சிஷ்யர்) பாம்பே ஜெய்ஸ்ரீயும் எடுத்திருக்காங்க. ஜெயஸ்ரீ ஜூனியர்லேருந்து சப்-சீனியராக வர வேண்டியவங்க....

**உன்னிகிருஷ்ணன் :** இதில் வேடிக்கை என்னன்னா நாங்க ஒருத்தரோடு ஒருத்தர் கலந்து பேசாமல் தனித்தனியா எடுத்த முடிவுதான் இது. என்னைப் போலவே வேற சிலரும் முடிவெடுத்திருக்காங்கன்னு தெரிஞ்சதும் ஆச்சரியமா இருந்தது.

**கல்கி :** அப்போ, இளம் கலைஞர்களெல்லாம் அகடமிக்கு எதிரா அணி சேர்ந்திருக்காங்கன்னு சொல்ல முடியாது...?

**விஜய் :** அப்படியெல்லாம் இல்லவே இல்லை! உண்மையில் இந்த முடிவை நாங்க 'பிரமோஷன்' விரும்பி மட்டுமே எடுக்கல்லை. வேற சில சங்கடங்களைத் தவிர்க்கவும் எடுத்த முடிவு இது.

**சௌம்யா :** ஆமாம்! அகடமியில் 'ஜூனியர்' கச்சேரி செய்தால் மற்ற சபாக்களில் சீனியர் சான்ஸ் கேட்க முடியாது!

**விஜய் :** எங்களுக்கு சீனியர் சான்ஸ் கொடுக்கத் தயாராயிருக்கும் சபாக்களில் கூட 'அகடமியில் மட்டும் ஜூனியராகப் பாடுகிறாயே'ன்னு கேள்வி எழுப்பறாங்க. எவ்வளவு வருஷம் அவங்களைச் சமாளிக்கறது...? ரொம்ப தர்ம சங்கடமாக இருக்கு.

**கல்கி :** ஆக அகடமியில் பாடாவிட்டாலும் மற்ற சபாக்களில் சீனியர் இடம் கிடைச்சால் சரி என்று முடிவு பண்ணிட்டீங்க. அப்போ அகடமி முக்கியம் இல்லையா?

**உன்னிகிருஷ்ணன் :** அப்படி நாங்க நினைக்கலை. அகடமியில் பாடறது எங்களுக்கு ரொம்ப முக்கியம். அங்கே பாடுகிற போதுதான் அமெரிக்க பேப்பர்களில் கூட விமர்சனம் வருது...

**விஜய் சிவா :** எங்களுடைய வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் அகடமி உதவியிருக்கு. இந்த வருஷம் கச்சேரி இல்லையே என்கிற ஏமாற்றம் கூட இருக்கு. ஆனால் வருத்தம் இல்லை.... ஏனென்றால் நாங்க எங்க நிலையை அகடமிக்குத் தெளிவாக்கிட்டோம். அவங்களும் புரிஞ்சுக்கிட்டாங்கன்னு தெரியும். மேலும், நான் கச்சேரி செய்யலைன்னாலும் லெக்சர் டெமான்ஸ்ட்ரேஷன்ல பாடப் போறேன் - பல்லவி பற்றிய விரிவுரை....

**கல்கி :** சௌம்யா, நீங்களும் நடுவில்

ஒரு வருடம் இப்படி பாடா விரதம் இருந்து விட்டு அப்புறம் திரும்பவும் பாட ஆரம்பிச்சிங்க போலிருக்கே...?

**சௌம்யா :** ஆமாம். ஜூனியர்லேருந்து சப்-சீனியர் இடத்துக்கு மாற்றம் கேட்டு ஒரு வருஷம் பாடாம இருந்தேன். மறு வருஷமே எனக்கு சப்-சீனியர் இடம் கொடுத்தாங்க. இந்த வருஷமும் அதே சப்-சீனியர் இடத்தில் பாடறேன்.

**கல்கி :** அடுத்த நிலைக்குப் புரமோஷன் கேட்கணும்னு நீங்க நினைக்கலியா?



**• சௌம்யா : "மாற்றம் கேட்டேன்; கிடைச்சது!"**

**• உன்னிகிருஷ்ணன் : "தனித் தனியா எடுத்த முடிவுதான்!"**

**• விஜய் : "காத்திருந்தால் போச்சு!"**

**சௌம்யா :** போன வருஷம்தானே ஒரு புரமோஷன் கிடைச்சிருக்கு.... இன்னும் கொஞ்சம் காத்திருக்கணும்...

**விஜய் :** சப்-சீனியர் இடத்தில் சந்தான கோபாலனும் நானும் பாடலைன்னு சொன்னப்ப அந்த இரண்டு இடங்களும் பாம்பே ஜெய்ஸ்ரீக்கும் உன்னிகிருஷ்ணனுக்கும் கிடைக்கும்னு நினைச்சேன். ஆனால் அப்படி கிடைக்கலை என்பதும் அவங்களும் பாடறதில்லைன்னு முடிவு பண்ணினதும் எனக்கு ஆச்சரியமாத்தான் இருந்தது. சப்-சீனியரிலிருந்து சீனியர் நிலைக்கு எங்களுக்கு புரமோஷன் கிடைக்காம போனதுக்காவது வலுவான காரணம் இருக்கு - இந்த வருஷம் அகடமியில் பின்மாலைக் கச்சேரிகளை (7-9.30) வைக்கறதில்லைன்னு முடிவு பண்ணிட்டாங்க. சீனியர்களுக்குன்னு ஒதுக்கியிருந்த இந்த இடம் குறைஞ்சுட்டதால பழைய சீனியர்களுக்கெல்லாம் வாய்ப்புக் கொடுத்தது போக, எங்களைப் போல புது சீனியராக விரும்பறவங்களுக்கு மேடை கிடைக்கலை.

**கல்கி :** போதுமான அளவு கூட்டம் வரதில்லைன்னுதானே இரவுக் கச்சேரியை நிறுத்தினாங்க. உண்மையில சீனியர்கள் கச்சேரியை விட, பொதுவாக பிற்பகல் டிக்கட் வைக்காம நடத்தற உங்கள மாதிரி இளைஞர்கள் கச்சேரிக்குத்தான் நிறைய கூட்டம் வருது.. அதில் பாடுவதுதானே இன்னும் உற்சாகமான அனுபவம்.... அதை வேண்டாங்கறீங்களே?

**விஜய் :** என்னைக்காவது ஒரு நாள் நாங்களும் சீனியராகத்தானே வேணும்....?! குறைவாத்தான் கூட்டம் வரும் என்றால், அந்த நிலைக்கு இந்த இளம் வயசுலயே பழக்கப்பட்டுப் போறது நல்லதில்லையா?

*(எல்லோரும் பலமாகச் சிரிக்கிறார்கள்)*

**கல்கி :** அப்போ உங்க ரசிகர்களுக்குத்தான் பெரிய ஏமாற்றம்....

**உன்னிகிருஷ்ணன் :** அப்படிச் சொல்ல முடியாது. மற்ற சபாக்களில் நாங்க பாடறோமே! அகடமியில மட்டும் தான்.. அவங்க வசதிக்கு அவங்க பாடச் சொல்லிக் கேட்டாங்க; எங்களுக்கு வசதிப்படாததால நாங்க பாடலை, அவ்வளவுதான்...

**கல்கி :** எத்தனை வருஷம் இப்படியே பாடாம இருப்பீங்க...?

**உன்னிகிருஷ்ணன் :** நாங்க எதிர்பார்க்கிற வாய்ப்பை அவங்க தரத் தயாராகற வரைக்கும்...

தொகுப்பு : **சித்தார்த்**

அட்டை வண்ணப்படம், படங்கள் : **யோகா**

# ஜாஸ் இசை வழங்கும் தமிழர்!

"இளையராஜா என் நெருங்கிய நண்பர். அவருடைய ஆர்க்கெஸ்ட்ராவில் நிறைய வாசித்திருக்கிறேன். எம்.எஸ்.வி., கே.வி. மகாதேவன், தேவராஜன், தேவா, கிரவாணி, ஹம்சலேகா எல்லார் குழுவிலும் ஸோலோ டிரம்பெட் வாசித்திருக்கிறேன்!" என்கிறார் ஜாஸ் இசைக் கலைஞர் பிராங்க் டூபியர்.

டிரம்பெட் மட்டுமல்லாது, சாக்ஸபோன், மெட்டல் ஃப்ளூட் என பல வாத்தியங்கள் இசைக்கத் தெரிந்த டூபியர் - பெயரைப் பார்த்தால் வெளிநாட்டுக்காரர் போல் தோன்றினாலும் தமிழர். மெட்ராஸ்காரர்! சமீபத்தில் அமெரிக்கன் சென்டரில் நடந்த இவரது ஜாஸ் கச்சேரி, பிரமாதமான பாராட்டுகளைப் பெற்றது. கச்சேரி முடிவில் அவரைச் சந்தித்துப் பேசினோம் :

அப்பா ஒரு வயலினிஸ்ட். அம்மா பியானிஸ்ட். உடம்பில் இசை ரத்தம் ஓடுகிறது டூபியருக்கு.

டில்லி, கல்கத்தாவில் பிரபல ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் தினசரி இரவு இசை நிகழ்ச்சிகள் கொடுத்து வந்தவர், பழையபடி சென்னைக்கே வந்து சேர்ந்தார் 69ல்.

ஜவான்களுக்காக ஒரு ஜாஸ் நிகழ்ச்சி நடத்தி, வசூலான தொகைக்கான செக்கை அன்றைய பிரதமர் இந்திரா காந்தியிடம் கொண்டு போய்க் கொடுத்திருக்கிறார்.

ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குப் போயிருந்தபோதெல்லாம் அங்கே பல இசை நிகழ்ச்சிகள் நடத்தியிருக்கிறார் டூபியர்.

"இந்திய ராகங்கள் ஏதாவது தெரியுமா?"

"கொஞ்சம் தெரியும். ஒரு கல்யாணி பீஸ் கூட வாசித்திருக்கிறேன்!"

இங்கே இருக்கிற இசை அமைப்பாளர்கள் தவிர, வடக்கத்தி மியூசிக் டைரக்டர்கள் லக்ஷ்மிகாந்த் பியாரேலால், மறைந்த ஆர்.டி. பர்மன் ஆகியோர் இங்கே ரெக்கார்டிங்குக்கு வரும் போது அவர்கள் இசையமைப்பிலும் டிரம்பெட் வாசித்திருக்கிறார்.

தமது ஜாஸ் ஆன்செம்பிளில் திறமைசாலியான சில கலைஞர்களைச் சேர்த்துக் கொண்டு, தனி நிகழ்ச்சிகளும் நடத்துகிறார் டூபியர்.

"சிந்தசைசர் வந்த பிறகு, ரிதம் இன்ஸ்ட்ருமெண்ட் வாசிப்பவர்களுக்கு வேலையே கிடையாது! இது வருத்தம் அளிக்கக்கூடிய சூழ்நிலை. சிதார் இசையையும், சரோட் இசையையும், ஷெனாய் இசையையும் கூட சிந்தசைசரில் எழுப்பி விடுகிறார்கள். ஒரு ரிதம் பாக்ஸ் இருந்து விட்டால், பத்துக் கலைஞர்களுக்கு வேலை போய் விடுகிறது!" என்கிறார் வருத்தத்துடன்.

பம்பாய்ப் பட உலகில் இத்தனை மோசம் இல்லையாம். அவர்கள் இன்னும் ஒரிஜினல் வாத்ய ஒலிக்கு மதிப்புக் கொடுக்கிறார்களாம்.

"ஏ. ஆர். ரஹ்மானும் என்னுடைய நெருங்கிய நண்பர்தான்!" என்று சொல்லும் டூபியர், "ரஹ்மான் இந்தக் காலத்து இளைஞர். அவருக்கு நவீனக் கருவிகளின் கவர்ச்சி மட்டுமே தெரிந்திருக்கிறது. அதனால்தான் அவர் எலக்ட்ரானிக் இன்ஸ்ட்ருமென்டுகளை மிக அதிகமாகக் கையாளுகிறார்" என்கிறார்.

"பல ஸ்டுடியோக்களில் பியானோவே இல்லை! சிந்தசைசர் இருக்கையில் அதெல்லாம் எதற்கு? என்று யோசிக்கிறார்கள். உண்மையான ஒலி தரும் அழகை நினைத்துப் பார்ப்பதில்லை!"


இந்திய இசை - ஜாஸ் இசை இணைப்பு நிகழ்ச்சி நடத்த வேண்டும் என்பது டூபியரின் விருப்பம்.

காலம் வரட்டும் என்று காத்திருக்கிறார்!



- சித்தார்த்

படம் : கேமரா திருஞானம்



# கல்கி



1994
டிசம்பர் 18
பவ
மார்கழி 3
மலர் : 53
இதழ் : 20

தமிழ்த்திரு நாடு
தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்.

# காங்கிரஸ் தலையில் விழுந்த இடி!


மொட்டை போட்ட என்.டி.ஆர்., வெற்றிக்கு அடையாளமாக எம்.ஜி.ஆர். பாணியில் இரட்டை விரல்களை உயர்த்திக் காட்டினாலும் அது, "இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி" என்ற தேர்தல் வாக்குறுதியை நினைவூட்டுவதாகவும் கொள்ளலாம். பதவி ஏற்ற அரை மணி நேரத்தில் பூரண மதுவிலக்கையும் கொணர்ந்து, அரசின் வருவாயைப் பெருமளவு குறைத்து விட்டு, கிலோ இரண்டு ரூபாய் அரிசி விநியோகத்துக்குத் தேவைப்படும் 1200 கோடி ரூபாயை எப்படி திரட்டுவார் என்பது ஏழுமலையானுக்கே வெளிச்சம். "மனமிருந்தால் மார்க்கமுண்டு" என்கிறார் என்.டி.ஆர். இரண்டு ரூபாய்க்குக் கிலோ அரிசி பெற எல்லோருக்குமே மனம் இருக்கிறது. மார்க்கம் என்.டி.ஆருக்குத் தெரிந்தால் சரி. 83 முதல் 89 வரை இத் திட்டத்தை அவர் அமலாக்கிக் காட்டியிருந்தாலும், இன்று உணவுக் கார்ப்பரேஷன் மாநில அரசுகளுக்கு வழங்கும் அரிசியின் விலையே எக்கச்சக்கமாக உயர்ந்து விட்டிருக்கும் போது, என்.டி.ஆர். அபார சாமர்த்தியம் காட்ட வேண்டியிருக்கும். தலைவலி இது மட்டுமல்ல. மந்திரி பதவிக்கு ஆசைப்படுவோர், பதவி கிடைக்காததால் கட்சிக்குள் கைவரிசை காட்டுவோர் என்று தொடரப் போகும் பல பிரச்னைகளையும் சந்தித்து வெற்றி பெற, மீண்டும் பதவிக்கு வந்துள்ள என்.டி.ஆரை வாழ்த்துவோம்.

கர்நாடகத்தில் ஜனதா தளத்தின் வெற்றி தெலுங்கு தேசக் கட்சியின் வெற்றி போல அத்துணை ஜாஜ்வல்யமாக இராவிட்டாலும் அநேகமாக ஆட்சி அமைத்து விடும் என்றுதான் வந்து கொண்டிருக்கும் தேர்தல் முடிவுகள் கட்டிக்காட்டுகின்றன. இரு மாநிலங்களிலுமே தெலுங்கு தேச, ஜனதாதள ஆதரவு வோட்டுக்கள் என்பதை விட, காங்கிரஸ் எதிர்ப்பு வோட்டுக்கள் என்று கூறுவது பொருந்தும். ஆட்சியிலிருந்த காங்கிரஸ், மக்களை மிகவும் பாதிக்கும் விஷயங்களான விலைவாசி உயர்வு, வேலையில்லா திண்டாட்டம் போன்றவற்றில் கவனம் செலுத்தியிருந்தால் அவர்களை வாக்காளர்கள் வீட்டுக்கு அனுப்பியிருக்கப் போவதில்லை. இவற்றுடன் லஞ்ச ஊழலும் ஆளும் கட்சிக்குள் நிலவிய அநாகரிக உட்பூசல்களும் மக்களை வெறுப்படையச் செய்தன. பிப்ரவரியில் மீண்டும் மாநிலத் தேர்தல்கள் நடக்கவிருப்பதால் காங்கிரஸ் நிறையவே சிந்தித்துத் தன்னைத் திருத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

பொதுவாக வடமாநிலங்கள் காங்கிரஸைக் கைவிட்ட போது கூட தென்மாநிலங்கள் காப்பாற்றியுள்ளது சரித்திரம். ஆனால் இம்முறை தென்மாநிலங்கள் இரண்டுமே காங்கிரஸை இடியாகத் தாக்கியுள்ளன. அதே சமயம் ஆந்திரத்தில் ஒரு பிராந்தியக் கட்சி வெற்றி பெற்றாலும் கர்நாடகத்தில் ஒரு தேசியக் கட்சி முன்னணியில் இருப்பது பெரும் ஆறுதல்.

இந்தத் தேர்தல் முடிவினை மத்திய அரசின் கோட்பாடுகள், செயல்பாடுகள் குறித்து மக்கள் வழங்கிய தீர்ப்பாகக் கொள்ளவே முடியாது. ஆந்திர மக்கள் ராமராவ் முதல்வராக வர வேண்டும் என்று விரும்பியிருக்கலாமே தவிர, நரசிம்மராவ் பிரதமர் பதவியை இழக்க வேண்டும் என்று நிச்சயம் கருதியிருக்க மாட்டார்கள். கர்நாடகாவிலும் மாநில அரசியலே பிரதான பங்கு வகித்துள்ளது. ஆயினும் மத்தியிலே ராவைக் கவிழ்த்து விட்டு பதவிக்கு வர முடியுமா என்று சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருப்பவர்கள், தேர்தல் முடிவுகளைக் காரணம் காட்டி அவருக்கு தர்மசங்கடத்தை நிச்சயம் உருவாக்குவார்கள். ராவ் முன்னெப்போதையும் விட சாணக்கியத்துடன் நடந்து கொள்ள வேண்டிய சமயம் இது.

மத்திய அரசின் சுதந்திரப் பொருளாதாரக் கொள்கைகள் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ள நிலையில், மத்தியில் ஒரு ஸ்திரமற்ற தன்மை நிலவுவது நல்லதல்ல. ராவைக் கட்சிக்குள் எதிர்ப்பவர்கள் தங்களுடைய போக்கு உலக நாடுகளிடையேயும் நிதி நிறுவனங்களிலும் ஏற்படுத்தக் கூடிய பாதிப்பை யோசித்துப் பார்க்கட்டும். ஒரு சோதனையான காலகட்டத்தில் கட்சிக்குள் இருப்பவர்கள் கைகொடுப்பதுதான் கடமையே தவிர, காலை வாரி விடுவதல்ல. கட்சியைப் பலப்படுத்தி பிப்ரவரி தேர்தல்களிலேனும் இழந்த செல்வாக்கைத் திரும்பப் பெற முழு முயற்சி செய்வதே இன்று காங்கிரஸ்காரர்களின் இலக்காக இருக்க வேண்டும். மாநிலத் தேர்தல்களுடன் சேர்த்து மத்திய அரசும் இடைத் தேர்தலைச் சந்திக்கும் நிலைமையை உருவாக்கி விட வேண்டாம்.


இப்ப நான் உதைக்கிறேன் பாரு!
வர்த்தகர்கள் கடையடைப்பு.
டிசம்பர் 15 எதிர்கட்சிகள் போராட்டம்.
பொதுஜனம்
அரசு ஆதரவு பந்த்.
நான்தான் சிறப்பன்.. பேசுறேன்...ம்... ரெடியா? போடுங்க தோப்புக்கரணம்... இன்னொருத்தருக்கு டி -க்கரணம் போடணும்... யாராவது என்னை மாதிரி மீசை வெச்சிருக்கீங்க? மொத்த அணை மட்டத்திலேயா...
பாக். உளவுத் துறை
இந்திய ராணுவ ரகசிய ஆவணங்கள்
டா டா... பை பை...
இந்திய ராணுவ வீரர்கள்

# 'சிக்கு புக்கு ரயிலு' பிறந்த இடம்!

தன்னுணர்வுப் பாடல்கள். பிழைப்புத் தேடி பல மாவட்டங்களிலிருந்து சென்னையில் வந்து குடியேறிய மக்கள், குடிசைகள் கட்டி வசிக்கத் தொடங்கினார்கள். இந்தச் சேரிகளில் வாழ்வோர் அன்றாடம் தாங்கள் கண்ட கேட்ட, விஷயங்கள் குறித்தும் விரக்தி, வேதனை, காதல் தோல்வி, தலைவர் துதி என்று பல உணர்வுகளையும் 'கானா'வுக்குள் கொண்டு வருவார்கள். இந்த கானாக்களுக்கு 30, 35 வருட சரித்திரம் இருக்கிறது'' என்கிறார் கபிலன்.

**சிக்குபுக்கு சிக்குபுக்கு ரயிலு**
**ஓடுது நாகூர் மெயிலு**
**ஆடலாம் அஞ்சுபேர் மெயிலு (சீட்டாட்டம்)**
**மாட்டிக்கிட்டா சென்ட்ரல் ஜெயிலு**

• • •

**மாம்பழம் விக்கற கண்ணம்மா - உன்**
**மனசுக்குள்ளே என்னம்மா**
**யாருமில்ல கண்ணம்மா - இந்த**
**மாமனைக் கட்டிக்கச் சம்மதமா?**

'இவையெல்லாம் எந்த 'செந்தமிழ்' இலக்கியத்தில் வருகின்றன?' என்று யோசிக்காதீர்கள். இன்று டீக்கடைகளிலும், பஸ் ஸ்டாண்டு, ரிக்ஷா ஸ்டாண்டுகளிலும் கொச்சையாக, காது கொண்டு கேட்கச் சகிக்காத படி ஒலிக்கும் 'கானா' என்று சொல்லப்படும் ஒருவகைப் பாடல் இனத்தின் உண்மையான வடிவத்தினுடைய சாம்பிள்தான் மேலே இருப்பது.

'கானா'வில் ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டம் வாங்கியிருக்கும் கபிலன், இப்பாட்டுருவம் இன்று கேவலமாகக் கையாளப் படுவது குறித்துப் பெரிதும் வருத்தப்படுகிறார். அவர் பேட்டி இது :

'' 'கானா' என்றால் இந்தியில் பாட்டு என்று பொருள். தமிழிலும் 'கானம்' என்றால் பாட்டுதான். வடநாட்டில் 'கவ்வாலி' என்று சொல்லுவார்கள். சுற்றி பத்துப் பேர் அமர்ந்திருக்க, நடுவில் பாடலுடன் பெண்ணின் நடனம் நடக்கும். நகரத்துச் சேரிகளில் புழங்கும் கானாக்களில் பத்துப் பேர் வட்டமாக உட்கார்ந்து பாடுவார்கள்; டான்ஸ் கிடையாது.

'' 'கானா' என்பது


• கபிலன்

யாராவது ஒருவர் வீட்டில் மரணம் சம்பவித்து விட்டால் இறந்தவர் உடலுக்கு அடுத்த நாள்தான் இறுதி சடங்கு செய்ய முடியும் என்கிற நிலையில் இரவில், அந்த வீட்டு வாசலில் இவர்களாகவே போய் உட்கார்ந்து பாடுவதுதான் கானா. 'வத்திப் பெட்டி'தான் பக்கவாத்யம். இப்போது டோலாக்கு (டோல் டொப்பி) வந்திருக்கிறது.

''முன்பெல்லாம் இழவு வீட்டில் காவடிச் சிந்து, பட்டினத்தார், குணங்குடி மஸ்தான் பாடல்களைப் பெரியவர்கள் பாடிக் கொண்டிருந்தார்கள். காலப் போக்கில் இவை மறைந்து இளவட்டங்கள் பாடும் கானாக்கள் வந்திருக்கலாம். ஆனால் இப்போதும் பட்டினத்தார், நாகூர் அனிபா பாட்டு ஒன்றிரண்டு பாடிய பிறகுதான் தங்கள் சொந்த சரக்குக்குத் தாவுவார்கள்'' என்கிறார் கபிலன்.

கானா 'பாடுபவர்களுக்கு, கேட்பவர்கள் தரும் உற்சாகம்தான் பலம். சுருதி ஏற, ஏற, 'ஆகா, சபாஷ்!' என்று பாடுபவருக்கு பாராட்டுக்கள் வரும். 'அப்படிப் பொரட்டித் தூக்குமா' என்று அடி எடுத்துக் கொடுப்பார்கள். இறந்தவர் குடும்பத்துக்கு ஆறுதல் சொல்வது போல் தத்துவங்கள் தயக்கமில்லாமல் வந்து விழும். இந்தப் பாடல்களுக்கு, எழுத்து வடிவம் எதுவும் கிடையாது. இடத்திற்குத் தகுந்த மாதிரி இவர்களாக்வே இட்டுக் கட்டிப் பாடுவதுதான்.

''நாட்டுப்புறப் பாடல்கள் ஓரளவுக்கு மரபு இலக்கியம் சார்ந்தவை. எதுகை, மோனையை எதிர்பார்க்கலாம். கானா, நகரத்தை அடிப்படையாகக் கொண்டது. இதில் பெண்களைக் கிண்டல் செய்யும் மெலிதான நகைச்சுவை உணர்வுகள் உண்டு. ஆனால் நிச்சயம் இப்போது கானா என்ற பெயரில் வந்திருக்கும் சில பாடல்களைப் போல்

ஆபாசம் நிறைந்ததல்ல. கானாவில் சமீப காலமாகப் பலர் கொச்சைப்படுத்தி வருகிறார்கள்."

**செ**ன்னையில் சிறந்த கானா பாடகர்கள் சுமார் ஐம்பது பேர் இருக்கிறார்களாம். இவர்களில் சீனியர், ஆயிரம் விளக்கு செல்வம். இவர் தவிர, புளியந்தோப்பு பழனி, வியாசர்பாடி உலகநாதன் ஆகியோரின் கானா கேசட்டுகளும் ஏராளமாக விற்பனையாகின்றன. பௌர்ணமி தோறும் சுடுகாட்டில்(?) போட்டிகள் நடத்திக் கோப்பைகளும் கொடுக்கப்படும்!

"இந்தப் பாடல்கள் சினிமாவுக்குள் நுழைந்தது எப்படி?"

"சமுதாயத்தில் அடித்தளத்திலுள்ள குடும்பங்களிலிருந்து இளைஞர்கள் கல்லூரிகளுக்குள் காலெடுத்து வைத்த போது, காம்பவுண்டு சுவர்களின் மீது உட்கார்ந்து லெக்சரர்களைக் இண்டல் செய்வதற்கும் பஸ் ஸ்டாப்பில் மாணவியரைக் கவர்வதற்கும் இந்த கானா வடிவம் பயன்பட்டது.

" 'சிக்குபுக்கு சிக்குபுக்கு ரயிலு, சிக்கிட்டா பாரு மயிலு என்றும் சூரிதார்லே, நீ ஸூப்பர்; தாவணியிலே நீ பாப்பர்" என்பதாகவும் பெண்களை லேசாகக் இண்டல் செய்தனர்.

"இதே இளைஞர்கள் சினிமாவில் உதவி இயக்குனர்களாகப் போகும் போது, கானா சினிமாவுக்கும் சென்றது. டேப் ரிகார்டரும் கையுமாக சேரிகளில் அலைந்தார்கள் இயக்குனர்கள். 'ஐஸா லக்கடி மெட்டுதானுங்க, - பாட்டுலே நான் கெட்டிக்காரங்க' என்ற 'அமரன்' படப்பாடலைத் தொடர்ந்து, தலைவாசல், இந்து, மற்றும் நிறையப் படங்களில் 'கானா' வந்து விட்டது."

**க**பிலனின் ஆராய்ச்சிப்படி கானா பாட்டு பாடுபவர்கள் அறுபது சதவீதம் அ.தி.மு.கவினராம். மீதி நாற்பது சதவீதம் சினிமா நடிகர்களின் விசிறிகள். குறிப்பாக ரஜினி.

"கானா'வின் எதிர்காலம்?"

"சமுதாயத்தில் பெரிய மனிதர்களின் அங்கிகாரம் இல்லாததால் இன்னமும் நீர்த்துப் போகலாம்!" என்கிறார் கபிலன்.

— ப்ரியன்

## கல்யாணத்துக்கும் கானா!



• செல்வம்

**ஆ**யிரம் விளக்கு செல்வத்தின் இரண்டு கானா கேஸட்டுகள் வெளியிடப்பட்டுள்ளன. மூன்றாவதைப் பொங்கலுக்கு ரிலீஸ் பண்ணப் போகிறேன்" என்கிறார் செல்வம்.

"கானா'வில் ஆபாசம், விரசம், எதுவும் இல்லை! ஆனா துட்டு சம்பாதிக்கிற ஆசைலே சில பேர் ஆபாசமாகப் போட்டு கச்சடாப் பண்ணிட்டாங்கலார்" என்று எரிச்சலும் வருத்தமுமாகச் சொல்கிறார்.

இருபத்தைந்து வருடமாக கானா பாடிக் கொண்டிருக்கும் செல்வம், "டி.ஆ. சைக்கிள் வேலையை இதுக்காகவே விட்டேன்" என்கிறார். இன்று மாதம் சுமார் இருபது கானா கச்சேரிகள் செய்கிறார். சோகத்திலிருந்து திசை திருப்ப 'கானா'க்கள் பயன்பட்டது போய், இப்போது பிறந்த நாள், கல்யாணம் என்று சுப நிகழ்ச்சிகளுக்கும் 'கானா' கச்சேரிகள் நடக்கின்றனவாம். தற்போது ஆர்மோனியம், தபலா, டோலக்கு என்று பக்கவாத்தியங்களின் எண்ணிக்கையும் கூடிவிட்டது.

**சி**ல வீடுகளில் "செல்வம் அண்ணே.... பொண்டாட்டி ரொம்ப 'ரவுசு' பண்ணறா; கொஞ்சம் அட்வைஸ் பண்ணறா மாதிரி பாடேன்', என்று கேட்டுக் கொள்வோரும் உண்டு.

"பாடும் போதே புதுப் புதுச் சரக்குகளைச் சேர்த்துக்குவேன்" என்று சொல்கிறார் செல்வம்.

செல்வத்தின் பெரிய வருத்தம் தமிழ் சினிமாக்காரர்கள், இவருடைய கேஸட்டில் வந்துள்ள பாட்டுக்களைக் காப்பியடிப்பதுதானாம். "ஜல்லிக்கட்டு காளையில் 'அன்னக்கிளி சேலக்கட்டி' மற்றும், தாய் மாமன், படத்தில் 'வந்தவாசி மானா மதுரை' போன்ற பாடல்கள் என்னோட கானாவைப் பாத்துக் காப்பி அடிச்சதுதாங்க" என்று சொல்லும் செல்வம், இதுவரை எந்த இசையமைப்பாளரையும் நேரில் சந்தித்து வாய்ப்புக் கேட்டதில்லையாம்.

தமிழ் நாடு மட்டுமல்லாமல், பெங்களூர், பம்பாய் போன்ற இடங்களுக்கும் சென்று கானாக் கொடியை நாட்டியிருக்கிறார் இவர்.

**FILM INDUSTRY IS A PLACE WHERE INFERIOR PEOPLE HAVE A WAY OF MAKING SUPERIOR PEOPLE FEEL INFERIOR.**

- ஹாலிவுட் திரையுலகம் பற்றி ஒரு பிரமுகர்.

எனது கலையார்வத்தின் நதிமூலத்தையும், அது படிப்படியாக வளர்ந்து, ஆலவிருட்சமாகப் பரிணாம வளர்ச்சி பெற்றதையும் நான் சற்று திரும்பிப் பார்க்க விரும்புகிறேன்.

நன்னிலம் போர்டு ஹைஸ்கூலில் எட்டாவது வகுப்பு படித்துக் கொண்டிருந்த நேரம். படிப்பதைத் தவிர ஏதாவது பரபரப்பாகச் செய்ய வேண்டுமென்கிற ஒரு தாகம்! ஒரு பசி; ஒரு வெறி.

என் வயதையொத்த நண்பர்கள் ஒன்றாகச் சேர்ந்து, வரவிருந்த சிவராத்திரி தினத்தன்று வீட்டுத் திண்ணையிலே ஒரு நாடகம் போட வேண்டுமென்று தீர்மானித்தோம். கதை - வசனம் நான். எதிர் வீட்டு நாகராஜன் கதாநாயகன். மற்றபடி இரண்டு மூன்று பேர் நடிகர்கள். கதாநாயகி கிடையாது. 'விக்' வைத்துப் பெண் வேடம் போட்டு நாடகம் நடத்துகிற அளவுக்குக் கையிலே காசு கிடையாது.

பட்ஜெட் போட்டுப் பார்த்தோம். திரைச் சீலைகள் கட்டித் தெருத் திண்ணையை மேடையாக ஆக்குவதற்கு ஒவ்வொரு நடிகன் வீட்டிலிருந்தும் ஒரு பெட்ஷீட், ஜமுக்காளம் கொண்டு வர வேண்டும். மற்றபடி செலவினங்கள் என்று பார்த்தால் ஒரு பெட்ரோமாக்ஸ் விளக்கு மட்டும் வேண்டும்.

பெருமாள்கோயிலில் ஒரு பெட்ரோமாக்ஸ் விளக்கு இருக்கிறது; அர்ச்சகரிடம் சொல்லி எப்படியாவது அதைக் கேட்டு வாங்கிக் கொள்ளலாம். இதற்கு எதிர் வீட்டு நாகராஜன் உத்தரவாதம் எடுத்துக் கொண்டான். ஆனால் மூன்று மணி நேரம் பெட்ரோமாக்ஸ் விளக்கு எரிவதற்கு ஒரு பாட்டில் அல்லது இரண்டு பாட்டில் மண்ணெண்ணெய் வேண்டியிருக்கும். இது ஒரு பெரிய செலவினமாகக் கருதப்பட்டது. இந்தச் செலவை எப்படி சந்திப்பது?

The most positive thing in film making is the negative என்று சொல்வார்கள். அதே போல் எங்களுக்கு The fuel for the theatrical urge was kerosene!

தெருவிலுள்ள எல்லா வீட்டுக்காரர்களிடமிருந்தும் மண்ணெண்ணெய் சேகரிப்பது என்று முடிவு எடுக்கப்பட்டது. 'சிவராத்திரியை முன்னிட்டு இரவு கண் விழித்திருக்க நாங்கள் தெருத் திண்ணையில் நாடகம் போடப் போகிறோம்' என்று சொல்லி, வீடு வீடாகச் சென்று, இரண்டு பாட்டில் மண்ணெண்ணெய் சேகரித்தாகி விட்டது.

அடுத்த இரண்டு நாட்களில் கதை வசனம் ரெடி! ஆற்றங்கரை மணற்பரப்பில், மாலை நேரங்களில் தினம் ஒத்திகை. நாடகத்தின் தலைப்பு மட்டும் நினைவிருக்கிறது. "பஞ்சாமியின் கனவுகள்."

நாடக அரங்கேற்ற தினம் வந்தது. காலையிலிருந்தே நாங்கள் மிகவும் பிசி.

## கே. பாலசந்தர்

எனது வீட்டிலிருந்து ஏழெட்டு வீடுகள் தள்ளியிருந்த ஒரு நண்பனின் வீட்டுத் திண்ணைதான் நாடக மேடை. நாடக மேடையை அலங்கரிக்க அவரவர் வீடுகளிலிருந்து பெட்ஷீட்டுகள் வந்து இறங்கின. எனது பங்காக நானும் இரண்டு பெட்ஷீட்டுகளைக் கொண்டு செல்ல வேண்டும். அதுவும் எனது தந்தைக்குத் தெரியாமல் அவற்றைக் கடத்திச் செல்ல வேண்டும்.

நாங்கள் நாடகம் போடவிருப்பதும் அதில் நானும் நடிக்கவிருப்பதும் எதுவுமே என் தந்தைக்குத் தெரியாது; தெரியவும் கூடாது. தெரிந்தால் தோலை உரித்து விடுவார்! "படிக்கிறதை விட்டுட்டு என்னடா கூத்து வேண்டிக் கிடக்கு?" என்று கத்துவார். நடுக்கூடத்தில் சாய்மான நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். அவருடைய பார்வைக்குத் தப்பாமல் 'பெட்ஷீட்'டுகளை எடுத்துக் கொண்டு வெளியே செல்ல முடியாது. "என்ன எடுத்திட்டுப் போறே?" என்று கேட்பார். உண்மையைச் சொன்னாலும் தொலைந்தேன்; பொய் சொல்லி மாட்டிக் கொண்டாலும் அதே கதிதான்!

தெருவையொட்டியிருக்கிற எங்கள் வீட்டு அறை ஜன்னலின் கதவைத் திறந்து, ஜன்னல் கம்பிகளின் வழியாக இரண்டு பெட்ஷீட்டுகளையும் வெளியே தள்ளி விட்டு, வெறும் கையை வீசிக் கொண்டு நடுக் கூடத்திலிருக்கும் தந்தையைக் கடந்து சென்று, தெருவுக்கு வந்து, ஜன்னலின் வழியாக வெளியே வந்து விழுந்து கிடக்கும் பெட்ஷீட்டுகளை எடுத்துக் கொண்டு, திரும்பிப் பார்க்காமல் நாடகம் நடைபெறவிருக்கின்ற வீட்டுத் திண்ணைக்கு ஓடினேன்.

நாகராஜன் காத்திருந்தான்; திண்ணையின் மூன்று பக்கங்களுக்கும் திரைச் சீலைகளாக பெட்ஷீட்டுகளைக் கட்டி, ஒரு கயிறு கொண்டு இழுத்தால் திரை திறந்து கொள்வது மாதிரி முன்பக்கத்துத் திரையாக ஒரு நல்ல பெட்ஷீட்டைக் கட்டி மேடையமைக்க, எங்களுக்கு இரண்டு மணி நேரம் பிடித்தது.

இந்த வீட்டைக் கடந்து செல்லும் ஒவ்வொருவரும் உள்ளே நுழைந்து மேடையைப் பார்த்து விட்டு... "எத்தனை மணிக்குப்பா டிராமா ஆரம்பம்?" என்று கேட்டு விட்டுப் போவார்கள். எங்களுக்குப் பெருமை பிடிபடாது.

" 'டாண்'ணு ராத்திரி ஒன்பது மணிக்கு ஆரம்பம்" என்று சொல்லிச் சொல்லி அனுப்புவோம்.

இரவு ஏழு மணிக்கு எங்களுக்கு மேக்கப் நடந்தது. ஒருவருக்கொருவர் மேக்கப் போட்டுக் கொண்டோம்! பான் கேக் ஏது? எல்லாம் வெள்ளை டால்கம் பவுடர்தான். வாய்க்கால் ஓரங்களில் வளர்ந்து கிடக்கும் கற்றாழையிலிருந்து அந்த நாரைப் பிரித்து எடுத்து, அதை வெவ்வேறு சைஸ்களில் மீசைகளாகவும் தாடிகளாகவும் வெட்டி, நூலினால் தைத்து வைத்திருந்தோம். கற்றாழை நார் வெள்ளை வெளேரென்று இருக்கும். அதில் கறுப்பு மையைத் தடவினால் இளவயதுக்காரர்களுக்கு மீசைகளாகப் பயன்படுத்த முடியும்.

**ம**ணி ஒன்பதை நெருங்க நெருங்க கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர ஆரம்பித்தது. ஆறு வயது, ஏழு வயதுப் பொடிசுகளும் தெருப் பாட்டிமார்களும்தான் அதிகம் இருந்தார்கள். அவர்கள் உட்கார்ந்து பார்ப்பதற்கு வசதியாகத் தெருவில் பாய்கள் போடப்பட்டிருந்தன. ஒன்பதரை மணியளவில் நாடகத்தைத் துவக்கினோம்.

முதலில் பெட்ரோமாக்ஸ் விளக்கு மக்கர் செய்தது; அதைச் சரிசெய்த பிறகு மீண்டும் துவக்கினோம். பெயர்ப் பட்டியல் எல்லாம் படித்து முடித்தாகி விட்டது. முன் பக்கத்துத் திரையை இழுக்க வேண்டும். பெட்ஷீட்டைக் கட்டியிருந்த சணல் கயிறு எங்கோ மாட்டிக் கொண்டது. திரை விலக மறுத்தது. திரைக்குள்ளே எனக்கும் நாகராஜனுக்கும் பெரிய வாக்குவாதம்.



• என். ஆர். கைலாச அய்யர் (கே. பால சந்தரின் தந்தை)

"கடவுள் வாழ்த்துப் பாடிட்டு, அப்புறமாத்தான் ஆரம்பிச்சிருக்கணும்; அது விட்டுப் போய் விட்டதனால்தான் இவ்வளவு தடங்கல்! நான் சொன்னா நீ கேட்டாத்தானே" என்று நாகராஜன் என்னைப் பார்த்துக் கத்தினான்.

"சரிடா! இப்பத்தான் பாடேன். மறுபடியும் கடவுள் வாழ்த்தோட ஆரம்பிப்போம்" என்று நான் பதிலுக்குக் கத்தினேன்.

பள்ளியில் பாடப்படும் கடவுள் வாழ்த்து சுலோகத்தை நாகராஜன் பாடினான். மீண்டுமொருமுறை பெயர்ப் பட்டியலை நான் படித்தேன். திரை இழுக்கப்பட்டது; என்ன ஆச்சரியம்! இந்த முறை திரை அழகாக விலகியது.

**மு**தல் காட்சி எனக்கும் நாகராஜனுக்கும்தான். அவன் கதாநாயகன். பள்ளியில் படிப்பவன்; நான் அவனுடைய தந்தை; ஒரு விவசாயி! கற்றாழை நாரினால் ஆன வெள்ளை மீசையை வைத்துக் கொண்டு, தலைக்கெல்லாம் வெள்ளை பவுடரை அடித்துக் கொண்டு அரைக்கை சட்டையோடு கையில் ஒரு வாக்கிங் ஸ்டிக்.

தந்தைக்கும் மகனுக்கும் ஏதோ வாக்குவாதம் நடப்பதைப் போன்ற காட்சி; வாக்குவாதம் தொடங்குகிறது. எனக்கு நான் எழுதிக் கொண்ட வசனங்கள் எல்லாம் சற்று ஹாஸ்யமானவை. நான் பேசும் வசனங்களுக்கெல்லாம் பொடியன்கள் கைதட்டி ஆரவாரம் செய்கிறார்கள்.

வசனங்களைப் பேசிக் கொண்டே வந்த நாகராஜன் சற்றே தலையைக் குனிந்து கொண்டு என் கவனத்தை ஈர்த்து, மெல்லிய குரலில், "பாலு! எதிர் வீட்டுத் திண்ணை கிட்டே யார் நிக்கிறாங்க பாரு" என்று சொல்ல... நான் அந்தப் பக்கம் பார்க்க... என் இரத்தமே உறைந்து போய் விட்ட மாதிரி ஓர் உணர்வு... என்னையே கோபாவேசத்துடன் பார்த்துக் கொண்டு நின்றது சாட்சாத் என் தந்தையேதான்!

எனது நா உலர, வார்த்தைகள் ஏதும் வராதபடி, பேச வேண்டிய வசனங்களையும் மறந்து உடல் நடுங்கி நிற்க, எனது தந்தை 'திபுதிபு'வென்று மேடை மீது ஏறி, "என்னடா நாடகம் இது? கூத்தடிக்கிறீங்க; ராத்திரி மணி பத்தரை ஆகுது; வீட்டுக்கு வா; உன் தோலை உரிக்கிறேன், படவா" என்று கத்தி விட்டு என் கையைப் பிடித்துத் தரதரவென இழுத்துக் கொண்டே போனார்.

எனது வெள்ளை மீசையைக் கூட எடுக்க மறந்தவனாக, பேரிடியால் தாக்கப்பட்டு, நடைப்பிணமாக அவமானத்துடன் அவர் பின்னால் சென்றேன்.

கடந்த ஒரு மாதமாக நடந்த ஏற்பாடுகள் அனைத்தும் வீண். நாடகம் குறைப்பிரசவமாயிற்று. 'பஞ்சாமியின் கனவுகள்' விடியற்காலை நேரத்துக் கனவுகளாகச் சிதறிப் போயிற்று. என் தந்தையின் மீது எனக்குப் பெரும் கோபம் வந்தது.

அப்படியொன்றும் கலாரசனை இல்லாதவரல்ல என் தந்தை. இரவு நேரங்களில் எனது மூத்த சகோதரியை பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டு, "அம்ப நீ இரங்காயெனில் புகலேது' அடாணா ராகக் கீர்த்தனை பாடேன்" என்று பாடச் சொல்லிக் கேட்பார். 'குழந்தை எவ்வளவு நல்லாப் பாடறா பாரு' என்று ஆனந்தக் கண்ணீர் வடிப்பார்!

கர்நாடக சங்கீதத்தில் அவருக்கு அத்தனை ஈடுபாடு உண்டு.

செம்பை வைத்தியநாத பாகவதரின் பரம விசிறி எனது தந்தையார்; நன்னிலம் வட்டாரத்தில் எங்கு அவருடைய பாட்டுக் கச்சேரி நடந்தாலும் எனது தந்தையாருக்கு அவர் சொல்லி அனுப்புவார். முதல் வரிசையில் உட்கார்ந்து கைலாசய்யர் கச்சேரியைக் கேட்டு ரசித்தாலே செம்பைக்கு மிகவும் உற்சாகமாக இருக்கும். அப்படிப்பட்ட கலாரசனை உள்ளவருக்கு, என்னுடைய கலையார்வத்தில் கொஞ்சம் கூட நம்பிக்கையில்லையே என்றுதான் அந்தச் சின்ன வயதில் நான் மிகவும் வருத்தப்பட்டேன்.

எங்களது உறவினர் - மாடி வீட்டுப் பாட்டி ஒருவர் - போகிறபோக்கில் என் வீட்டிற்குள் நுழைந்து என் தந்தையிடம், "என்னடா கைலாஸா? உன் புள்ளை நாடகம் போட்டுண்டிருக்கானே! போய்ப் பார்க்கலியா!" என்று கோள்மூட்டி விடுகிறோம் என்று தெரியாமலேயே என் தந்தையிடம் சொல்லி விட்டுப் போயிருக்கிறார். பின்னால் என் தாயார் சொல்லித்தான் இந்த விஷயம் எனக்குத் தெரிந்தது.

சிம்மம் போன்ற எனது தந்தையின் கடுமையான கெடுபிடிகளுக்கு முன்னே என் கலையார்வம் சிதைந்து சின்னாபின்னமாகி, செத்துப் போயிருக்க வேண்டும். ஆனாலும் என் கலைத்தாகம் செத்துப் போக மறுத்தது. மீண்டும் மீண்டும் சந்தர்ப்பங்களை எதிர் பார்த்துக் கொண்டேதான் இருந்தது. அவ்வப்பொழுது மீண்டும் துளிர்விடும்.

"வருஷம் பூராவுமா கூத்து நாடகம்னு படிப்பை விட்டுட்டுச் சுத்தறான்? ஏதோ வருஷத்திலே ஒருநாளைக்குக் குழந்தை ஆசைப் பட்டு டிராமா போடறேன்னு போடறான்! அவனுக்கு இதெல்லாம் வரும் போல இருக்கு. நீங்க என்னடான்னா குருவிக் கூட்டைக் கலைக்கிற மாதிரி அதைப் போய்க் கலைச்சிட்டு வந்து நிக்கிறீங்களே!" என்று அன்று இரவு என் தாயார் எனக்காகத் தந்தையிடம் வரிந்து கட்டிக் கொண்டு சண்டை போட்டதுதான் மிகப் பெரிய ஆறுதலும் எனக்குக் கிடைத்த முதல் விருதுமாக அமைந்தது.

பிற்காலத்தில் நாடகத் துறையில் எனக்குக் கிடைத்த பெருமைகளையும் திரையுலகில் எனக்குக் கிடைத்த புகழ்மாலைகளையும் எனது தாயார் பார்த்து ஆனந்தக் கண்ணீர் வடித்த நாட்கள் பல. ஆனால் எனது தந்தை யார் காலமான போது "நான் ஒரு குமாஸ்தா" - A.G. ஆபீஸில்!

'நான் பெற்ற விருதுகள், நினைவுப் பரிசுகள் இவைகளடங்கிய எனது வீட்டின் வரவேற்பறையை எனது தந்தையார் இருந்து பார்க்கவில்லையே' என்கிற மனக்குறை எனக்கு எப்போதும் உண்டு.

அடுத்த தடவை நாடகம் போடுவதைப் பற்றி நாங்கள் ஆலோசனை செய்து கொண்டிருந்த போது, எதிர்வீட்டு நாகராஜன் சொன்னான் : "டேய் பாலு! ரெண்டு விஷயம் முடிவு பண்ணிக்கனும்; அடுத்த நாடகம் போடறதுன்னா உங்கப்பா எங்கேயாவது வெளியூர் போயிருக்கனும்; இரண்டாவது... 'கனவுகள்'ன்னு வர மாதிரி தலைப்பெல்லாம் நாடகத்துக்கு வைக்கக் கூடாது!"

எதிர்வீட்டு நாகராஜன் இன்றைக்கு என் சம்பந்தி! ஆம்! நாகராஜனுடைய மகள்தான் எனது மருமகள் கிதா. எனது மகன் பாலகைலாஸத்தின் மனைவி.

எங்களுக்கு ஒரு பேத்தி பிறந்து சமீபத்தில் குழந்தைக்குத் தொட்டில் போடுகின்ற அந்த நல்ல நேரத்தில் நாகராஜனும் நானும் இந்தச் சம்பவத்தை அசைபோட்டுப் பார்த்துக் கொண்டோம்!

(தொடரும்)

# பார்க் டவுன்
## பெனிபிட் பண்ட் லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம். துவக்கம் 1985 Post Box No : 2806
333, தங்க சாலை, (கந்த கோட்டம் அருகில்) பார்க் டவுன், சென்னை - 3 போன்: 582676, 564334

கிளை அலுவலகங்கள் : 2 கிழக்கு மாடவீதி, திருவான்மியூர், சென்னை - 41 போன்: 415542
P-995, இரண்டாவது அவென்யூ, 12-வது மெயின்ரோடு ஜங்ஷன், அண்ணாநகர், சென்னை - 40 போன் : 6282626



### பிக்சட் டிபாசிட்

| 46 நாள் | 90 நாள் | 6 மாதம் | 1 ஆண்டு | 2 ஆண்டு | 3 ஆண்டு | 4 ஆண்டு | 5 ஆண்டு ★ |
|---|---|---|---|---|---|---|---|
| 13% | 14% | 15% | 17% | 18% | 18.5% | 19% | 20% |

**21%** 5 வருடங்கள் ரூ.50,000/- அதற்கு மேலும்

### PB பாண்டு

| முதலீடு | காலம் | திரும்பப் பெறும்தொகை |
|---|---|---|
| ரூ.25,000 | 60 மாதம் | ரூ.70,000 |

### குழந்தைகள் கல்வி நலத்திட்டம்

L.K.G. முதல் கல்லூரி தொடக்கம் வரை

வைப்புத் தொகை ரூ. 5,100/-

3-ஆம் ஆண்டு நிறைவிலிருந்து தொடர்ந்து 12 ஆண்டுகள் ரூ.500/- பெறலாம். திட்ட டெபாசிட் காலத்திலிருந்து 16, 17-வது ஆண்டுகளில் தலா ரூ.1,000/- வீதமும், 18-ம் ஆண்டு துவக்கத்தில் ரூ.75,000/-ம் வழங்கப்படும்.

நலத்திட்டத்தின் 5% மாணவர்களுக்கு +2 அரசுத் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் ரூ.25,000/- பரிசாக ஒவ்வொருவருக்கும் நிதி நிறுவனம் வழங்கும்.

திட்டத்தின் பயனை உங்கள் மழலைச் செல்வங்களுக்கு வழங்கி
மன நிம்மதி பெறுவீர்! மகிழ்ச்சி அடைவீர்!!

### கனகதாரா டிபாசிட்

ரூ.50,000/-
முதலீடு செய்வீர்
10ஆம் ஆண்டு முடிவில்
ரூ.50,000/- பெறுவீர்
அடுத்த 20ஆம் ஆண்டு
முடிவில்
ரூ.1 கோடி பெறுவீர்

### காமதேனு மாபெரும் திரும்பப் பெறும் திட்டம்

| டிபாசிட் திட்டம் 15 ஆண்டுகள் | 5-ம் ஆண்டு நீங்கள் பெறும் தொகை | 10ம் ஆண்டு நீங்கள் பெறும் தொகை | 15ம் ஆண்டு பெறும் தொகை |
|---|---|---|---|
| Rs.6,320 | Rs.6,000 | Rs.6,000 | Rs.56,320 |

### வெகுமதி முதலீட்டுத் திட்டம் - II

ரூ.3450/- செலுத்துவீர்.
252 மாதங்கள் நிறைவில்
ரூ.2 லட்சம் பெறுவீர்.

### செல்வக்களஞ்சியம்

| டிபாசிட் | காலம் | வருவாய் |
|---|---|---|
| Rs.7,500 | 15 Yrs | Rs.1,25,000 |
| Rs.9,000 | | Rs.1,50,000 |

### பொற்குவியல் திட்டம்

| டிபாசிட் | காலம் | வருவாய் |
|---|---|---|
| மாதா மாதம் ரூ.100/- | 25 Yrs | Rs.3,00,000 |

### மறு முதலீட்டுத் திட்டம்

உங்கள் தொகை 45 மாதங்களில் இரட்டிப்பு ஆகும்

| டிபாசிட் | 12 மாதம் | 24 மாதம் | 45 மாதம் | 60 மாதம் |
|---|---|---|---|---|
| Rs.1,000 | Rs.1,184 | Rs.1,430 | Rs.2,000 | Rs.2,535 |

**பென்ஷனர் நலத்திட்டம் 20% P.a.**
ரூபாய் 10 ஆயிரமும் அதற்கு மேலும்: காலம் 1 ஆண்டு
வயோதிகர், விதவைகள், ஊனமுற்றோர், கல்வி மற்றும் அறக்கட்டளை பயன்பெறலாம்.

**சேமிப்பு திட்டம்**
**10% P.a.**

**தங்க நகை கடன்**
Rs. 3,000 PER 10 GRAM
வீடுகளின் பேரில் கடன் வழங்கப்படும்.
(உச்ச வரம்பில்லை)

ஆலோசகர்:
**P. பாலசுப்ரமணியம், B.Sc.**
முதன்மை அறங்காவலர்
கந்தகோட்டம், சென்னை - 3.

ஒவ்வொரு மாத வட்டிக்கான காசோலை மொத்தமாக டெபாசிட் செய்யும்போதே வழங்கப்படும்.
* தனிபோனஸ் டெபாசிட் திட்டம் 20%
குறைந்த அளவு ரூ.20,000 டெபாசிட் காலம் 5 ஆண்டுகள்.

இயக்குனர் குழுத் தலைவர்:
**R. விவேகானந்தன், B.Com.**

ரூ. 5/- செலுத்தி பங்குதாரர் ஆவீர். ☐ சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டும் ☐ வெள்ளி விடுமுறை

# மோகமுள்

கடைசியில் வந்து விட்டது! 'அற்புதமான தமிழ் சினிமா' என்று நெஞ்சு நிமிர்த்திச் சொல்லிக் கொள்ளும் அளவுக்கு ஒரு திரைப்படம் வந்தே விட்டது!

பொருந்தாக் காதல் பற்றிய கதையென்றாலும் எள்முனை அளவு கூட விரசம் இல்லாமல் சொல்லியிருக்கிறார்கள் என்பது சாதனை.

நாவலைப் படித்தவர்கள் திரைக்கதையின் மாற்றங்களை உறுத்தலாகக் கருதலாம். ஆனால், பின்புலம், மொழி, உடை, கலை என்று ஒவ்வொரு விஷயத்திலும் பக்தி சிரத்தையுடன் கவனம் செலுத்தி, அவ்வளவையும் கேமராவால் உறிஞ்சி எடுத்துப் பிழிந்து கொடுத்திருக்கிறார்கள்.

காவிரி ஆறு, கர்நாடக இசை என்ற இரட்டை நூலிழை படத்தில் ஊடுருவி நிற்கிறது. அற்புதமான இசையில் சொக்கிப் போய் நம்மையறியாமல் இமைகள் மூடிக் கொள்ள, 'ஐயோ! படத்தைப் பார்க்காமல் இருக்கிறோமே' என்று திடுக்கிட்டுக் கண்திறந்து நம்மை நாமே நொந்து கொள்கிறோம். இசை இளையராஜா.

கதாநாயகி யமுனாவாக நடித்துள்ள அர்ச்சனா ஜோலேல்கர், அடிபட்டுக் கசந்து போன பெண்ணின் உணர்வுகளைத் துல்லியமாக வெளிப்படுத்துகிறார். பாபுவாக வரும் அபிஷேக், கதாபாத்திரத்தின் வளர்ச்சியைக் கவனமாகக் காட்டியிருக்கிறார். அவர் மனம் விட்டுக் கதறி அழும் காட்சிகளில்தான் எவ்வளவு நெகிழ்ச்சி! ரங்கண்ணா - நெடுமுடிவேணு! பாத்திரத்தின் நெளிவு சுளிவுகளை நுணுக்கமாகச் சித்திரித்திருக்கிறார்.

கவரின் அழுக்கையும், ஜன்னல் கம்பிகளின் உதிர்ந்த பெயின்டையும் கதை சொல்ல வைத்துள்ள ஆர்ட் டைரக்டர் கிருஷ்ணமூர்த்தி, சாகசங்களின்றி, கேமராவை கதையின் போக்கோடு ஓட்டியுள்ள சன்னி ஜோசப், தங்கர் பச்சான் - இரட்டையர்கள், அனைவரையும் ஆட்டுவித்துள்ள இயக்குனர், துணிச்சல்மிக்க தயாரிப்பாளர் என்று தனித்தனியே பாராட்டிக் கொண்டே போகலாம்... ஆனால் அவர்கள் அனைவருமே தனித்தனியே தங்களை வெளிப்படுத்திக் கொள்ள முயற்சி செய்யாமல் இணைந்து கதை சொல்லியிருப்பதுதான் வெற்றியே!



மாருதி கார் கொடுக்காவிட்டாலும் மனம் விட்டுப் பாராட்ட ஒரு விழா எடுக்கலாம்!

— எஸ். ஆர்

# ட்ரஸ்ட் ப்ளாஸ் எனில்

உங்கள் வீட்டிலேயே எங்கள் சேவை



## INVITES DEPOSITS

Fixed Deposits will be accepted at the following rates of interest and subject to the terms and conditions as indicated in the form of application of deposit available at the administrative Office and other branch offices of the Company.

### DEPOSIT SCHEMES

| CUMULATIVE DEPOSIT SCHEME | | | FIXED DEPOSIT SCHEME | |
|---|---|---|---|---|
| Period in Months | For Rs. 1000 Deposit Amount Payable on Maturity | Effective Annual Yield | Period in Months | Rate of Interest Per annum Monthly Quarterly |
| 12 Months & 1 Day | Rs. 1150/- | 15.00% | 12 Months & 1 Day | |
| 24 Months & 1 Day | Rs. 1321/- | 16.05% | 24Months & 1 Day | |
| 36 Months | Rs. 1518/- | 17.27% | 36 Months | |
| 48 Months | Rs. 1745/- | 18.63% | 48 Months | 14% 14.16% |
| 60 Months | Rs. 2006/- | 20.12% | 60 Months | |

| RECURRING DEPOSIT SCHEME (Minimum Rs. 500/-) | | | |
|---|---|---|---|
| Period in Months | Rate of Interest Per Annum | Maturity Value (for Rs. 500) | For Every Additional Rs. 100/- |
| 12 Months & 1 Day | 14% | Rs. 6485/- | Rs. 1296/- |
| 24 Months & 1 Day | | Rs. 13915/- | Rs. 2783/- |
| 36 Months | | Rs. 22470/- | Rs. 4494/- |

1. Interest warrants payable at par at all branches of SBI

Information required to be specified as per Non Banking Financial Companies (Reserve Bank) Direction, 1977 and Non Banking Financial Companies and Miscellaneous Non Banking Financial Companies (Advertisement) Rules, 1977, are given below.

A. Name of the Company : The Investment Trust of India Ltd.

B. Date of Incorporation : 2nd August 1946

C. Business carried on by the Company and its subsidiaries with details of branches or units, if any :

Business : Hire Purchase Financing, Investments, Leasing, Industrial Financing, Mortgage Financing etc.

Subsidiary : I.T.I. Pioneer AMC Ltd. And I.T.I. Capital Markets Ltd.

Branches : Refer to Head Office.

D. Brief Particulars of the Management of the Company.

The Company is managed by the Managing Director under the supervision, direction and control of the Board of Directors.

E. Name, address & occupation of the Directors.

Mr. B.H. KOTHARI, Chairman & Managing Director, "Kothari Bagh", 11, Nungambakkam High Road, Madras 600 034, Industrialist Mr. A.L. MUDALIAR, "Avanti", 858, Poonamallee High Road, Kilpauk, Madras 600 010, Business Executive & Management Consultant Mr. G.K. SUNDARAM, "Rasakondals" Circuit House Road, Coimbatore 641 018, Industrialist Mr. G. CHIDAMBARAM, 101-A, Jamalpuri, 2nd St. Off Velachery Road, Madras 600 032, Former Managing Director LIC Mr. N. SRINIVASAN, T-18, Sixth Avenue, Besant Nagar, Madras 600 090, Chartered Accountant Mr. RAM GANAPATHI, No. 27, "Ashok Crescent", D.L.F. Qutab Enclave, Phase-I, Gurgaon, Haryana - 122 001, Former Chairman of BIFR Mr. C.R. RAMAKRISHNAN, "Mathavalli", No. 4, Sir P.S. Sivasamy Road, Mylapore, Madras 600 004, Former Joint Managing Director of Larsen & Toubro Ltd. Mr. M.B. SHAH, A 23/24, Woodlands Apartments, Peddar Road, Bombay 400 026, Business.

**ICRA RATING**
**MAA+**
**HIGH SAFETY**

# எங்களை வீட்டுக்கு அழைத்து முதலீடு செய்யும் அளவுக்கு எங்கள் பிக்செட் டெபாசிட்டுகளில் மக்கள் தீவிர ஆர்வம் காட்டுகின்றனர்.

➢ இத்தகைய சேவையை வழங்குவதாக எல்லா நிதி நிறுவனங்களுமே பெருமை கொள்ள முடியாது. உங்கள் ஊரில் எங்கள் கிளை இருந்தால், தொலைபேசியில் தொடர்பு கொள்ளுங்கள். ITI-யில் முதலீடு செய்வது பற்றிய முழு விவரங்களுடன் நாங்களே உங்கள் வீட்டுக்கு வருவோம். அதோடு எங்கள் சேவை முடிந்து விடாது. அத்துடன் வரும் மற்ற சிறப்புகளையும் சற்றே பாருங்கள். ➢ இலவச வரி ஆலோசனை *. எங்களது 35 கிளை அலுவலகங்களின் மூலம் எங்களுடன் நீங்கள் எளிதில் தொடர்புகொள்ளும் வசதி, ➢ இவை அனைத்துமே ITI-யின் டிரஸ்ட் ப்ளஸ் தரும் கூடுதல் நன்மைகளாகும். இந்தக் காரணங்களால்தான் தென்னிந்தியாவிலுள்ள பெரும்பாலான குடும்பங்கள் ITI-யில் முதலீடு செய்வதில் முனைந்துள்ளன. ➢ இது நம்பிக்கையின் அடிப்படையில் உருவான மரபு. இப்படி இன்னும் எத்தனையோ. இவற்றை எல்லாம் நீங்கள் வரவேற்பீர்கள் என்பதில் சந்தேகம் என்ன? ITI எனில் கூடுதல் நன்மைகள் பல.

**தி இன்வெஸ்ட்மென்ட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா லிமிடெட்.**

ஒரு H. C. கோத்தாரி குரூப் கம்பெனி

மஷ்கூர் பில்டிங்ஸ், 1, கிருஷ்ணமாசாரி சாலை, நுங்கம்பாக்கம், சென்னை-600 034.
தொ.பே: 8276297, 8274871,8274885,8271691

★ இந்த சேவை சென்னைக்கு மட்டுமே விஸ்தரிக்கப்பட்டுள்ளது.
இந்த சேவையால் ஏற்படும் பொறுப்புகளுக்கு ITI பொறுப்பாளி அல்ல.

(F) Profits of the Company before and after making provisions for tax for the three financial years immediately preceding the date of advertisement. (G) Dividend declared by the Company in respect of the said year. (Rupees in lakhs percentage).

| | Profits before Depreciation & taxation (Rupees in lakhs) | Profits before taxation | Profits after taxation | Amount (Rs. in lakhs) | Percentage |
|---|---|---|---|---|---|
| 31-3-94 | 752.74 | 434.91 | 411.91 | 76.27 | 35 |
| 31-3-93 | 474.37 | 307.08 | 291.08 | 76.27 | 35 |
| 31-3-92 | 312.81 | 187.44 | 183.19 | 56.10 | 28 |

(H) Summarised financial position of the Company as appearing in the two latest Audited Balance Sheets.

| LIABILITIES | 31-3-94 (Rs. in lakhs) | 31-3-93 | ASSETS | 31-3-94 (Rs. in lakhs) | 31-3-93 |
|---|---|---|---|---|---|
| Share Capital | 217.88 | 217.67 | Fixed Assets | 3209.01 | 2438.88 |
| Reserves & Surplus | 1233.31 | 897.35 | Investments | 741.13 | 215.66 |
| Secured Loans | 3229.69 | 2766.40 | Current Assets, Loans & Advances | 8671.19 | 6066.06 |
| Unsecured Loans | 5290.77 | 2802.41 | Miscellaneous Expenditure | 14.79 | 16.22 |
| Current Liabilities | 2535.08 | 1916.60 | | | |
| Provisions | 159.39 | 136.39 | | | |
| | 12666.12 | 8736.82 | | 12666.12 | 8736.82 |

Note : Contingent Liabilities not provided for

(i) On partly paid Shares and Debentures — Rs. 5.08 lakhs
(ii) Sales tax on lease contracts under writ petitions — Rs. 22.35 lakhs.

I. The amount which the company can raise by way of deposit under Reserve Bank of India directions — Rs. 143.64 crores.
Aggregate of deposits actually held on the last day of the immediately preceding financial year, viz 31-3-94 — Rs. 37.88 crores.

J. The Company has no over due deposits other than unclaimed deposits.

K. It is hereby declared that :
(i) The company has complied with the applicable provisions of the directions.
(ii) The compliance with the directions does not imply that the repayment of deposits is guaranteed by the Reserve Bank of India.
(iii) The deposits accepted by the Company are unsecured and rank pari passu with other unsecured liabilities.

The above text of this advertisement has been approved by the Board of Directors on 27-5-94.

(By order of the Board)
For The Investment Trust of India Limited

**P.S. Balasubramanian**
Chief Executive and Secretary.

Note : A copy of this text duly signed by a majority of the Directors of the Company has been filed with the Reserve Bank of India, Bangalore.

# வேதபுரத்து வியாபாரிகள்

**'நாற்பதினாயிரம் நூற்றாண்டுகளாக எந்தவிதமான மாறுதலுமில்லாமல் அப்படியே இருந்து வருவதுதான் வேதபுரத்து நாகரிகத்தின் சிறப்பு!**

***('வேதபுரத்துப் பண்பாடு' - ஆசிரியர் : ஞானநேயப் பண்டிதர். பக். 173 - 174)***

நஞ்சுகண்டன் முதலில் திடுக்கிட்டாலும், பிறகு உடனுக்குடன் சமாளித்துக் கொண்டு, புன்னகை செய்தான்.

"பொருத்தமான தோற்றம்," என்றான் அவன்.

"எதற்குப் பொருத்தம்?" என்றாள் அபூர்வா.

"வேதபுரத்து மக்கள் இதைத்தான் தங்களிடமிருந்து எதிர்பார்க்கிறார்கள்."

"புரியலே."

"ஆள்றவங்க ராஜாவா இருக்கணும், இல்லாட்டா ராணியா இருக்கணும், இன்னும் உத்தமமான விஷயம், கடவுளா இருக்கணும். ஒரு 'ஐடியா' உங்களுக்கு ஆட்சேபணை இல்லாட்டா.." அவன் மேலே சொல்லாமல் நிறுத்தினான்.

"சொல்லுங்க..."

"கையிலே வேல்.. உங்களுக்கு 'கட்-அவுட்' வைக்கிற போது, ரொம்பப் பிரமாதமா இருக்கும். ஆர்டிஸ்ட்டுகளுக்குக் கொண்டாட்டம்."

"சரி, வேல் எங்கே?"

நஞ்சுகண்டன் இதை எதிர்பார்க்கவில்லை. திகைத்தவன், சில விநாடிகள் கழித்துச் சொன்னான். "ஓ.கே. அஞ்சு நிமிஷத்திலே வந்துடும் வேல்," என்று கூறிக் கொண்டே டெலிஃபோன் அருகே சென்றான்.

அவன் சொன்னபடியே வேல் வந்தது.

வேலைக் கையிலேந்தியவாறு அபூர்வா சர்வ அலங்காரங்களுடன் நின்றதைப் பார்த்ததும், வனிதா சொன்னாள், "எனக்கே கால்லே விழுந்து கும்பிடணும் போலிருக்குது, மகாராணி."

"சரி, புறப்படுவோம், நேரமாவுது," என்றான் நஞ்சுகண்டன்.

ஒரு பெரிய மைதானத்தில் முடிசூட்டு விழா ஏற்பாடாயிருந்தது.

பிரும்மாண்டமான மேடை. பட்டாபிஷேக நாற்காலி பட்டாடை அலங்காரத்துடன், மின்னொளியில் குளித்து, மிகப் பிரகாசமாய் மின்னியது.

மைதானத்தில் மூலைக்கு மூலை ராட்சச 'ஸ்கிரீன்'கள். எந்த இடத்தில் நின்றாலும் பட்டாபிஷேக நிகழ்ச்சிகளைப் பார்க்கலாம். அதற்குள் ஆயிரக்கணக்கான மக்கள் குழுமி விட்டனர்.

அபூர்வா மேடையிலேறியதும், காதைப் பிளக்கும் வெடிச் சப்தம். 'மஹாராணி வாழ்க' என்ற கோஷங்கள்.

ஞானச் செல்வர் சிங்காரம் அடிகளார், சிவப்பு வேட்டி, சிவப்புச் சால்வை சகிதமாய், அவள் வரவுக்காகக் காத்துக் கொண்டு, மேடையருகே நின்றார்.

நஞ்சுகண்டன் அவரை அபூர்வாவுக்கு அறிமுகம் செய்து வைத்தான்.

சிங்காரம் அடிகளாரை அடுத்து அவர் மகன். நெற்றியில் பெரிய குங்குமப் பொட்டு. அவனும் தந்தையைப் போல் சிவப்பாடை அணிந்திருந்தான்.

அவன் தோள்மேல் கிளி உட்கார்ந்திருந்தது. அபூர்வாவின் பூர்வீகக் கதையை உலகுக்குச் சொன்ன கிளி.

அவனைத் தாண்டி மேடையில் ஏற அபூர்வா முற்பட்ட போது, கிளி கத்திற்று அவள் திரும்பிப் பார்த்தாள்.

"மாது குலதிலக, வேதபுர ரட்சக, கொற்றவை கொலு நேர்த்தி, ஜெய பவானி, மஹாராணி ஸ்ரீ, மாட்சிமைமிகு அபூர்வா தேவி, வருக வருக' என்கிறது கிளி" என்று சிங்காரம் அடிகளார் மகன் கிளி சொன்னதை மொழிபெயர்த்துச் சொன்னான்.

ஒரு சின்ன 'கிறீச்'சுக்கு இவ்வளவு அர்த்தமா என்று தோன்றிற்று அபூர்வாவுக்கு.

விழா தொடங்கிற்று.

பதினைந்து ஆண்களும், பதினைந்து பெண்களும், மஹாராணி வணக்கப் பாடல் பாடினார்கள்.

நஞ்சுகண்டன் அபூர்வாவிடம் கீழ்க் குரலில் சொன்னான் : "இப்போ வேதபுரத்து

## 25 இந்திரா பார்த்தசாரதி

மூத்த குடிமகன் பேசுவாரு... அதுக்கப்புறம், சிங்காரம் அடிகளார் உங்களுக்கு முடிசூட்டு வார். இதைத் தொடர்ந்து வாத்திய விருந்து. அப்புறம் நீங்க பேசணும். சிங்காரம் அடிகளார் மகன், கிளி, குடிமக்கள்லே முக்கியப் பட்டவங்க சில பேர் எல்லாரையும் கௌர விக்கணும்."

"மந்திரி சபை, சட்டசபை எல்லாம் இதோட சமாப்தியா?"

"சட்டசபை அங்கத்தினர்கள் எல்லா ருமே மந்திரி பிரதானிக இனிமே..."

"நீங்க...?"

"நாட்டு சேவைக்காகத் தன்னை அர்ப்ப ணித்துக் கொண்ட ஓர் ஏழைக் குடிமகன்," என்றான் புன்னகையுடன்.

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் அபூர்வா எதிரில் வந்து, தலை தரையில் படும்படி குனிந்து வணங்கிக் கேட்டார். "ஆரம்பிக்க லாமா, மாட்சிமை தங்கிய மஹாராணி?"

அபூர்வா தலையசைத்தாள்.

'முடிசூட வந்த எங்கள் முத்துராணி
அடி வருட பாதமுடை எம் கலைவாணி
நடிப்பினால் நானிலம் கவர்ந்த உங்கள்
முகம் நாணி,
கடி மலர்க் கமலம் குவிந்தது காணீர்...
வாழிய எங்கள் ராணி! வாழிய எங்கள்
ராணி!

அபூர்வா பாட்டு முடிந்ததும், நஞ்சுண்ட னைக் கேட்டாள் : "இதுக்கு என்ன அர்த் தம்? 'நடிப்பினால் நானிலம் கவர்ந்து'... அப்ப டின்னு பாடினார்களே, நான் நடிகையா?"

"இதுக்கெல்லாம் அர்த்தம் இருக்கணும்னு அவசியமில்லே, 'முடி, அடி, நடி, கடி...' இதுக் கெல்லாம் எதுகைன்னு பேரு... அர்த்தமிருக் கணும்னு அவசியமில்லே, எதுகை, மோனை இருந்தாப் போதும்" என்றான் நஞ்சுண்டன்.

இந்தப் பாட்டை இயக்கியவர், முக மலர்ச்சியுடன் அபூர்வா முன்வந்து, குனிந்து வணங்கினார்.

அபூர்வா அருகிலிருந்த பெண், அழகான வேலைப்பாடு அமைந்த ஒரு சிறிய வெல் வெட் பெட்டியை அபூர்வாவிடம் பணி வுடன் நீட்டினாள்.

"அதை அவருக்குக் கொடுங்க" என்றான் நஞ்சுண்டன்.

அவள் இசை நடத்துநரிடம் அப் பெட்டி யைக் கொடுத்தாள்.

அதை வாங்கும் போது, அவர் இன்னும் குனிந்தார்.

"ஏன் இப்படிக் குனியறீங்க? பச்சைக்



குதிரை தாண்டணுமா?" என்று கேட்டாள் அபூர்வா.

அவர் திடுக்கிட்டு நிமிர்ந்தார். "தாண்டுங்கள், மஹாராணி" என்றார் குரலில் கொஞ்சம் பதற்றத்துடன்.

"இந்த ஆளு எதுக்கும் தயாரா இருக்காரே," என்றாள் அபூர்வா நஞ்சுண்டனிடம்.

நஞ்சுண்டன் இதைக் கவனிக்காதது போல் நின்று கொண்டிருந்தான்.

"மாட்சிமை தங்கிய மஹாராணி, நான் இப்பொழுது இசைத்தது ஒரு புதிய ராகம், இதற்குத் தங்களுடைய திருநாமத்தை இட்டிருக்கிறேன்'' என்றார் அப் பாடகர்.

" 'அபூர்வா'வா?"

"ஆமாம். அத் திருப்பெயரை என் எச்சில் வாயால் சொல்லக் கூடாது."

''அதே எச்சில் வாயிலேதானே என்னோட பேசறீங்க, 'மஹாராணி'ன்னு என்னைக் கூப்பிடறீங்க, அது சரியா?"

''மன்னிக்கவும், மஹாராணி... நான் சொல்ல வந்தது..."

"ஒண்ணும் சொல்ல வேணாம்... நீங்க போங்க."

அவர் போனதும், அபூர்வா நஞ்சுண்டனிடம் சொன்னாள் : "இனிமே என்னுடைய விதி இந்த மாதிரி ஆளுகளைப் பார்க்கணுங்கிறதுதானா?"

"தயவுசெய்து பொறுமையா இருங்க, அப்புறம் பேசுவோம்," என்றான் நஞ்சுண்டன்.

**பா**த பூஜை தொடங்கிற்று. மந்திரி பிரதானிகள் ஒவ்வொருவரும் தங்கக் கூஜாவில் தண்ணீர் கொண்டு வந்து, அபூர்வாவின் பாதங்களைக் கழுவி, அப் பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டனர். தங்கக் கூஜா அவள் பாதத்தருகே வைக்கப் பட்டது. அவற்றை வனிதா எடுத்து வைத்துக் கொண்டாள்.

அபூர்வா அவளைக் கோபத்துடன் பார்த்தாள்.

"இதுதான் மரபு" என்றான் நஞ்சுண்டன் கீழ்க் குரலில்.

சிங்காரம் அடிகளார், இறுதியாக, அவளருகே வந்து நின்றார்.

அவர் கையில் ஒரு பொற் கிரீடம். நவரத்தினங்கள் இழைந்த ஜெகஜ்ஜோதியான மௌலி. அவர் மகன் அவரருகில் நின்று, புரியாத மொழியில், மூச்சு விடாமல் ஏதோ சொன்னான்.

'கரட தரட பரட அடக மகட மாது
உரட இருட எரட மனக திகட சாது
விரட உருட குருட சனக எடக காது
அரட சரட திருட எனக உடக நிது'

" 'வாட் ஈஸ் திஸ் நான்ஸென்ஸ்'?" என்று கேட்டாள் அபூர்வா நஞ்சுண்டனிடம்.

"வேதபுரத்துப் பூர்வீக மொழி. ஜோஸ்யர் மகன் கிளியிடம் கற்றுக் கொண்ட மொழி" என்றான் நஞ்சுண்டன்.

"என்ன சொல்றாரு?"

"மந்திரம். இனிமேல் இந்த மொழிதான் வேதபுரத்துப் புனித மொழியாக அறிவிக்கப்பட வேண்டும். வேதபுரத்துத் திருமணங்கள், மற்றைய எல்லா சடங்குகளும் இந்த மொழியில்தான் நடைபெறும். உங்கள் கையெழுத்துக்காக உத்தரவு காத்திருக்கிறது" என்றான் நஞ்சுண்டன்.

"இது யாருடைய முடிவு?" என்றாள் அபூர்வா.

"பிறகு விவாதிக்கலாம்."

மகன் மந்திரம் சொல்லி முடித்த பிறகு, அவன் தோளிலிருந்த கிளி, இறக்கைகளை அடித்துக் கொண்டு கத்திற்று. அதன் குரல் வளையை யாரோ நெருக்குவது போன்ற வேதனைக் குரல்.

மகன் சொன்னான் : "சுகரிஷி வாழ்த்துகிறார்." சிங்காரம் அடிகளார், அபூர்வாவின் தலையில் முடியை வைத்ததும் பீரங்கி சப்தம் முழங்கிற்று.

பொதுமக்களின் கோஷங்கள்.

அபூர்வா கையைக் கூப்பிக் கொண்டு நின்றாள்.

பிரதானிகள் சாஷ்டாங்கமாகத் தரையில் விழுந்து கும்பிட்டனர்.

வானத்திலிருந்து ஹெலிகாப்டர்கள் பூ மழை பொழிந்தன.

சிங்காரம் அடிகளார் அபூர்வாவின் பட்டப் பெயரை அறிவித்தார்.

இனி 'கொடுத்த' பட்டங்கள்தாம்.

'மாதுகுலதிலக, வேதபுரத்து ரட்சக, கொற்றவை கொலு நேர்த்தி, ஜெய பவானி, மஹாராணி ஸ்ரீ, மாட்சிமை மிகு அபூர்வாதேவி.'

---



**''மந்திரியை இசைவிழாவுக்குக் கூப்பிட்டது தப்பாப் போச்சு...!**

**''ஏன்...?''**

**''மேடையிலே இருந்த 'தியாகையர்' படத்தைப் பார்த்துட்டு, 'இனிமேல் தி. நகரை, இவரது நினைவாக தியாகராய நகர்னு மாற்ற எங்கள் தலைவி உத்தரவிட்டுள்ளார்கள்'னு பேசியிருக்கார்...!''**

**- சி. பி. ஸ்ரீதர்**

அபூர்வா பட்டாபிஷேக நாற்காலியில் உட்கார்ந்தான். அவனருகில் வனிதா நின்று கொண்டிருந்தாள்.

பரிசுகள் குவியத் தொடங்கின. அவற்றை எடுத்து வைத்துக் கொள்ளும் பொறுப்பை வனிதா மகிழ்ச்சியுடன் ஏற்றாள்.

வைபவ இறுதியில் அபூர்வா பேசினான்.

"என்னருமைக் குடிமக்களே,

இவ்வையத்தை வாழ்விக்க வந்து வாயு சமாதியுற்ற நம் நிரந்தரத் தலைவரின் தொடர்ச்சியாக நான் உங்கள் முன் நிற்கிறேன். உங்கள் நலமே என் நலம். என் நலமே உங்கள் நலம். வேதபுரத்துக் கலாசார மரபைப் பேணுவது என் பொறுப்பு. இன்று நேற்றையதல்ல நம் கலாசாரம். நாற்பதாயிரம் நூற்றாண்டுகளாக எந்தவித மாறுதலுமில்லாமல், அப்படியே இருந்து வருவது நம் கலாசாரம். அதை அப்படியே ஏற்றுக் கொண்டு, அதைத் தொடர்வதுதான் நாம் நம்முடைய மூதாதையருக்குச் செய்யும் தொண்டு. வாழ்க நம் பணி. வாழ்க நம் மூதாதையர். வாழ்க வேதபுரம்."

அவன் பேசி முடித்ததும், அவனை வாழ்த்திக் கோஷங்கள், பாராட்டிக் கைதட்டல்கள்.

இதைத் தொடர்ந்து வாணவேடிக்கைகள்.

அபூர்வா வீட்டையடைந்த போது மணி பன்னிரண்டு. நஞ்சுண்டனும் அவனுடன் அவன் வீட்டுக்கு வந்தான்.

"இப்பொழுது அரசாங்கச் செயலகம் ஒரு புராதனக் கோட்டையில் இருந்து வருகிறது. அக்கோட்டையை ஒரு பழைய வரைபடத்தை வைத்துக் கொண்டு, அக்காலத்திய அரண்மனையாக மாற்றி உங்கள் குடியிருப்பாகச் செய்ய வேண்டுமென்பது மக்கள் திட்டம். இவ்வரண்மனைக்கு அகழி, பாதுகாப்புத் தளங்கள் எல்லாம் உண்டு. இன்னும் ஓராண்டுக்குள் இது தயாராகி விடும். நம் தொழிலதிபர் ஒருவர், சுற்றுலா திட்டத்தில், சரித்திரத்தைப் பின்னோக்கிப் பார்க்கும் வகையில், ஒரு பழம்பெரும் மாளிகையைப் புதிதாகக் கட்டியிருக்கிறார். இது கடற்கரை ஓரத்தில் இருக்கிறது. அரண்மனை கட்டி முடிக்கப்படும் வரை, நீங்கள் இம் மாளிகையில் குடியேற வேண்டுமென்பது மக்கள் விருப்பம்," என்றான் நஞ்சுண்டன்.

"தலைவர் மாளிகை எனக்குப் போதும்" என்றான் அபூர்வா.

"போதாதென்பது மக்கள் விருப்பம்."

"என் விருப்பந்தான் மக்கள் விருப்பம்."

நஞ்சுண்டன் பேசாமல் நின்றான்.

"இப்பொழுது சொல்லுங்க... இதுக்கெல்லாம் என்ன அர்த்தம்?"

"எதுக்கெல்லாம்?"

"நான் என்ன கேக்கறேன்னு உங்களுக்குத் தெரியும். சொல்லுங்க."

நஞ்சுண்டன் சிறிது நேரம் மௌனமாக நின்றான். பிறகு சொன்னான். "வேதபுரத்து மக்கள் ஆளப்பட வேண்டிய இனமே தவிர, ஆள்ற இனமே இல்லே. 'எல்லாரும் இந் நாட்டு மன்னர்'ங்கிறதெல்லாம் வேதபுரத்துக்குப் பொருந்தி வராது. 'எங்களைப் போட்டு மிதிங்க, மிதிங்க'ன்னு சொல்லி, ஒருத்தரைத் தலைவனாகவோ, தலைவியாகவோ ஆக்கி, அவங்களாலே மிதிபடறதையே சொர்க்கமா நினைக்கிற அப்பாவிக் கூட்டம். அவங்க சந்தோஷத்தை நாம் ஏன் கெடுக்கணும்? மிதிக்கிறதுக்கான எல்லாத் தகுதிகளும் உங்களுக்கிருக்கு. முதல் தகுதி, வெள்ளைத் தோல்... வேறென்ன வேணும்?"

"எனக்கு முந்தி இருந்த தலைவர்?"

"அவர் எப்பவோ போயிட்டாரு. அப்படிப் போனாலும், அவர் பேரிலே ஒரு ஸ்தாபனத்தை உருவாக்கறது வேதபுரத்திலே ரொம்ப சுலபமான விஷயம். அவர் ஸ்தாபனம் ஆனப்பறம், அவர் இருக்காரா இல்லையாங்கிறதைப் பத்தி எங்க ஜனங்க கவலையே பட மாட்டாங்க... குட் நைட், யுவர் மெஜெஸ்டி...'' என்றான் நஞ்சுண்டன்.

(அடுத்த இதழில் முடியும்)



"என்ன, போலீஸ் டிரெய்னிங் காலேஜ்ல நம்ம பாகவதருக்குப் பெரிய உத்தியோகமா? ஆச்சர்யமாயிருக்கே!"

"ஆமா, புது டெக்னிக். துப்பாக்கி பிரயோகம், தடியடி, கண்ணீர்ப் புகைன்னு கெட்ட பேரு வாங்கிக்காம, கூட்டத்தைக் கலைக்க நம்ம பாகவதர்கிட்டே நாலு பாட்டு கத்துண்டு பாடப் போறாங்களாம்!"

- ஆர். பி. எஸ்.

சாரங்கனுக்குச் சந்நியாசம் வாங்கிக் கொண்டு விடலாம் போல் மனசே வெறுத்துப் போய் விட்டது. ஆனால் சமீப காலமாக சாமியார்களின் சரித்திரங்கள் அந்தளை நாகரிகமாக இல்லை என்பதால், அந்த ஐடியாவையே ஒதுக்கித் தள்ளினான்.

என்ன கேட்டு விட்டாள் அந்தப் பெண் மைதிலி!

'உங்களுக்குச் சங்கராபரணத்துக்கும் கரகரப் பிரியாவுக்கும் வித்தியாசம் தெரியுமா?" என்றல்லவா கேட்டு விட்டாள்!

சங்கராபரணத்துக்கும், சலங்கை ஒலிக்கும் வித்தியாசம் கேட்டிருந்தால் கூடச் சொல்லியிருக்கலாம். இதில் போய் என்ன சொல்லித் தொலைப்பது?

ஒரு பிளாஷ்பேக்கில் போய், மறுபடி அன்றைக்கு நடந்ததை நினைத்துப் பார்த்தான் சாரங்கன்.

"பார்க்க லட்சணமாய் இருக்கிறான்டா சாரங்கா. நல்ல குடும்பம்" என்றாள் அம்மா. இப்படி சிபாரிசு செய்து கல்யாணம் பண்ணி வைத்து விட்டு, முகூர்த்தம் ஆன மறுநாளே, மாமியாரும் மருமகளும் சிண்டைப் பிடித்துக் கொண்ட வரலாறுகள் தெரியாதா என்ன!

"அவனுக்கு இன்னும் ரதி மாதிரி பெண்டாட்டி வேணுமாக்கும்?" என்றார் அப்பா, தம் பங்குக்கு.

சாரங்கன் பார்த்தான்.

மைதிலிக்கு மான் விழியோ இல்லையோ, மை விழி. எள்ளுப் பூ நாசியா என்று தெரியாது. ஏனென்றால், முழுசாக எள்ளையே பார்த்திராதவன் சாரங்கன். எள்ளுப் பூவை எங்கே கண்டான்? உதடுகள்தான் கொஞ்சம் ரவீனா டண்டன் மாதிரி செக்ஸியாக இருக்கிறதோ என்று தோன்றிற்று. நல்லவேளையாக நரசிம்மராவ் உதடுகள் மாதிரி இல்லையே என்று ஆறுதல் கொண்டான். தாடை நிச்சயம் செதுக்கின மாதிரி தான் இருந்தது...

மைதிலியின் அம்மா முந்தைய பிறவியில் வெட்கிரைண்டராய்ப் பிறந்திருப்பாள் போலும். ஒரே லொட லொட...

'இவளைப் போல சமர்த்து இந்தப் பூலோகத்தில் வேறு யாருக்கும் இல்லை' என்கிற மாதிரி, அமைச்சர்களின் முழுப் பக்க விளம்பரமாய், மைதிலியைப் புகழ்ந்து தள்ளினாள்.

"நான் உங்களுடன் கொஞ்சம் பேச வேண்டுமே?" என்றாள் மைதிலி. "தனியாக."

உள்ளபடிக்கே கொஞ்சம் பயந்து பயந்து தான் அவளோடு உள்ளே போனான் சாரங்கன்.

"உங்களுக்குச் சங்கீத ரசனை உண்டா?" என்று கேட்டாளே பார்க்கணும்!

இதற்குப் போய்த் தனியாய்க் கூட்டிக் கொண்டு வந்து 'உங்களுக்கு எய்ட்ஸ் உண்டா?' என்று கேட்கிற மாதிரி அல்லவா பயமுறுத்தி விட்டாள்!

"ஓ! டூத் பேஸ்ட், காபிப் பொடி, சீயக்காய்ப் பொடி விளம்பரங்களெ எல்லாம் வருமே அந்த மாதிரி பாட்டுக்கள்லாம் ரசிப்பேனே!"

"உங்களுக்கு ஆனாலும் மோசமான ரசனை. கேவலம் டீவி 'ஆட்' பாட்டுக்களை எல்லாம் ரசிக்கிறவருக்குப் போய் நான் கழுத்தை நீட்ட மாட்டேன்!"

"கழுத்தை நீட்டறதுன்னா...? ஓ, ஐ காட் இட். கல்யாணம் பண்ணிக் கொள்ள மாட்டாய். சரி, நாளையிலிருந்து ரசிக்கலே. ரைட்?"

"இந்துஸ்தானி சங்கீதத்துலே மால்கௌன்ஸ்க்கு சமமான கர்நாடக ராகம் எது?"



சாருகேசி

# 'உமக்குத் தெரியுமா சங்கீத வாசனை?

ஐயோ, இதென்ன! கயிலை நாதரை கானத்தால் மயக்கிய ராகம் எது என்று சம்பூர்ண ராமாயணத்தில் ராவணனைப் பார்த்துக் கேட்ட மாதிரி இப்படி ஒரு கேள்வி!

"தெரியாது."

"ஹிந்தோளம். ஓகே. சங்கரா பரணத்துக்கும் கரகரப்பிரியா வுக்கும் என்ன வித்தியாசம்?"

சாரங்கன் 'பக்'கென்று சிரித்தான். "இதோ பார், மைதிலி! நாம் கல்யாணம் பண்ணிக் கொண்டு குடும்பம் நடத்தத் தானே போகிறோம்? இல்லை, தொடையைத் தட்டிக் கொண்டு சங்கரா பரணமும், கரகரப்பிரியாவும் பாடிக் கொண்டிருக்கப் போகிறோமா? வேணும்னா நாளைக்கே டி.. என். சேஷகோபாலனிடம் கேட்டுக் கொண்டு வந்து சொல்லுகிறேன். போதுமா?"

மைதிலியின் அகலமான கரிய பெரிய விழிகள் ரௌத்திர பாவத்தை வெளிப்படுத்தின. சாரங்கன் பயந்தே போய் விட்டான்.

"சங்கீதத்துக்கும் உங்களுக்கும் காத தூரம் போலிருக்கிறது. என்றைக்கு நீங்கள் குறைந்தபட்சம் சாதாரண ராகங்களையாவது கண்டுபிடித்துத் தெரிந்து கொள்ளுகிற அளவுக்கு வளருகிறீர்களோ, அன்றைக்குத் தான் நம் கல்யாணம்!"


"ஐ. டி கார்டு இல்லாமல் தேர்தல் இல்லை என்று சொன்ன சேஷன், உனக்கு தூரத்து அல்லது கிட்டத்துச் சொந்தமோ?... அம்மணீ, நான் இனிமேல் போய், எந்த வித்துவானைப் பிடித்து, எந்த ஜென்மத்தில் கர்நாடக சங்கீதம் படித்து...."

"அப்படியானால் இந்த ஜென்மத்தில் நம் கல்யாணம் இல்லை. குட்பை!"

நிர்த்தாட்சண்யமாய் நிராகரித்து விட்டாள் மைதிலி.

"நல்லவேளை. கல்யாணம் ஆனப்புறம், குக்கர்ல சாதத்தை வைத்து விட்டு ஊஞ்சல்ல உட்கார்ந்து நான் பூரா பாட்டுப் பாடி கழுத்தை அறுக்காம, முன்னாலேயே சொன்னாளே. விட்டுத் தள்ளுடா, சாரங்கா!" என்றாள் அம்மா.

"அதுதான் முடியாது!" என்றான் சாரங்கன் மனசுக்குள்.



**சா**ஸ்திரி ஹாலில், மாலை நேரக் கச்சேரிகளில், சைல்ட் பிராடிஜி முதல், 'பாவம், வயசாயிட்டுது. பத்து வருஷத்துக்கு முன்னே என்னமா பாடிட்டிருந்தார்' கேஸ் வரை, சாரங்கன் கேட்டான்.

'சார், இது என்ன ராகம்?' என்று பக்கத்து சீட்டுக்காரரை தினசரி நச்சரிக்க, சிலர் இடம் பெயர்ந்தார்கள். அவர்களுக்கே சந்தேகம் போலும். அதிலும் பத்திரிகைக்கு சங்கீத விமர்சனம் எழுதுகிற

ஒருவரே, பக்கத்து நாற்காலியில் சுவாரசிய மாகக் காது குடைந்து கொண்டிருந்தவரை உலுக்கோ உலுக்கு என்று உலுக்கி என்ன ராகம், என்ன ராகம் என்று கேட்டுக் கேட்டுக் குறித்துக் கொண்ட போது, வாழ்க்கையே வெறுத்துப் போயிற்று சாரங்கனுக்கு.

சிலர் ஹேமவதியை வாசஸ்பதி என்று சொல்லிக் கொடுத்தார்கள். இன்னும் சிலர் 'கொஞ்சம் இருங்கள்' என்று சொல்லி, இணையான பாட்டு ஒன்றை சகிக்க முடியாமல் வாய் விட்டுப் பாடி, "ஆங்... இது காம்போதி சார். தெரியலையா?" என்றனர்.

அப்புறம் வசந்தா மட்டும் அல்லாமல், சுத்த வசந்தா என்று ஒரு ராகமும் இருப்பதைக் கூடச் சொன்னார் ஒருவர்.

'குளித்து விட்டு மடியாகப் பாடினால் சுத்த வசந்தாவோ?' என்று கேட்க நினைத்து, கேட்காமல் விட்டான் சாரங்கன்.

ஆனால் -

ஒருநாளைக்கு சாட்சாத் மைதிலியையே மேடையில் தம்பூராவும், சுடுதண்ணீர் பிளாஸ்க்குமாகப் பார்த்த போது சாரங்கனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. இவளும் கச்சேரி செய்யப் போகிறாளா என்ன?

சஹானா என்ன, கரகரப்பிரியா என்ன, ஹிந்தோளம் என்ன, கல்யாண வசந்தம் என்ன, காங்கேய பூஷணி என்ன, காபி என்ன... அந்தக் கச்சேரியில் பல 'பேஷ் பேஷ்'களைச் சம்பாதித்துக் கொண்டாள் மைதிலி.

பாடும் போது மைதிலி அடிக்கடி புன்முறுவல் செய்தாள். வயலின் பெண்ணைப் பார்த்து ஒரு புன்னகை. அப்புறம் மிருதங்கக் கார இளைஞனிடம் ஒரு புன்சிரிப்பு. பிறகு பின்னால் திரும்பி, கடம் வாசிக்கிறவரிடம் ஒரு சின்னப் புன்னகை. சும்மா சொல்லப் படாது. மைதிலி பாடும் போது இன்னும் அழகாய் இருந்தாள். புன்னகை செய்யும் போதோ சாரங்கனுக்கு 'க்ளவுட் நைனில்' இருப்பது போன்ற உணர்வு.

கச்சேரி முடிந்து, ரசிகர்கள் எல்லாரும் போகும் வரை காத்திருந்தான் சாரங்கன்.

புறப்படத் தயாரான மைதிலியிடம் "கொஞ்சம் இருங்கள்!" என்றான் சாரங்கன்.

"ஓ, நீங்களா?" என்றாள் மைதிலி.


"உன்னோட சகானா, காபி, கரகரப்பிரியா, கல்யாண வசந்தம் எல்லாம் பிரமாதம், போ! நீ இப்படி கச்சேரியே செய்வே என்று எனக்குத் தெரியாது..."

"நிறையவே செய்திருக்கேன். நீங்க இப்பத்தான் கேட்கறீங்க."

"ஒன் மினிட். உன்னோட பாட்டைத் தினம் தினம் கேட்டாலே ரசனை பிரமாதமா வந்துடுமே! ராகம் எல்லாம் தெரிஞ்சால்தான் கல்யாணம் என்ற கண்டிஷன் எல்லாம் போட்டிருக்கவே வேண்டாம். இந்த மைக் சுமார் மூணு மணி நேரம் ஒரு ரசனையும் பண்ணாமல் உன் கச்சேரிக்கு ஒத்துழைக்கலையா? அதுக்கென்ன சங்கீத வாசனையா தெரியும்? அது மாதிரி நானும் இருந்துட்டுப் போறேன்!"

"பட் தட்'ஸ் டிஃப்ரன்ட். இப்போ என்னோட சங்கீதம் பத்திக் கொஞ்சமாவது தெரியுமா இல்லையா? நான் உங்களை மாற்றினேன்தானே? நம் வாழ்க்கையில் இனி ஹார்மனி இருக்கும். இல்லையா?" என்றாள் மைதிலி.

"அது உன் மாமியாரைப் பொறுத்தது!" என்றான் சாரங்கன், அவளைச் சீண்டுகிற மாதிரி.



# T.S.S. NIDHI LTD. ESTD 1973

**THIRUMYLAI SASWATHA SAHAYA NIDHI LIMITED**

Regd. Off.: 230, R.K. Mutt Road, Mylapore, Madras 600 004. ☎ 4942303 / 4943365

**BRANCHES:**
**THIRUVANMIYUR** : 112, Thiruvalluvar Salai, Kamaraj Nagar, Madras - 41. ☎ 410058
**TONDIARPET** : 667, T.H. Road, Madras - 81. ☎5950472
**SAIDAPET** : 11, Jones Road, Madras - 15.☎ 4851468

## FIXED DEPOSIT SCHEME

| Period (Months) | 12 | 24 | 36 | 60 |
|---|---|---|---|---|
| Rate of Int. P.A. | 17% | 18% | 19% | 20% |

## KARPAGA VIRUTCHAM DEPOSIT SCHEME

(Re-Investment Plan) For Deposit of Rs.1,000/-

| Period (Months) | 12 | 24 | 36 | 45 | 67 |
|---|---|---|---|---|---|
| Maturity Value | 1190 | 1425 | 1760 | 2025 | 3025 |

## SENIOR CITIZEN DEPOSIT SCHEME

Minimum Deposit Rs.10,000/- Period - 12 months

Interest payable monthly **19.5%** p.a. Interest payable annually **21%**

(APPLICABLE FOR AGED PERSONS ABOVE 55 YEARS, PENSIONERS, HANDICAPPED, WIDOWS, REGD. EDUCATIONAL AND CHARITABLE ORGANISATIONS)

## T.S.S. SPECIAL DEPOSIT SCHEME

For Deposit of Rs.10,000/-

| Period (Months) | Maturity Value |
|---|---|
| 120 | Rs.66,000 |
| 180 | [illegible]2,000 |

## RECURRING DEPOSIT SCHEME

MONTHLY DEPOSIT Rs. 100/-

| Period in Months | 12 | 24 | 36 | 48 | 60 | 72 |
|---|---|---|---|---|---|---|
| Maturity Value | 1310 | 2850 | 4650 | 6710 | 9050 | 11,580 |

## SAVINGS DEPOSIT SCHEME 9% P.A.

## BUSINESS HOURS

| | Week Days | | Sunday | Holiday |
|---|---|---|---|---|
| Regd. Office Mylapore | 9.00 to 12.30 | 2.00 to 4.30 | 9.00 to 12.30 | Friday |
| Branch Offices | 9.00 to 12.30 | 2.00 to 4.30 | 9.00 to 12.30 | Tuesday |

## HIGHLIGHTS

* Recognised as a **NIDHI COMPANY** by Central Government of India.
* Company [illegible] 21st year of service.
* Transaction with members only (Rupees two only for membership)
* Premature repayment facility as per terms and conditions.
* Monthly Interest Warrants would be despatched in advance for the year of Deposits.

## LOANS

* A) Jewel loans granted on Gold ornaments at Rs.300/- per gms. (Rs.2400/- per 8 gms.)
  * No Ceiling
  * No Charges
  * No Interest Tax
  * Recurring Deposit not required
  * Your Jewels are insured at our cost.
* B) Property Mortgage Loans granted on RD basis within Madras city limits.

P.S. SAMB[illegible] — Secretary

[illegible]MARAVELU — Vice-President

[illegible]V. RAMANI — President

# கச்சேரி செய்யும் கால்நடை மருத்துவர்!



• கணேஷ்

**வ**ழக்கமாய், அந்த வித்வானின் கச்சேரிகளின் போது, மேடையில் அவருக்குப் பின் அமர்ந்து, உடன் பாடுவதுதான் அவரது சிஷ்யரான கணேஷின் வழக்கம். ஆனால், குடவாசலில் நடந்த கச்சேரியின் இடையே, "கணேசா! தனியா ஒரு முழு கீர்த்தனை பாடேன்!" என்றார் குரு.

அவருடைய ஆணை சற்று வியப்பைத் தந்தாலும், உடனே ஒரு மீரா பஜனைப் பாட, 'சபாஷ்!' என்று தட்டிக் கொடுத்தார் குரு.

கச்சேரி முடிந்தவுடன், "காலையில என்னோட மெட்ராஸ் கிளம்பினா, உனக்கு ஆபீசுக்கு லேட்டாயிடும். அதனாலே, டீலக்ஸ் பஸ் பிடிச்சு, சௌகரியமா ராத்திரியே புறப்படு!" என்று வித்வான் சொல்ல, கணேஷ் அன்று இரவே சென்னைக்குப் புறப்பட்டார்.

கணேஷ், சென்னை வந்தடைந்து, ஆபீசுக்கு ரெடியாகிக் கொண்டிருந்தபோது, அவரது குருவின் கார் அன்று காலை விபத்துக்குள்ளாகி, வித்வான் மரணமடைந்த செய்தி இடியாய்த் தாக்கியது! புரிந்திருக்குமே! கணேஷ், மகாராஜபுரம் சந்தானத்தின் சிஷ்யர்.

இருபத்தாறு வயது இளைஞரான கணேஷ் ஒரு கால்நடை மருத்துவர் என்பது ஆச்சரியமான தகவல்.

"இளம் வயது முதலே, இசையில் ஆர்வம் இருந்து, பாட்டு கற்றுக் கொண்டாலும், எனக்கு விவசாயமோ, கால்நடை மருத்துவமோ படிக்க வேண்டும் என்றுதான் ஆசை. எனக்குக் கால்நடை மருத்துவப் படிப்புக்கு நாமக்கல்லில் சீட் கிடைத்தது. ஆனால், மகாராஜபுரம் சந்தானம் சாரிடம் பாட்டு கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஒரு காரணத்துக்காகவே, சென்னை கல்லூரிக்கு மாற்றல் வாங்கிக் கொண்டு வந்தேன்" என்கிறார் கணேஷ்.

கணேஷ், மருத்துவம் படித்த ஆறு வருஷ காலமும், ஹாஸ்டலில் தங்கவில்லை. வேஷ்டி துவைத்துப் போடுவது, கால்கள் பிடித்து விடுவது என குருவுக்கு அத்தனை பணிவிடைகளும் செய்து கொண்டு, அவர் வீட்டிலேயே தங்கி, சாப்பிட்டு, பாட்டு கற்றுக் கொண்டு...

"திடீரென ராத்திரி பன்னிரெண்டு மணிக்கு எழுப்பி, பாட்டு சொல்லிக் கொடுத்த நாட்களும் உண்டு" என்று கூறும் கணேஷ், கால்நடை மருத்துவப் படிப்பை முடித்ததும், சென்னையிலேயே இருக்க வேண்டும் என்பதற்காக, கோவையில் கிடைத்த வேலையை ஏற்றுக் கொள்ளாமல், சந்தானத்தின் சிபாரிசின் பேரில், (என்பீல்டு) விஸ்வநாதனின் விஸ்வப்பிரியா நிதி நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்தார்.

மகாராஜபுரம் சந்தானத்தின் மறைவுக்குப் பின் விஸ்வநாதன் ஆதரவில் 'ஸ்பிரிட் ஆஃப் யூத்' நிகழ்ச்சியில் (1992 அக்டோபர் 28) உமையாள்புரம் சிவராமன் உடன் வாசிக்க, முதல் தனி கச்சேரி. அதன்பின் சபாக்கள், கோவில்கள், ரிசப்ஷன்கள் என சதம் போட்டு விட்டார் கணேஷ்.

கிருஷ்ணகான சபா, சிறந்த இளம் பாடகராய் இவரைத் தேர்ந்தெடுத்து, மகாராஜபுரம் சந்தானம் நினைவு விருது அளித்திருக்கிறது.

பிரபல நிறுவனங்கள் வெளியிட்டிருக்கும் இவரது கேஸட்கள் ஏழு.

**ம**காராஜபுரம் கடைசியாய் கச்சேரி செய்த நாளான ஜூன் இருபத்து மூன்றாம் தேதியில், ஒவ்வோர் ஆண்டும், தன் குரு நினைவாய் இசை நிகழ்ச்சி நடத்தி வருகிறார் கணேஷ். கிருஷ்ணகான சபாவின் நிறுவன செயலாளர் மகாராஜபுரம் சந்தானம். எனவே அந்த சபா அமைந்துள்ள கிரிபித் ரோடுக்கு (தி.நகர்) மகாராஜபுரம் பெயர் சூட்ட வேண்டும் என்ற இவரது கோரிக்கை முதலமைச்சரின் பரிசீலனையில் இருக்கிறதாம்.

"சம்பிரதாயமும், ஜனரஞ்சகமும் தக்க விகிதத்தில் கலந்து கொடுக்கும் மகாராஜபுரம் பாணி இசை, இருபத்தி நாலு மணி நேரமும் ஒலிக்கும் பெரிய மண்டபம் ஒன்று அமைத்து, அங்கே ஓர் இசைப் பள்ளியும் நடத்த வேண்டும் என்பது என் லட்சியம்" என்கிறார் கணேஷ்.

கச்சேரி, நிதி நிறுவன ஆபீஸ், கிடைத்த நேரத்தில் கால்நடை மருத்துவ பிராக்டீஸ் என்று பிஸியாக இருந்தாலும், வீணையும் கற்றுக் கொண்டு வருகிறார். காரணம் : "வீணை கத்துக்கோ, ஸ்வரம் நன்னா வரும்" என்று குரு சொன்ன அறிவுரைதான்.

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**

# பார்த்திபன்

## 4. மாமல்லபுரம்

கடற்கரைப் பட்டினமாகிய மாமல்லபுரத்தில் அன்று அல்லோல கல்லோலமாயிருந்தது. வீடுகள் எல்லாம் மாவிலைகளினாலும், தென்னங்குருத்துகளினாலும், சிங்க உருவந் தாங்கிய கொடிகளினாலும், பலவர்ணத் தோரணங்களினாலும் அலங்கரிக்கப்பட்டு விளங்கின. தெருவீதிகளில் சித்திர விசித்திரமான கோலங்கள் போடப்பட்டிருந்தன. தேர்கள், யானைகள், குதிரைகள், கோபுரங்கள், பலவித விருட்சங்கள், பூஞ்செடிகள் - இவை போலெல்லாம் போட்ட கோலங்கள் கண்ணுக்கு விருந்தாயிருந்தன. அதிகாலையிலிருந்து ஸ்திரீகளும், புருஷர்களும் சிறுவர் சிறுமியரும் பட்டுப் பட்டாடைகளினாலும், பசும் பொன் ஆபரணங்களினாலும் தங்களை அலங்கரித்துக் கொண்டு, தெரு வீதிகளிலும் திண்ணைகளிலும் கூட்டங் கூட்டமாக நின்று கொண்டிருந்தனர். எங்கே பார்த்தாலும் பேரிகை முழக்கம், மற்றும் மங்கள வாத்தியங்களின் ஒலியும் கேட்டுக் கொண்டிருந்தன. இந்த ஒலிகளுக்கிடையில், "சக்கரவர்த்தி காஞ்சியிலிருந்து கிளம்பி விட்டாராம்!" "பாதி வழி வந்தாகி விட்டதாம்!" "சக்கரவர்த்தியுடன் கோமகள் குந்தவி தேவியும் வருகிறாராம்!" என்றெல்லாம் ஜனங்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளும் கலகல சப்தமும் கேட்டுக் கொண்டிருந்தது.

மாமல்லபுரவாசிகள் அத்தனை அதிக உற்சாகத்துடனும் ஆனந்தத்துடனும் அன்று உற்சவம் கொண்டாடியதன் காரணம் என்னவென்றால், அந் நகருக்கு அன்று மாமல்ல நரசிம்மவர்ம சக்கரவர்த்தி விஜயம் செய்வதாக இருந்ததுதான். சக்கரவர்த்தி விஜயம் செய்து, ஏழெட்டு வருஷங்களுக்கு முன்னால் நின்று போன சிற்பப் பணியை மறுபடியும் ஆரம்பித்து வைப்பார் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. சக்கரவர்த்தியுடன் கூட அவருடைய செல்வக் குமாரி குந்தவி தேவியும் வரப் போவதாகத் தெரிந்திருந்தபடியால் மாமல்லபுர வாசிகள் எல்லையற்ற குதூகலத்துடன் அந்த நாளைத் திருநாளாகக் கொண்டாடினார்கள்.

அந்தக் காலத்தில், காஞ்சி நரசிம்மவர்ம சக்கரவர்த்தியின் புகழ் எண்டிசையிலும் பரவியிருந்தது. பாரத நாடெங்கும் அவருடைய கீர்த்தி வியாபித்திருந்ததோடு, கடல் கடந்து வெளிநாடுகளுக்கும் சென்றிருந்தது. தெற்கே காவேரியாற்றங்கரையிலிருந்து வடக்கே கிருஷ்ணா நதிக்கரை வரையில் பல்லவர்களின் சிங்கக் கொடி கம்பீரமாகப் பறந்தது. அந்தப் பிரதேசத்திலுள்ள ஜனங்கள் எல்லாரும் நரசிம்மவர்மரிடம் அளவிலாத பக்தி கொண்டிருந்தார்கள். அறிவிலும் வீரத்திலும், தயாள குணத்திலும், நடுக் கண்ட நீதி வழங்குவதிலும், குடிகளின் நலன்களைக் கண்ணுங் கருத்துமாய்ப் பாதுகாப்பதிலும், சிற்பம், சித்திரம், சங்கீதம் முதலிய கலைகளை வளர்ப்பதிலும் நரசிம்மவர்மர் மிகச் சிறந்து விளங்கியது பற்றி அவருடைய பிரஜைகள் மிக்க பெருமை கொண்டிருந்தார்கள். வடக்கே நர்மதை நதிவரையில் படையெடுத்துச் சென்று, பொல்லாத புலிகேசியைப் போரில் கொன்று, வாதாபி நகரையும் தீக்கிரையாக்கி விட்டு வந்ததன் பின்னர், மாமல்ல சக்கரவர்த்தியைப் பற்றி அவருடைய குடிகள் கொண்டிருந்த பெருமை பன்மடங்கு பெருகியிருந்தது. "தட்சிண தேசத்தில் நரசிம்மவர்மரைப் போல் ஒரு சக்கரவர்த்தி இதுவரையில் தோன்றியதுமில்லை; இனி மேல் தோன்றப் போவதுமில்லை!" என்று அந்தக் காலத்தில் பல்லவ சாம்ராஜ்யத்தில் வாழ்ந்த ஜனங்கள் நம்பினார்கள்.

முந்நூறு வருஷத்துக்குப் பிறகு தஞ்சையில் இராஜராஜன், இராஜேந்திர சோழன் என்னும் மகாசக்கரவர்த்திகள் தோன்றப் போகிறார்கள் என்பதை அந்தக் காலத்து மக்கள் அறிந்திருக்க முடியாதல்லவா?

இவ்விதம் பல்லவ சாம்ராஜ்யத்தின் பிரஜைகள் எல்லாருமே நரசிம்மவர்ம சக்கரவர்த்தியிடம் பக்தி விசுவாசம் கொண்டிருந்தார்களாயினும், மாமல்லபுரம்வாசிகளுக்குச் சக்கரவர்த்தியிடம் ஒரு தனித்த உறவு ஏற்பட்டிருந்தது. அந்தப் பட்டினத்துக்குப் பெயரும் புகழும் அளித்தவர் அவரேயல்லவா?

மகேந்திரவர்ம சக்கரவர்த்தியின் காலத்தில், நரசிம்மவர்மர் இளம் பருவத்தின

# கனவு

## அமரர் கல்கி

ராயிருந்த போது, ஒரு தடவை மல்யுத்தத்தில் பிரசித்தி பெற்ற மல்லர்களையெல்லாம் தோற்கடித்து வெற்றி பெற்றார். அப்போது அவருக்கு "மகா மல்லன்" என்ற பட்டம் அவருடைய தந்தை மகேந்திரவர்மரால் அளிக்கப்பட்டது. சில காலத்திற்குப் பிறகு இந்தப் பட்டப் பெயரை வைத்தே அந்தக் கடற்கரைப் பட்டினத்துக்குப் பெயர் வழங்க லாயிற்று.

"அப்பா! இந்தப் பட்டினத்துக்கு உங்கள் பட்டப் பெயரை எதற்காக வைத்தார்கள்?" என்று கோமகள் குந்தவி தேவி, தந்தை நரசிம்மவர்மரைப் பார்த்துக் கேட்டாள்.

இருவரும் பல்லவ சாம்ராஜ்யத்தின் பட்டத்து யானை மீது அம்பாரியில் வீற்றிருந்தார்கள்.

அந்தப் பட்டத்து யானைக்கு முன்னாலும் பின்னாலும் வேலும் வாளும் தாங்கிய போர் வீரர்கள் அணிவகுத்துச் சென்றார்கள். இன்னும் பலவகைப்பட்ட விருதுகளும் சென்றன.

எல்லாருக்கும் முன்னால் பெரிய ரிஷபங்கள் முதுகில் முரசுகளைச் சுமந்து கொண்டு சென்றன. சற்று நேரத்துக்கொரு தடவை அந்த முரசுகள் அடிக்கப்பட்ட போது உண்டான சப்தம் அலைமோதிக் கொண்டு நாலாபுறமும் பரவியது.

அம்பாரியின் மீது வீற்றிருந்த நரசிம்மவர்ம சக்கரவர்த்தியையும் அவர் அருமைப் புதல்வியையும் ஏககாலத்தில் பார்த்தவர்கள், உதய சூரியனையும் பூரணச் சந்திரனையும் அருகருகே பார்த்தவர்களைப் போல் இணறித் திண்டாடிப் போனார்கள்.

இருவருடைய திருமுகத்திலும் அத்தகைய திவ்யதேஜஸ் ஜொலித்துக் கொண்டிருந்தது. அவர்கள் அணிந்திருந்த கிரீடங்களிலும், மற்ற ஆபரணங்களிலும் பதித்த நவரத்தினங்களின் காந்தி பார்ப்பவர்களின் கண்களைக் கூசச் செய்தன.

பல்லவ சக்கரவர்த்தி ஆஜானுபாகுவாய், கம்பீரமான தோற்றமுடையவராயிருந்தார். வலிமையும் திறமையுங் கொண்ட அவருடைய திருமேனியில் மென்மையும் சௌந்தரியமும் கலந்து உறவாடின. இராஜ களை ததும்பிய அவருடைய முகத்தில் காணப்பட்ட காயங்களின் வடுக்கள், அவர் எத்தனையோ கோர யுத்தங்களில் கைகலந்து போரிட்டு, ஜயபேரிகை முழக்கத்துடன் திரும்பி வந்தவர் என்பதை ஞாபகப்படுத்திக் கொண்டிருந்தன.

கோமகள் குந்தவி தேவியோ பெண் குலத்தின் அழகெல்லாம் திரண்டு உருக்கொண்டவள் போலிருந்தாள். பல்லவ சாம்ராஜ்யத்திலிருந்த மகா சிற்பிகளும் ஓவியக்காரர்களும், குந்தவி தேவியிடம் தங்கள் கலைத்திறன் தோற்றுவிட்டதென்பதை ஒப்புக் கொண்டார்கள். "கோமகளின் கருவிழிகளில்தான் என்ன மாய மந்திர சக்தி இருக்கிறதோ, தெரியவில்லை. தேவி தமது அஞ்சனந் தீட்டிய கண்களை அகல விரித்து எங்களைப் பார்த்தவுடனேயே நாங்கள் உணர்விழந்து மெய்ம் மறந்து போய் விடுகிறோம். அப்புறம் சிற்பம் அமைப்பதெங்கே? சித்திரம் வரைவதெங்கே?' என்றார்கள். "எங்களையெல்லாம் கர்வ பங்கம் செய்வதற்கென்றே பிரமன் குந்தவி தேவியைப் படைத்திருக்க வேண்டும்" என்று அவர்கள் சொன்னார்கள்.

"அப்பா! இந்த நகருக்குத் தங்கள் பட்டப் பெயரை எதற்காக வைத்தார்கள்? சொல்லுகிறேன், சொல்லு கிறேன் என்று ஏமாற்றிக் கொண்டு வருகிறீர்களே, இன்றைக்குக் கட்டாயம் சொல்லியாக வேண்டும்" என்று மறுபடியும் கேட்டாள் குந்தவி.

"அப்படியானால் இப்போது இந்த யானை மேலிருந்து நாம் இறங்கியாக வேண்டும்" என்றார் சக்கரவர்த்தி.

"இப்படியே நான் தரையில் குதித்து விடட்டுமா?" என்றாள் குந்தவி.

"நீ சாதாரண மனுஷியாயிருந்தால் குதிக்கலாம், அம்மா! குதித்துக் காலையும் ஒடித்துக் கொள்ளலாம்! சக்கரவர்த்தியின் மகளாயிருப்பதால் அப்படியெல்லாம் செய்யக் கூடாது!" என்றார் சக்கரவர்த்தி.

"எதற்காக, அப்பா, அப்படி? சக்கரவர்த்தியின் மகளாயிருப்பதால், யானை மேலிருந்து குதித்துக் காலை ஒடித்துக் கொள்ளக் கூடவா பாத்தியதை இல்லை?" என்று சிரித்துக்

கொண்டே குந்தவி கேட்டாள்.

"ஆமாம், ஆமாம்! அப்படி நீ செய்தால் 'காஞ்சி சக்கரவர்த்தியின் மகள் குந்தவி யானை மேலிருந்து குதித்தாளாம்' என்ற செய்தி உலகமெல்லாம் பரவி விடும். அப்புறம் அங்க, வங்க, கலிங்கம் முதலான ஐம்பத்தாறு தேசத்து இராஜ குமாரர்களில் யாரும் உன்னைக் கலியாணம் செய்து கொள்ள முன்வரமாட்டார்கள்! அப்புறம் உன் கலியாணத்துக்குச் சீதை விஷயத்தில் ஜனகர் செய்தது போல் நானும் ஏதாவது தந்திரம் செய்தாக வேண்டும்."

"ஜனகர் தந்திரம் செய்தாரா? என்ன தந்திரம் அப்பா!" என்று குந்தவி கேட்டாள்.

"அது தெரியாதா உனக்கு? சீதை சிறு பெண்ணாயிருந்த போது ஒருநாள் ஒரு வில்லைத் தெரியாத்தனமாய்த் தூக்கி நிறுத்தி விட்டாள். இதற்காக அவளை ஐம்பத்தாறு தேசத்து இராஜகுமாரர்களும் கலியாணம் செய்து கொள்ள மறுத்து விட்டார்கள். கடைசியில் சீதையின் தகப்பனார் என்ன செய்தார், தெரியுமா? விசுவாமித்திர ரிஷியை அனுப்பி, இராமன் என்ற அசட்டு இராஜகுமாரனைத் தந்திரமாய் அழைத்து வரப் பண்ணினார். ஒரு பெரிய வில்லை நடுவில் முறித்து, முறிந்தது தெரியாதபடி தந்திரமாய்ப் பெட்டிக்குள் வைத்திருந்தார்! இராமன் அந்த வில்லை விளையாட்டாக எடுத்ததும் வில் முறிந்து இரண்டு துண்டாக விழுந்து விட்டது! உடனே, ஜனகர், 'ஐயையோ! எங்கள் குலசம்பத்தாகிய வில்லை ஒடித்து விட்டாயே! ஒன்று, ஒடிந்த வில்லைச் சேர்த்துக் கொடு; இல்லாவிட்டால் என் மகள் சீதையைக் கலியாணம் பண்ணிக் கொள்' என்றார். இராமன் வேறு வழியில்லாமல் சீதையைக் கலியாணம் செய்து கொள்ள வேண்டியதாயிற்று!"

குந்தவி விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டே, "அப்பா! நானும் இராமாயணக் கதை கேட்டிருக்கிறேன், நீங்கள் சொல்லுவது புதிய இராமாயணமாயிருக்கிறதே!" என்றாள்.

சற்று சிரிப்பு அடங்கிய பிறகு அவள், "ஆனால் உங்களுக்கு அதைப் பற்றிக் கவலை வேண்டாம், அப்பா! நான் கலியாணமே செய்து கொள்ளப் போவதில்லை!" என்று சொன்னாள்.

சக்கரவர்த்தி மூக்கின் மேல் விரலை வைத்துக் கொண்டு, "அது என்ன சமாசாரம்? கலியாணம் உன்னை என்ன பண்ணிற்று? அதன் மேல் ஏன் அவ்வளவு கோபம்?" என்று கேட்டார்.

அப்போது குந்தவி, "கலியாணம் செய்து கொண்டால் நான் உங்களை விட்டுப் பிரியத்தானே வேண்டும்? உங்களை விட்டு விட்டுப் போக எனக்கு இஷ்டமில்லை. உங்களுடனேயே நான் எப்போதும் இருப்பேன்" என்றாள்.

"அப்படியா சமாசாரம், குந்தவி? இன்னொரு தடவை சொல்லு" என்றார் சக்கரவர்த்தி. –

"அதெல்லாம் ஒரு தடவைக்கு மேல் சொல்ல மாட்டேன், அப்பா! நீங்கள் ஏக சந்தக்கிராகி என்பது உலகமெல்லாம் பிரசித்தியாயிருக்கிறதே! ஒரு தடவைக்கு மேல் ஏன் கேட்கிறீர்கள்?"

"ஏ ஆபாத்பாந்தவா! அநாதரட்சகா! இந்த வாயாடிப் பெண்ணைக் கட்டிக் கொண்டு எந்த இராஜகுமாரன் திண்டாடப் போகிறானோ? யார் தலையில் அவ்விதமிருக்கிறதோ? அவனை நீதான் காப்பாற்றியருள வேண்டும்!" என்று சொல்லியபடி சக்கரவர்த்தி தலைமேல் கைகூப்பி வானத்தை அண்ணாந்து நோக்கினார்.

"உங்களுடைய பரிகாசம் இருக்கட்டும். இப்போது யானையை நிறுத்துகிறீர்களா, இல்லையா? இல்லாவிடில் நான் கீழே குதித்து விட்டேனானால் அப்புறம் என்னை ஒரு இராஜகுமாரனும் கலியாணம் செய்து கொள்ள மாட்டான். எப்போதும் உங்கள் பிராணனைத்தான் வாங்கிக் கொண்டிருப்பேன்" என்று குந்தவி சொல்லி எழுந்து நின்று அம்பாரியிலிருந்து கீழே குதிப்பது போல் பாசாங்கு செய்தாள்.

"வேண்டாம், வேண்டாம்; அப்படிப் பட்ட விபரீதம் பண்ணி வைக்காதே!" என்று கூறி, பல்லவ சக்கரவர்த்தி யானைப்பாகனைக் கூப்பிட்டு யானையை நிறுத்தச் சொன்னார்.

யானை நின்றதும், தந்தையும் மகளும் கீழே இறங்கினார்கள். சக்கரவர்த்தி, குதிரையும் பல்லக்கும் கொண்டு வரும்படி சமிக்ஞை காட்டினார். அவை அருகில் வந்ததும், பரிவாரத் தலைவனை அழைத்து, "நீங்கள் நேரே போய் நகர் வாசலருகில் நில்லுங்கள். நாங்கள் அங்கே வந்து சேர்ந்து கொள்கிறோம்" என்றார். பிறகு, குதிரை மீது ஆரோகணித்து இராஜ மார்க்கத்திலிருந்து பிரிந்து குறுக்கு வழியாகப் போகத் தொடங்கினார். இளவரசி ஏறியிருந்த பல்லக்கும் அவரைத் தொடர்ந்து சென்றது.

சக்கரவர்த்தி இம்மாதிரியெல்லாம் எதிர்பாராத காரியங்களைச் செய்வது சர்வ சகஜமாய்ப் போயிருந்தபடியால், அவரைத்



தொடர்ந்து வந்த பரிவாரங்கள் சிறிதும் வியப்பு அடையாமல் இராஜ மார்க்கத்தோடு மேலே சென்றன.

## 5. உறையூர்த் தூதன்

இயற்கையாகப் பூமியிலெழுந்த சிறு குன்றுகளை அழகிய இரதங்களாகவும் விமானங்களாகவும் அமைத்திருந்த ஓர் இடத்துக்குச் சக்கரவர்த்தியும குந்தவி தேவியும் வந்து சேர்ந்தார்கள். அந்த விமானக் கோயில்களை யொட்டி, ஒரு கல்யானையும் கற்சிங்கமும் காணப்பட்டன. இவையும் இயற்கையாகப் பூமியில் எழுந்த பாறைகளைச் செதுக்கிச் செய்த வடிவங்கள்தாம்.

அவற்றுள் யானையின் சமீபமாகச் சக்கரவர்த்தி வந்தார்.

"குந்தவி! இந்த யானையைப் பார்த்தாயா? தத்ரூபமாய் உயிருள்ள யானை நிற்பது போலவே தோன்றுகிறதல்லவா? முப்பது வருஷத்துக்கு முன்னால் இங்கே இந்த யானை இல்லை; ஒரு மொட்டைக் கற்பாறைதான் நின்றது!" என்றார்.

"இந்தக் கோயில்கள் எல்லாமும் அப்படித்தானே மொட்டை மலைகளாயிருந்தன?" என்று குந்தவி கேட்டாள்.

"ஆமாம், குழந்தாய்! இன்று நீயும் நானும் வந்திருப்பது போல் முப்பது வருஷத்துக்கு முன்னால் என் தகப்பனாருடன் நான் இங்கு வந்தேன். உன் தாத்தாவைப் பற்றித்தான் உனக்கு எல்லாம் தெரியுமே? சிற்பம் சித்திரம் என்றால் அவருக்கு ஒரே பைத்தியம்!"

"உங்களுக்குப் பைத்தியம் ஒன்றும் குறைவாயில்லையே?" என்று குந்தவி குறுக்கிட்டாள்.

சக்கரவர்த்தி புன்னகையுடன், "என்னை விட அவருக்குத்தான் பைத்தியம் அதிகம். செங்கல்லினாலும் மரத்தினாலும் அவர் ஆயிரம் கோயில்கள் கட்டினார். அப்படியும் அவருக்குத் திருப்தி உண்டாகவில்லை. என்றும் அழியாத பரம்பொருளுக்கு என்றும் அழியாத கோயில்களைக் கட்ட வேண்டுமென்று ஆசைப்பட்டார். மலையைக் குடைந்து கோயில்கள் அமைக்க விரும்பினார். அந்தக் காலத்திலேதான் ஒருநாள் அவரும் நானும் இந்தப் பக்கம் சுற்றிக் கொண்டு வந்தோம். அப்போது எனக்கு உன் வயதுதானிருக்கும். தற்செயலாக ஆகாசத்தைப் பார்த்தேன். வெண்ணிறமான சிறு சிறு மேகங்கள் வானத்தில் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தன. அந்த மேகங்கள் அவ்வப்போது வெவ்வேறு ரூபங் கொண்டு தோன்றின. ஒரு சிறு மேகம் யானையைப் போல் காணப்பட்டது. அதைப் பார்த்ததும் எனக்கு ஒரு யோசனை தோன்றியது. இந்தப் பாறையண்டை வந்தேன். கையில் கொண்டு வந்திருந்த காவிக் கட்டியினால் யானையின் உருவத்தை இதன் மேல் வரைந்தேன். அதை அப்பா பார்த்துக் கொண்டேயிருந்தார். யானை உருவத்தை நான் எழுதி முடித்ததும் என்னைக் கட்டித் தூக்கிக் கொண்டு கூத்தாடத் தொடங்கினார். 'நரசிம்மா! என்ன அற்புதமான யோசனை உன் யோசனை! இங்குள்ள பெரிய பாறைகளையெல்லாம் கோயில்களாக்கி விடுவோம். சின்னச் சின்னப் பாறைகளையெல்லாம் வாகனங்களாகச் செய்து விடுவோம். இந்த உலகமுள்ள அளவும் அழியாதிருக்கும் அற்புதச் சிற்பங்களை எழுப்புவோம்! என்று வெறி பிடித்தவர் போல் கூறினார். அவ்விதமே சீக்கிரத்தில் இங்கே சிற்ப வேலைகளை ஆரம்பித்தார். அதுமுதல் இருபது வருஷ காலம் இந்தப் பிரதேசத்தில் இடைவிடாமல் ஆயிரக்கணக்கான கல்லுளிகளின் சப்தம் கேட்டுக் கொண்டிருந்தது. நான் வடதேசத்துக்குப் படையெடுத்துப் போன போதுதான் நின்றது..."


இவ்விதம் சொல்லிச் சக்கரவர்த்தி நிறுத்தி ஏதோ யோசனையில் ஆழ்ந்தவர் போல் இருந்தார்.

சற்றுப் பொறுத்துக் குந்தவி, "ஆமாம் அப்பா, இருபது வருஷமாய் நடந்து வந்த சிற்பப் பணியை நிறுத்தி விட்டீர்களே என்ற சந்தோஷத்தினால் உங்கள் பெயரை இந்தப் பட்டினத்துக்கு வைத்தார்கள் போலிருக்

### அருள்வாக்கு

"ச்யாமளா தண்டகம்" என்று காளிதாஸன் செய்திருக்கிற பிரஸித்த ஸ்துதியில் சொன்ன ச்யாமளாதான் மீநாக்ஷி. ச்யாமளா, மாதங்கி, மந்த்ரிணி என்றெல்லாமே மந்திர தந்திர சாஸ்த்ரங்களில் மீநாக்ஷிக்குப் பேர். ஸங்கீதத்துக்கு அதிதேவதையாக எப்போதும் மாணிக்ய வீணையை மீட்டிக் கொண்டிருக்கிறவள் அவள். கானாம்ருதத்தாலேயே மோக்ஷாம்ருதத்தை ஸாதித்துத் தருகிறவள்.

"ஓங்கார பஞ்ஜர, சுகீம்" என்று ஆரம்பிக்கிற "நவரத்னமாலிகை"யில் அம்பிகையை ஸங்கீத தேவதையாகத்தான் வர்ணித்திருக்கிறான். "ஓங்காரம் என்ற கூட்டிலிருக்கும் கிளி" என்று அம்பிகையை வர்ணிக்க ஆரம்பிக்கிறான். மதுராபுரியில் மீநாக்ஷி வீணாதாரிணியாக இல்லாமல், கிளியைத்தான் கையில் வைத்துக் கொண்



• மீநாக்ஷி கல்யாணம்

டிருக்கிறான்!

முத்துஸ்வாமி தீக்ஷிதருக்கு எப்பேர்ப்பட்ட அநுக்ரஹத்தை மீநாம்பிகை செய்தாள்! தீபாவளி அமாவாஸ்யை அன்று அம்பாளுக்குப் பூஜை பண்ணிவிட்டு 'மீநாக்ஷி' என்று அவர் மனமுருகிப்பாடிக் கொண்டே போனார். பச்சைப் பசேல் என்று பரம குளிர்ச்சியாகப் பிரகாசிக்கிற அம்பாளின் ஸ்வரூபத்தை "மரகதச் சாயே" என்று சொல்லி, "மீன லோசனி, பாச மோசனி" என்ற வார்த்தைகளை அவர் கானம் பண்ணிக் கொண்டிருக்கிறபோதே அவருடைய ஸம்ஸார பாசத்தை அம்பாள் நீக்கித் தன் பாதாரவிந்தத்தில் சாச்வதமாகச் சேர்த்துக் கொண்டு விட்டாள். ஸங்கீதத்துக்கே அதிதேவதையாக இருக்கப்பட்ட மீநாக்ஷி, தீக்ஷிதரின் நாதோபாஸனைக்குப் பலன் தந்து விட்டாள்.

**— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.**

கிறது!" என்று சொல்லி விட்டுக் குறும்பாகப் புன்னகை செய்தாள். அதைக் கேட்ட சக்கரவர்த்தி உரக்கச் சிரித்து விட்டு, "இல்லை, அம்மா! இந்தச் சிற்பபுரி தோன்றுவதற்கு நான் காரணமாயிருந்தபடியினால் என் தகப்பனார் இப்பட்டினத்துக்கு என் பெயரை அளித்தார். 'நரசிம்மன்' என்ற பெயருடன் எத்தனையோ இராஜாக்கள் வரக்கூடும். 'மாமல்லன்' என்ற பட்டப் பெயர் வேறொருவரும் வைத்துக் கொள்ள மாட்டார்கள் என்று யோசித்து, அப்பா இந்தப் பட்டினத்துக்கு 'மாமல்லபுரம்' என்று பெயர் சூட்டினார். அப்பாவுக்கு என் மேலேதான் எவ்வளவு ஆசை!" என்று கூறி, மறுபடியும் யோசனையில் ஆழ்ந்தார்.

"ஆமாம்; ஆனால் தாத்தாவுக்கு உங்கள் பேரில் இருந்த ஆசையில் நூறில் ஒரு பங்கு கூட உங்களுக்கு என் அண்ணா மேல் கிடையாது. இருந்தால், அண்ணாவைக் கப்பல் ஏற்றிச் சிங்களத்துக்கு அனுப்புவீர்களா?" என்று கேட்டாள் குந்தவி.

"குழந்தாய், கேள்! என்னுடைய இளம் வயதில் எனக்கு எத்தனையோ மனோரதங்கள் இருந்தன. அவற்றில் பல நிறைவேறின. ஆனால் ஒரே ஒரு மனோரதம் மட்டும் நிறைவேறவில்லை. கப்பல் ஏறிக் கடல் கடந்து தூர தூர தேசங்களுக்கெல்லாம் போய் வரவேண்டுமென்று நான் அளவில்லாத ஆசை கொண்டிருந்தேன். அதற்கு என் தந்தை அனுமதிக்கவில்லை. நான் இந்தப் பல்லவ சிம்மாசனத்தில் ஏறிய பிறகு கடற்பிரயாணம் செய்வதென்பது முடியாத காரியமாகி விட்டது. எனக்குக் கிடைக்காத பாக்கியம் என் பிள்ளைக்காவது கிடைக்கட்டுமே - என்றுதான் உன் தமையனைச் சிங்களத் தீவுக்கு அனுப்பினேன். இன்னும் எனக்கு எந்தச் சிறு பிள்ளையினிடமாவது அதிகமான பிரியம் இருந்தால், அவனையும் கடற்பிரயாணம் செய்து வரும்படி அனுப்புவேன்" என்றார் சக்கரவர்த்தி.

"அப்படியானால் உங்களுக்கு என்னிடம் மட்டும் பிரியம் இல்லை போலிருக்கிறது" என்று குந்தவி சொல்வதற்குள்ளே, "உன்னைக் கப்பல் ஏற்றி அனுப்ப எனக்குப் பூர்ண சம்மதம், அம்மா! ஆனால் நீ பெண்ணாய்ப் பிறந்து விட்டாயே, என்ன செய்கிறது? ஒவ்வொரு சமயம் நீ பிள்ளையாய்ப் பிறந்திருந்து, உன் தமையன் பெண்ணாய்ப் பிறந்திருக்கக் கூடாதா? என்று எனக்குத் தோன்றுவதுண்டு" என்றார் சக்கரவர்த்தி.

"நான் மட்டும் ஆண் பிள்ளையாய்ப் பிறந்திருந்தால், உங்களை இத்தனை காலமும் இந்தச் சிம்மாசனத்தில் வைத்திருப்பேனா? கம்ஸன் செய்ததைப் போல் உங்களைச் சிறையில் போட்டுவிட்டு நான் பட்டத்துக்கு வந்திருக்க மாட்டேனா? அண்ணாவுக்கு ஒன்றுமே தெரியாது, சாது! அதனால் நீங்கள் சொன்னதும் கப்பலேறிப் போய் விட்டான்" என்று குந்தவி சொல்லிவிட்டு அந்த மலைக் கோயில்களைச் சுற்றி ஓடியாடிப் பார்க்கத் தொடங்கினாள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் சக்கரவர்த்தி, "வா! குழந்தாய்! இன்னொரு சமயம் வந்து சாவகாசமாய்ப் பார்க்கலாம். ஊரில் ஜனங்கள் எல்லோரும் நம்மை எதிர்பார்த்துக்

கொண்டிருப்பார்கள்" என்றதும் குந்தவி அவரண்டை வந்து, "அப்பா! இந்தக் கோயில்கள் இன்னும் அரைகுறையாகத்தானே இருக்கின்றன? மீண்டும் நீங்கள் ஆரம்பிக்கப் போகும் திருப்பணி வேலை இங்கேயும் நடக்குமல்லவா? இந்தக் கோயில்களுக்குள்ளே எல்லாம் என்னென்ன சுவாமியைப் பிரதிஷ்டை செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டாள்.

சற்று தூரத்தில் பல்லக்கும் குதிரையும் ஒரு மரத்தடியில் நிறுத்தப்பட்டிருந்தன. அந்த மரத்தை நோக்கி இருவரும் நடக்கத் தொடங்கினார்கள். குந்தவியின் கேள்விக்குப் பதிலாகச் சக்கரவர்த்தி பின்வருமாறு சொன்னார் :-

"இல்லை, குழந்தாய்! இந்தக் கோயில்கள் இப்படியேதான் பூர்த்தி பெறாமல் இருக்கும். இந்த இடத்தைத் தவிர மற்ற இடங்களில் எல்லாம் வேலை நடக்கும். குந்தவி! ஆயனர் என்ற ஒரு மகா சிற்பி இந்த ஊரில் இருந்தார். அவருடைய தலைமையில்தான் இந்தக் கோயில்களின் வேலை ஆரம்பமாயிற்று. அவர்தான் இவ்வளவு வரை செய்து முடித்தவர். பிறகு, அவர் சில துரதிர்ஷ்டங்களுக்கு ஆளானார்; கொஞ்ச நாளைக்கு முன் சொர்க்கம் சென்றார். அவர் தொடங்கிய வேலையைச் செய்து முடிக்கக்கூடிய சக்தியுள்ளவர்கள் இப்போது யாரும் இல்லை, இனிமேல் வரப் போவதும் இல்லை!"

"ஆயனரைப் பற்றிக் கேட்டிருக்கிறேன், அப்பா! அவருடைய மகள்..?" என்று, குந்தவி சொல்வதற்குள், "அதோ யாரோ குதிரை மேல் வருகிறானே, யாராயிருக்கும்?" என்றார் மகாமல்லர்.

பேச்சை மாற்றுவதற்காகவே அவர் சொன்னபோதிலும் உண்மையில் கொஞ்ச தூரத்தில், ஒரு குதிரை வந்து கொண்டுதானிருந்தது. சக்கரவர்த்தியும் குந்தவியும் மரத்தடிக்குப் போய் நின்றதும், அங்கே குதிரை வந்து நின்றதும் சரியாயிருந்தன.

குதிரை மேலிருந்தவன் விரைவாக இறங்கிப் பயபக்தியுடன் சக்கரவர்த்தியின் அருகில் வந்து ஓர் ஓலையை நீட்டினான்.

"அடியேன், தண்டம்! உறையூரிலிருந்து வந்தேன்! அச்சுத பல்லவராயர் இந்த ஓலையை ஒரு கணமும் தாமதியாமல் சக்கரவர்த்தியின் திருச் சமூகத்தில் சேர்ப்பிக்க வேண்டுமென்று கட்டளையிட்டார்" என்றான்.

சக்கரவர்த்தி ஓலையை வாங்கிக் கொண்டார். அதில் என்ன எழுதியிருக்கிறதென்று பார்க்காமலே தூதனை நோக்கி, "நீ போகலாம்! இதில் அடங்கிய விஷயத்தைப் பற்றிய கட்டளை நேற்றே அனுப்பி விட்டோம்" என்றார்.

தூதன் தண்டம் சமர்ப்பித்து விட்டுத் திரும்பி விரைந்து சென்றான்.

"நன்றாயிருக்கிறது அப்பா, நீங்கள் ராஜ்ய பாரம் செய்கிற இலட்சணம்? ஓலை வந்தால் அதைப் படித்துக் கூடப் பார்க்கிறதில்லையா?" என்று கோமகள் கேட்டாள்.

"என்னுடைய ஞான திருஷ்டியில் உனக்கு நம்பிக்கை இல்லை போலிருக்கிறது! இந்த ஓலையில் என்ன எழுதியிருக்கிறதென்று சொல்லட்டுமா? சோழராஜ குமாரன் விக்கிரமன் இந்தப் புரட்டாசிப் பௌர்ணமியன்று சோழ நாட்டின் சுதந்திரக் கொடியை உயர்த்த உத்தேசித்திருக்கிறான். அவனை என்ன செய்வது என்று தளபதி அச்சுத பல்லவராயன் கேட்டிருக்கிறான். நீ வேணுமானால் படித்துப் பார்!" என்று ஓலையைக் குந்தவியிடம் கொடுத்தார்.

குந்தவி அதைப் படித்து விட்டு வியப்புடன் சக்கரவர்த்தியை நோக்கினாள்.

"உங்களிடம் ஏதோ மந்திர சக்தி இருக்கிறது, அப்பா! அந்த மந்திரத்தை எனக்கும் சொல்லிக் கொடுக்கக் கூடாதா?" என்றாள்.

சக்கரவர்த்தி குதிரையின் மேலும், குந்தவி பல்லக்கிலும் அமர்ந்தார்கள். வழியில் கோமகள், "அப்பா! அந்த இராஜகுமாரனுக்கு என்ன அவ்வளவு அகந்தை? மாமல்ல சக்கரவர்த்தியின் கீழ் கப்பம் கட்டிக் கொண்டு வாழக் கொடுத்து வைக்க வேண்டாமா? அவனை நீங்கள் சும்மா விடக் கூடாது, தகுந்த தண்டனை கொடுக்க வேண்டும்!" என்றாள்.

"ஆமாம், குழந்தாய், ஆமாம்! அவனைச் சும்மா விடப் போவதில்லை. காஞ்சிக்கு அழைத்து வரச் செய்து, நானே தகுந்த தண்டனை விதிக்கப் போகிறேன்" என்றார் சக்கரவர்த்தி.

(தொடரும்)




"பாகவதர் அடுத்த மாதம் அமெரிக்கா போறார் போலிருக்கே...!"

"எப்படிச் சொல்றே?"

"கிருஷ்ணா நீ பேகனே பாரோன்னு பாடறதுக்குப் பதிலா 'கிளிண்டா' நீ பேகனே பாரோன்னு பாடறாரே...!"

- சி. பி. ஸ்ரீதர்

# உத்யோகத்தை உதறினார்; பாகவதராய் மாறினார்!




சூலமங்கலம் வைத்ய நாதபாகவதர்!

டி.கே.எஸ். சகோதரர்கள், தங்களுக்கு ஒரு நாடகம் எழுதித் தர வேண்டும் என்று ஒரு பெரியவரிடம் கேட்டுக் கொண்டார்கள். பெரியவர் கதை- வசனம், பாடல்கள் எல்லாம் எழுதி, மெட்டு அமைத்து, நடன அமைப்பும் சொல்லிக் கொடுத்தார். அதுதான் 'சிவலீலா'. தொடர்ந்து நவாப் ராஜமாணிக்கத்துக்கு 'சக்தி லீலா' எழுதிக் கொடுத்தார். அதுவும் 'சிவலீலா' போலவே தொடர்ந்து பல நாட்களுக்கு மேடையில் சக்கைப் போடு போட்டது.

பெரியவர் இத்தனைக்கும் நாடகத்துறையைச் சேர்ந்தவர் அல்ல!

ஹரிகதைகள் சொல்லும் வித்துவான். தமிழில் பாண்டித்தியம் பெற்றவர். 63 நாயன்மார்களின் கதையை ஹரிகதையாக நிகழ்த்திய ஒரே கலைஞர்! திருவாவடுதுறை ஆதீனம் முன், கண்ணப்பர் கதையைச் சொன்னார்.

"கண்ணப்பர் சரித்திரம் கேட்டுக் 'கண்-அப்பர்' (அப்பு-நீர்) ஆனோம்!" என்றார் சன்னிதானம், கண்ணீர் மல்க.

நாயன்மார்கள் கதை! முழுவதையும் சொன்னதற்காக, பெரியவரை மாயவரத்தில் யானைமீது அமர்த்தி ஊர்வலமாகக் கொண்டு போனார்கள்! 63 நாயன்மார்களின் படமும் கொண்ட தஞ்சாவூர் ஓவியம் ஒன்றை அவருக்குப் பரிசாகக் கொடுத்தார்கள்.

அவர்–

அந்தக் காலத்து எஃப்.ஏ.படித்து, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் மகா கனம் சீனிவாச சாஸ்திரி, சி.ஆர். சீனிவாச அய்யங்கார் போன்றோரோடு ஒரே கால கட்டத்தில் படித்து, இன்ஸ்பெக்டர் ஆஃப் ஸ்கூல்ஸ் என்ற பதவியை ஏற்றுத் தஞ்சைக்குச் சென்று வேலை பார்த்துக் கொண்டிருந்தார் வைத்தியநாத பாகவதர்.

ஒரு நாள் தஞ்சாவூர் கிருஷ்ணய்யர் என்ற ஹரிகதை நிபுணர், கதை சொல்லக் கேட்டார். அவ்வளவுதான். மராத்தி பாடல்களும், தமிழ் உரையும் இணைந்து அவர் வழங்கிய சொற்பொழிவு, வைத்தியநாத பாகவதரைச் சிந்திக்க வைத்தது.

"நாம் எதற்காக இப்படி ஓர் உத்தியோகம் பண்ணிக் கொண்டு இருக்க வேண்டும்? இறையுணர்வை வளர்ப்பதைவிட சிறந்த கல்வி ஏது?" என்று வேலையை உதறினார்.

சம்ஸ்கிருதம், மராத்தி, தெலுங்கு என்று எல்லா மொழிகளிலும் ஹரிகதைக்கான நிருபணங்கள் கற்றுத் தேர்ந்து, முழு நேர ஹரிகதை விற்பன்னராகவே வாழ்க்கையை அமைத்துக் கொண்டார்.

"இன்றைக்கு "இன்ன" கதையைச் சொல்லப் போகிறாயாமே? ரெண்டு மராட்டிப் பாடல்களைச் சேர்த்துச் சொல்லுகிறாயா?" என்று புல்லாங்குழல் சரபசாஸ்திரிகள் வைத்தியநாத பாகவதரைக் கேட்பதுண்டு.

"சொல்லுங்கள், சேர்த்துக் கொள்ளுகிறேன்!" என்பார் வைத்தியநாத பாகவதர்.

அப்போதே உருவாக்கி அவருக்குச் சொல்லிக் கொடுப்பார் சரபசாஸ்திரிகள்! உடனே பிடித்துக் கொண்டு தூள் கிளப்பி விடுவார் பாகவதர்!

அவருடைய புகைப்படத்தை இம்மாதம் ஸ்ரீகிருஷ்ணகான சபையில் திறந்து வைக்கிறார் தஞ்சாவூர் சங்கரய்யர். ஸீஸனுக்குப் பொருத்தம்தானே!

— எஸ்.வி.என்

எல்லா முகத்திலும் உற்சாகம், ஆர்வம்!

இன்னும் சற்று நேரத்தில் 'ஃப்ளாட்'டின் சாவி கையில் கிடைக்கப் போகிற உற்சாகம்...!

எனக்குள்ளும் அதே பொங்கல். ஆனால்..? ...இந்த உற்சாகம் வேறுபட்டது. இது ஜெயித்து விட்ட உற்சாகம்... தோல்வியே கண்டறியாதவள் இந்த கமலாம்பாள் என்பதை... ஒன்ஸ் மோர் காட்டியதன் உற்சாகம்...!

இனி... நான் தனிமரம் இல்லை...! நினைந்து மரங்களைப் பெயர்த்து எடுத்து வந்து என்னைச் சுற்றிலும் நட்டுவிட்டேன்! ஒற்றை மரம் இருந்த இடத்தை, ஒரு தோப்பாக மாற்றிவிட்டேன். பசுந்தோப்பாக...!

கூப்பிட்டார்கள். முதல் ஆள் எழுந்து போனார். கையெழுத்துப் போட்டார்... சாவியை வாங்கினார். கண்ணில் ஒற்றிக் கொண்டார்... அப்புறம் வரிசையாகக் கைகுலுக்கல்கள்... அறிமுகங்கள்.

"இவங்கதான் இந்த வீட்டு சொந்தக்கார அம்மா. அதாவது, பழைய வீடு. இடிச்சதில்லே... இந்த இடத்தோட..."

"நீங்கதானா அது?" ஒரு புருவத் தூக்கல் கேட்டது. "நானே, உங்களைப் பார்க்கணும்னு நினைச்சேன். கேட்கணும்னு நினைச்சேன். ஆமாம், கோட்டை மாதிரி இருந்ததே வீடு, இதைப் போய் விற்கணும்னு தோணித்தே? இடிக்கணும்னு தோணித்தே....! எப்படி மனசு வந்தது?...ஏ...அப்பா...! எப்பேர்ப்பட்ட கட்டடம்...! இடிக்கிற அன்னிக்கு சற்று நேரம் நின்னு பார்த்தேன்... ச்சு... 'கிண்...கிண்'ன்னு கடப்பாரை அதிலே படறபோது என் மேலேயே விழற மாதிரி இருந்தது. தாங்க முடியல்லே! ...அழுகையா வந்தது... எனக்கே இப்படி இருந்தா, வீட்டுச் சொந்தக்காரருக்கு எப்படி இருக்கும்னு நினைச்சுண்டேன். அன்னிக்குப் பார்க்க முடியல்லே... கேட்க முடியல்லே, இன்னிக்கு பார்த்துட்டேன்...! கேட்டுட்டேன்...!"

எதற்காக விற்றேன்...? எதற்காக இடித்தேன்? ...உன்னை மாதிரி பஞ்சை பரதேசியையெல்லாம் எதற்காக இங்கே கொண்டு வைத்துக் கொள்கிறேன்...?

கழுத்தில் 'வெடக்'கென்று புதிய மஞ்சள் கயிறு. புதுக்கருக்கில் மின்னுகிற நகைகள். எல்லாம் புதிதாக. புதிய இடமாக, புகுந்த இடமாக...

"...அசக்காதே..." காதோரம் மாமியார் கிசுகிசுத்தாள்... பின்னலை இடது கையால் இறுகப்பிடித்துத் தலையை அழுந்தச் சீவி... நாலைந்து தாழம்பூ வைத்துத் தைத்து... முகத்தை அலம்பிக் கொண்டு வந்து நமஸ்காரம் செய்கையில், 'சட்'டென்று தன் கழுத்தில் இருந்த முத்துமாலையை எனக்குப் போட்டாள்.

"சம்சாரி வீட்டிலே மூத்த மாட்டுப் பெண் என்கிறது தாய் ஸ்தானம், தெரிஞ்சுக்கோ. கீழ்க்கடையில் கொழுந்தன், நாத்தனார், எல்லாரையும் பார்த்துண்டு... அரவணைச்சுண்டு போகணும்..."

திடுக்கிட்டது! மூக்கில் சளி எட்டிப் பார்க்க நாத்தனார்! டிராயர் போட்டும் போடாமலும் கொழுந்தன்!

கூடத்தில் கிழிசல் பாயில், இழுத்துப் பறித்துக் கொண்டு கிழம் ஒன்று கிடந்தது. நாற்றம்! அசிங்கம்! ஒன்று விட்ட சித்தியோ, அத்தையோ... சொன்னார்கள்.

இத்தனையும் என் தலையிலா?

"சரஸ்வதியம்மா...!"

ரேழியில் குரல் கேட்டது. உடன் காலடி சத்தம். "சொன்னாலும் சொல்லாட்டாலும் அய்யாசாமி மகராஜன். சந்தேகமேயில்லே! வாசல்லே பார்த்தேன். 'உள்ளே போய்ச் சாப்பிட்டுப் போங்கோன்'னான்! யாருக்கு இப்படி ஒரு மனசு வரும்...? இந்தக் காலத்திலே...!"

யார் என்று புரியவில்லை. தூரத்து உறவா? தெரிந்தவர்களா...! வருபவர்களுக்கெல்லாம் இலை போட்டு தண்ணீர் தெளிக்க, இது என்ன வீடா....? சத்திரமா...?

'இது நமக்குச் சரிப்பட்டு வராது. அதிக நாட்கள் இந்த வீட்டில் தங்கக்கூடாது' என்று முடிவு எடுத்தேன்.

அதை அமுலாக்க - இவரை சரிக்கட்ட ஒரு வருஷம் ஆயிற்று!

மாமியார் முகத்தில் வலி தெரிந்தது...! அடி வாங்கின வலி. நம்ப முடியாமல் மீண்டும் மீண்டும் கேட்டாள்.

"ஏண்டா...! வெட்டிண்டு போறியா? நிஜமாவா? ம்.. நாலு பேர் சேர்ந்து கூட்டா குடும்பம் நடத்தறதுதாண்டா அழகு. அதான் நம்ப வழி முறை. ஒரு பெரியவா.... பெருந்தலை... உற்றார்... உடன்பிறந்தான்னு நமக்குள்ளே ஒரு உறவுப் பின்னல் இருக்கு. அது அறுந்து போகக் கூடாது. வாழ்க்கைன்னா ஒரு கஷ்டம் வரும், நஷ்டம் வரும். அந்த சமயம் சாஞ்சுக்க ஒரு தோள் வேணும். ஆள் வேணும்....! மனுஷா வேணும்... தெரிஞ்சுக்கோ... ஒரு நல்லது கெட்டது... சுகம் துக்கம்... எல்லாத்துக்கும்... மனுஷா இல்லாம முடியாது! கேளுடா."

இவர் கேட்கவில்லை. முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

"கமலா! நீயாவது சொல்லும்மா. அவன் கிட்டே. 'தனி...தனி'ன்னு இப்படி தனியே போனா எப்படி? இந்தக் குடும்பம் ஒரு சமுத்திரம் மாதிரி...! இத்தன பேர் இருக்கோமே... ஒத்தர்... ஓர்ப்படி... அத்தங்கா... அம்மங்கான்னு ...நீதான் பார்க்கிறியே! சண்டையும்

போட்டிக் கதை — 15

# முள்

ஜி. நாராயணன்

"இந்த 'அபர்ணா ஃப்ளாட்'டிலே மற்ற எல்லாரும் ஒரே குடித்தனம். ஆனா பாட்டி மாத்திரம் தனிக்குடித்தனம். நம்ப எல்லாரும் வெறும் தண்ணி; பாட்டி எண்ணெய் அப்படின்னு...."



உண்டு; சந்தோஷமும் உண்டு. உறவு ஒட்டுதல் எல்லாம் பொம்மனாட்டிகள் கையிலேதான் இருக்கு. அவா மனசு வைச்சா நடக்கும். நீ சொல்லும்மா...!"

சொல்லவில்லை! இது, நான் எடுத்த முடிவு. மாற்றமாட்டேன். தோற்கமாட்டேன்!

அன்றே, இன்னொரு முடிவும் எடுத்தேன். என் மாமியாரைப் போல்... அவள் மாமியாரைப்போல்... பெற்றுத் தள்ளமாட்டேன்!

"பெண்ணோ...பிள்ளையோ... ஒன்றோடு சரி!

ரமேஷ் பிறந்தான். வளர்ந்தான். ஆனால்...? குணம்...? முரட்டு குணமாகப் போய்விட்டது...! யாருக்கும் அடங்காத குணம். பிடிவாத குணம். அடம்பிடிக்கிற பிடிவாதம்!

"நீதான் தனியே வந்தே, குழந்தையையும் அப்படியே வளர்க்கணுமா? இப்ப நம்ப என்ன, ஆள் இல்லாத தீவுலியா இருக்கோம்? நடுக்காட்டிலியா இருக்கோம்? ரிஷிய சிருங்கர் வளர்ந்தமாதிரி, இவனை வளர்த்திருக்கியே...! ஒரு அக்கா... தங்கை... தம்பின்னு இருந்தா பாசம் வரும், நேசம் வரும்; விட்டுக் கொடுக்கிற தன்மை வரும்; ஒத்துப் போகிற குணம் வரும். பிறத்தியாருக்குக் கொடுக்கணும்னு எண்ணம் வரும். இப்ப எல்லாம் எனக்கே எனக்கேன்னு அவன் கேட்டதையெல்லாம் கொடுத்து குட்டிச்சுவராக்கி....



"எங்க சபாவில் மட்டும் பாட வருவதற்கே ஏன் பயப்படறாங்க. தெரியலியே...!

"முதலில் உங்க செக்ரட்டரியை மாத்துங்க சார்... அவர் 'கப்புடு' சாயல்லே இருக்கறதாலேதான் யாருமே வரமாட்டேங்கறாங்க..."

- சி.பி.ஸ்ரீதர்

மாமியார் சொன்னதன் முழு அர்த்தமும் அப்பொழுது புரியவில்லை! வயதானால் சரியாகிவிடுவான்... ஆகிவிடும். நம்பிக்கை இருந்தது. ச்சு....

கல்லூரியிலிருந்து ஒருநாள் சாயந்திரம் சீக்கிரமே வந்தான். புத்தகங்களை விட்டெறிந்தான். செருப்பு ஒரு பக்கம் பறந்தது. அறைக்குள் சென்று கதவை அடைத்துக் கொண்டான். சாப்பிட வரவில்லை. காலையில் எழுந்தும் வரவில்லை. கதவைத் திறக்க வில்லை.

...உடைத்துப் பார்த்தால்...

தூக்கமாத்திரையை விழுங்கி இறந்ததாக... அடுத்த நாள் பேப்பர் சொல்லிற்று!

அந்த சோகம் இவரையும் கொண்டு போக...

ஒற்றை மரமாக நின்று போனேன். வாழ்க்கையில் ஒரு உப்பும் இல்லை; சப்பும் இல்லை. தனியே வசிப்பது பல சங்கடங்களைத் தோற்றுவிக்க...

"...'தனி தனி'ன்னு பறந்தியே! ஒருத்தரையும் அண்டவிடாம அடிச்சியே! உன் இஷ்டம் போல ஆயிடுத்து...! ஒண்டியா கொட்டு கொட்டுன்னு இந்த வீட்டைக் காத்துண்டு இரு! பூதம் காக்கிற மாதிரி நன்னா இரு!" மாமியார் குரல் போல் இருந்தது. சிரித்தது!

"நானா...? தனியாவா...? பூதமா?" உடம்பைச் சிலிர்த்துக் கொண்டேன். வீட்டைப் பார்த்தேன்; யோசித்தேன். இடிக்க வைத்தேன், கட்டவைத்தேன். தோல்வியா... எனக்கா...? ஹ!..." இல்லாத மாமியாரிடம் சவால் விட்டேன்!

மாவிலைத் தோரணங்கள், இழைக்கோலம், செம்மண், கணபதி ஹோமம்.

"...ஏண்டா...! மேலே இருக்கிற கூரையும் உனக்குச் சொந்தமில்லேன்னு சொல்றே...! கீழே இருக்கிற தரையும் சொந்தமில்லே...! பக்கத்திலே இருக்கிற சுவரும் சொந்தமில்லே. இப்படி லட்ச லட்சமா கொட்டி... ஃப்ளாட்' வாங்கியிருக்கியே, எது சொந்தம்னு நெனச்சு வாங்கியிருக்கே?"

அசட்டு கேள்விகள், பதில்கள். வாக்கு வாதங்கள்... இரைச்சல், அதுவும் இந்தக் குழந்தைகள் போடுகிற சத்தம்! ஆட்டம், பாட்டம், ஓட்டம், சே...!

காலிங்பெல் அடித்தது. திறந்தால்... எதிர் 'ஃப்ளாட்'காரி நின்றிருந்தாள். சிரித்தாள்.

"...பாட்டி...! ப்ளீஸ்... ஒரு சின்ன 'ஹெல்ப்' வேணும்!"

"...என்ன...?"

" 'காஸ்' ஆயிடுத்து. போன் பண்ணியிருக்கேன். 'கட்டாயம் கொண்டு வரேன்'னு சொல்றான்.. எப்பவும் கௌரி மாமி வாங்கி வைப்பா, இப்ப இல்லே. ஊருக்குப் போயிருக்கா. ம்... இதற்காக ஒரு நாள் லீவு எடுக்கணுமா...? அநாவசியமா...? யோசனையா இருக்கு...வாட்ச்மேன்கிட்டே கேட்டேன்... சாவியை உங்க கிட்டே கொடுத்தால் திறந்து வாங்கி வைச்சுடறேன்னு சொல்றான்..."

"எத்தனை மணிக்கு வருவான்...?"

"தெரியாது. என்ன ஒரு பதினோரு மணி சுமாருக்கு...?

"அப்ப. நான் வெளியிலே போகணும்!"

"இந்த வெய்யிலிலா? மண்டையை உடைக்கிற மாதிரி அடிக்கிறது!"

பதில் சொல்லவில்லை. அந்த மௌனமே

முடியாது என்று சொல்லிற்று. நீ வைச்ச ஆளா? என்று கேட்டது!

"பரவாயில்லே. 'செவன்'லே கேட்கிறேன்..."

சிரித்தான். எதற்கெடுத்தாலும் சிரிப்பு! 'முடியாது' என்று முகத்தில் அடித்தாற்போல் சொன்னதற்கு பல்லைக் கடிக்க வேண்டாமோ! கோபப்பட வேண்டாமோ? என்ன சிரிப்பு வேண்டிக்கிடக்கிறது சிரிப்பு!

**மீ**ண்டும் அழைப்பு மணி! எதிரே... ஒரு மாமி... நிலைப்படியோரம் ஒதுங்கி நின்றாள்.

"...'செவன்'லே இருக்கானே சுவாமி நாதன்..! அவனோட அம்மா நான். வந்து என் சம்பந்தி வந்திருக்கா. பெண்ணோட மாமியார். அம்பத்தூர்லேர்ந்து யாரையோ பார்க்க மாம்பலம் வந்தாளாம். அப்படியே இங்கேயும்... திடீர்னு வந்து நிக்கறா. காப்பி கலக்கலாம்னு அடுப்பிலே பாலை வைச்சேன்! 'பட் பட்'ன்னு பட்டாக வெடிக்கும் பாருங்கோ... அப்படி ஒரு சத்தம். அத்தனை பாலும் திரிஞ்சு போச்சு! உங்ககிட்டே அரை பாக்கெட் இருந்தால் கொடுங்கோ, சாயந்திரம் பால்காரி வந்ததும்...!

"இல்லியே..."

"இருக்கும்னு சொன்னானே...!"

"யாரு...?"

"வந்து...ம்... பாட்டி எக்ஸ்ட்ரா வாங்கறா! எப்பவும் இருக்கும்னு..."

"ச்சு..."

"அவா சம்பந்தி. அதான் இத்தனை தூரம் கேட்கிறேன். கொடுத்தால் உபகாரமா..."

"இல்லியே...! நான் என்ன பண்ணுவேன்?"

உபகாரமாம் உபகாரம்! இது என்ன பிடுங்கல்...? பாலைக் கொண்டா... மோரைக் கொண்டா... என்று! இவர்களுக்குப் பால் சப்ளை செய்யவா நான் இங்கு இருக்கிறேன்..?

**சா**யந்திரம் நாலு மணிக்கு மீண்டும் கதவில் லேசான தட்டல்- பிராண்டல்... திறந்தால்...?

ஒரு குழந்தை நின்றிருந்தான்...! நான்கு ஐந்து வயதிருக்கும். முதுகில் புத்தகப்பை இருந்தது.

"பாட்டி தாகமா இருக்கு. தண்ணி வேணும்..."

"ஏன்... உங்க வீட்டிலே இல்லியா...?"

"...வீடு பூட்டியிருக்கு. அம்மா ஆபிசிலேர்ந்து வரல்லே. எனக்கு ஸ்கூல் விட்டாச்சு. தாகமா வரது."

"அப்படியே நில்லு. 'ஷூ' காலோட உள்ளே வராதே! எத்தனை புழுதி! மண்ணு... சே...!"

குழந்தை அப்படியே உட்கார்ந்தான். புத்தக பாரத்தை இறக்கி வைத்தான். இரண்டு கைகளையும் சேர்ந்து, மூச்சைப் பிடித்து,



வேகமாக இழுத்து ஒவ்வொரு ஷூவாகக் கழற்றினான். உள்ளே வந்தான்...

"இழே சிந்தக்கூடாது- பாரு! இப்பவே மேலே வழிஞ்சு, சொட்டி...!"

"சாரி...பாட்டி!" தம்ளரை மேஜை மேல் வைத்தான். "அம்மா வரவரைக்கிலும் இப்படி இங்கேயே உட்கார்ந்துக்கட்டுமா?"

உட்கார்ந்தான். சுற்று முற்றும் எதையோ தேடினான்.

"எங்காத்திலே பாட்டி இருக்கா. தாத்தாவும் இருக்கா. உங்காத்திலே தாத்தா இல்லியா...?"

"இல்லே..."

"...எங்கே...?"

"...'ஓ' போயிட்டா....! டாட்டா காட்டிட்டு...! பெரிய டாட்டா...!"

"தம்பி பாப்பா இருக்கா...?"

"இல்லை..."

"எங்காத்திலே இருக்கே! சேப்பா...! அழகா!"

எழுந்தான். சாக்ஸ் காலுடன் வீட்டைச் சுற்றிப் பார்த்தான்.

"அப்ப தனியாவா இருக்கே பாட்டி! நிஜமாவா?"

"...ம்..."

"அதான் அம்மா சொன்னா, -பாட்டி 'தனிக்குடுத்தனம் பண்றாங்கன்னு..."

"...என்னது...?"

"இந்த 'அபர்ணா ஃப்ளாட்' டிலே மற்ற எல்லாரும் ஒரே குடித்தனம். ஆனா பாட்டி மாத்திரம் தனிக்குடித்தனம். நம்ப எல்லாரும் வெறும் தண்ணி; பாட்டி எண்ணெய் அப்படின்னு...."

'பளா'ரென்று அறை விழுந்த மாதிரி இருந்தது!

வெற்றி என்று எதை நினைத்தேன்?

சுற்றிலும் மரங்களைக் கொண்டு வந்து வைத்ததையா? அவை கலகலப்பை ஏற்படுத்தியதையா? ஆனால்...? நான்...? இவ்வளவு பசுமைக்கும் அசைவுக்கும் நடுவே வெறும் கட்டையாகக் கிடந்திருக்கிறேன்! காய்ந்த கட்டையாக தனிக்கட்டையாக...!

இவ்வளவு மனிதர்கள் இருந்தும், கலகலப்பு இருந்தும் சந்தோஷம் இருந்தும்... தனிமைப்பட்டுப்போன உணர்வு என்னை விட்டு நீங்கவில்லையே...? போக வில்லையே...?

போகாது...!

வேம்புக்குத் தேன் பாய்ச்சி வளர்த்தாலும், வேப்பிலைக் கசப்பு மாறாது! போகாது...!

கசப்பு என் குணத்தில் இருக்கிறது. தனிமை என் மனத்தில் இருக்கிறது.

உட்கார்ந்தேன்.

எந்த இடத்தில் நான் பாதை மாறிப் போனேன்?

யோசிக்க ஆரம்பித்தேன்.

## கனவு மெய்ப்படும் - 15

# எது பொய்?

### சுகிசிவம்

'எழுந்து நில்', 'போராடு' என்கிற மகா வாக்கியத்தோடு கீதையின் நான்காம் அத்தியாயம் நிறைவு பெறுகிறது. போராட்டம், உலக வாழ்வில் தவிர்க்க முடியாதது. ஆனால், எங்கே? எப்படி? என்பதுதான் போராட்டத்தின் தரத்தை - நியாயத்தை நிர்ணயிக்கிறது.

ஆயுதத்தைக் கையில் ஏந்தி, அடுத்தவரைக் குறிவைத்து நடத்தும் போராட்டம் ஒருவகை. அறிவைக் கையில் எடுத்து அறியாமையைக் குறிவைத்து, தன்னைச் சீர் செய்யத் தன்னோடு தான் செய்யும் ஞானயுத்தம் மறுவகை. இந்த இருவகைப் போருக்கும் அருச்சுனனைத் தகுதி செய்கிறார் கண்ணன். தனக்குள் நிகழ்த்திய போரின் விளைவாக ஆத்ம ஞானம் கைவரப் பெற்றவர்கள் சமுதாயப் போர்க்களங்களில் குதிப்பதால் (அவசியம் குதிக்க வேண்டும்) உலகம் உருப்படும் என்பதே கீதையின் லட்சியம்.

இத்தகைய ஞானம் கைவரப் பெற்ற ஞானவீரர்களே, இலட்சிய இளைஞர்களே இன்றைய இந்தியாவின் உடனடித் தேவை. இந்தியாவில் நிர்மாணப் பணிகளுக்கு இத்தகைய சத்யாகிரகிகள், அஹிம்சைப் போராளிகள் உருவாக வேண்டும் என்றுதான் காந்தியடிகளும் வினோபா பாவேயும் ஆசிரமங்கள் அமைத்தனர். தியாகிகளை உருவாக்கினர்.


ஆனால் இந்திய விடுதலைக்குப் பிறகு பொது வாழ்வில் நேர்மையின்மை கடமை உணர்வற்ற காகவெறி, தனி வாழ்வில் மனச்சாட்சியற்ற ஒழுக்கக் குறைபாடுகள் மலியத் தொடங்கின. இந்தியாவைப் புதுப்பிக்க மனிதப் பண்பில் நம்பிக்கை உடைய ஒவ்வொரு மானுடனும் இந்த அகப் போராட்டத்தை இப்போதே தொடங்க வேண்டும். இந்தப் போரில் வெற்றி பெற்ற ஞான வீரர்கள் சமுதாயத் தீமைகள் மீதான தங்கள் யுத்தப் பிரகடனத்தை உடனடியாக அறிவிக்க வேண்டும்.

'நான் யார்?' - இக் கேள்வியே ஞானம் பிறக்கும் வழி. ஆனால் ஒரு வேடிக்கை... இந்தக் கேள்வி நமக்குப் பிறக்கும் முன்பாகவே நமக்கு இரண்டு பிள்ளைகள் பிறந்து விடுகிறார்கள்! பிறகு பிள்ளைகள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லவே நமக்கு நேரம் போதவில்லை... அப்படி இருக்க, இந்தக் கேள்விக்கு விடை எப்படி கிடைக்கும்?

நம்மில் பெரும்பாலோர் உடம்பையே 'நான்' என்று கருதுகிறோம். இது பொய்... பெரிய பொய்... உடம்பு அழியக் கூடியது. அழியாதது எதுவோ அதுதான் மெய். சத்தியம். ஆனால் தமிழில் உடம்பை மெய் என்று அழைக்கிறோமே...! அது தமிழின் தவறா? அல்லது தமிழன் தவறா? இரண்டும் இல்லை. இலக்கணப்படி அப்படி அழைப்பது 'தானியாகு பெயர்' எனப்படும்.

விளக்குமாற்றைத் தலையில் வைத்து விற்றுக் கொண்டு போகும் பெண்ணை 'ஏ... விளக்குமாறு..' என்று அழைத்தால் தவறில்லையே.. அவர் கோபப்பட மாட்டார். அவர் தாங்கி நிற்கும் பொருள் (விளக்குமாறு) அவருக்கே பெயராகி வந்தது.. ஆகுபெயர்... அதுவும் தானியாகு பெயர். தீபம் என்ற நெருப்புச் சுடரைத் தாங்கி நிற்கும் பித்தளைத் தண்டை விளக்கு என்கிறோம். பித்தளைத் தண்டு எதையுமே விளக்காது. அதைத்தான் புளி போட்டு விளக்க வேண்டும். அதன் தலையில் எரியும் தீபம்தான் இருளை விலக்கி, இது இன்ன பொருள் என்று பொருளை விளக்கி விளக்காக நிற்கும். ஆனால் விளக்கு ஜ்வாலையைத் தலையில் தாங்கும் தண்டு விளக்கு என்று பெயர் பெற்றது.

அது போல் மெய்யானது ஆன்மா. அழியாத அந்த ஆன்மாவைத் தாங்கும் அழிகிற உடம்பு மெய் எனப்பட்டது. அது தானியாகு பெயர். "ஆன்மா அழியாதது. ஆயுதங்கள் அதை வெட்டாது. நெருப்பு அதை எரிக்காது. நீர் நனைக்காது. காற்றும் அதனை உலர்த்தாது". (அத் 2 சுலோ 23); "இவ்வாத்மா பொறிகளுக்குத் தென்படாதது; சிந்தனைக்கு எட்டாதது; மாறுபடாதது; இவ்வாத்மாவின் உண்மையை அறிந்து துயரத்தில் இருந்து வெளியில் வா" (அத் 2 சுலோ 25) என்று அர்ச்சுனனை அழைக்கிறார் பகவான். ஆன்மாவே நான் என்ற மெய்யுணர்வு பெற்றவர்கள் துன்புறுவதும் இல்லை. அச்சப்படுவதும் இல்லை. கம்பீரமாக என்றைக்கும் வாழ்கிறார்கள்.



# து மெய்?

ஆசார்ய வினோபாவின் வினாக்களைக் கொஞ்சம் கவனியுங்கள். நம்மை அவர் விசாரிக்கிறார். "கணந்தோறும் கணந்தோறும் மாறுவதும் எத்தனை முறை சுத்தம் செய்தாலும் அழுக்கு அகலாத உடல் தானா நீ? அது அசுத்தமானது...! நீ அதைக் கழுவுவோன். அது நோய்மலிந்தது...! நீ அதற்குச் சிகிச்சை செய்வோன். அது எண் சாண் இடத்தை ஆக்ரமிப்பது...! நீ மூவுலகங்களிலும் சுற்றித் திரிபவன். அது தினமும் மாறுவது! நீ அதன் மாறுபாட்டை வேடிக்கை பார்ப்பவன். அது சாகப் போவது! நீ அதன் மரணத்திற்கு ஏற்பாடு செய்பவன். உனக்கும் அதற்கும் உள்ள வேற்றுமை இவ்வளவு தெளிவாக இருந்தும் நீ ஏன் அதற்குள் ஒடுங்கிக் கொள்ள நினைக்கிறாய்?" இந்தக் கேள்விக்கணைகள் எத்தனையோ பூட்டுக்களைத் திறக்கும் சாவிக் கொத்து என்பது என் கருத்து.

ஒரு காலத்தில் குழந்தையாக இருந்தோம். பிறகு வாலிபப் பருவம் எய்தினோம். உடம்பில் இருந்த குழந்தைப் பருவ வெளிப்பாடுகள் மரித்துப் போய் வாலிபம் கவிதை எழுதியது. வாலிபம் மரித்துப் போய் முதுமை கட்டுரை எழுதும் காலம் ஒன்று வரத்தான் போகிறது. குழந்தை, வாலிபம், முதுமை என்ற இடிபாடுகளுக்கிடையில் ஒன்றே ஒன்று சேதப்படாமல் இருக்கிறது அது ஆன்மா.

பத்துப் பன்னிரண்டு ஆண்டுகட்கு முன்பு நாம் பார்த்த ஒருவரை இப்போது பார்த்தால் அடையாளம் தெரிவதில்லை. அவருடைய நேற்றைய உடம்பு எங்கே போனது? அது கொஞ்சம் கொஞ்சமாகச் செத்துப் போனது. அதுகுறித்து நாம் கவலைப் பட முடியுமா? உடம்பில் கொஞ்சம் கொஞ்சமாக நிகழும் மரணம் ஒரு நாள் பெருமளவில் நிகழ்கிறது. பாழடைந்த பழைய வீட்டை விட்டு விட்டு புது வீட்டிற்குக் குடி போவது போல் ஆன்மா அந்த உடலை உதறி விட்டு புது உடலைத் தேடிப் போகிறது. எனவே மரணம் தாற்காலிகமானது. அது ஓர் இடைக் கால ஏற்பாடு. நம் பயணம் மட்டும் தொய்வின்றித் தொடர்கிறது. எனவே அழியும் சரீரம் நான் அல்ல. அழியாத பொருளே நான்.

தங்கத்தால் ஒரு மோதிரம் செய்கிறோம். மோதிரம் செய்யும் முன்பும் தங்கம் இருந்தது. மோதிரமாகவும் தங்கம் இருக்கிறது. நெருப்பிலிட்டு உருக்கினால் மோதிரம் என்ற உருவம் (உடம்பு) போய் விட்டாலும் தங்கம் தங்கமாகவே இருக்கும். அது போலத்தான் ஆன்மாவும் சரீரத்தோடு இருந்தாலும் இல்லாது போனாலும் அதுதான் அழிவதில்லை.

தன்னை உடம்பாகவே அடையாளம் காணும் சிற்றறிகாரக் கேடர்களாலேயே (இது வள்ளலார் வார்த்தை) உலகில் அநீதிகள், அநியாயங்கள், அக்கிரமங்கள் ஏற்படுத்தப் படுகின்றன. உடம்பின் அழிவு குறித்து அக்கறை காட்டாத ஞானிகளாலேயே தருமம் நிலைநிறுத்தப்படுகிறது.

"என் அன்புக்குரிய எளியவர்களே! நீங்கள் உண்மையில் எது அல்லவோ (நீங்கள் வெறும் உடம்பா? இல்லையே?) அந்த உடம்போடு ஒன்றிப் போவதுதான் அடிப்படையான அறியாமை ஆகும். உடம்பு ஆன்மா அன்று. இருந்தும் அதை ஆன்மாவாக எண்ணுகிறீர்கள். இது என்ன தலைகீழ்ப் பாடம்? இந்த அறியாமையை நீக்குவதற்காக ஞானம் என்ற மருந்தைக் கொடுக்க வேண்டி உள்ளது" என்று கருணையோடு சொல்கிறார் ஸ்ரீசத்யசாயி!



# ஜெ. கச்சேரி!

**துப்புடு**

புரட்சிப் பாடகி, ராக நிதி காத்த வீராங்கனை, சங்கீத தேவதை, சரஸ்வதியின் அவதாரம், டாக்டர் ஜெயலலிதாவின் கச்சேரி நடப்பதாக நாளிதழ்கள் ஒன்று விடாமல் முழுப்பக்க விளம்பரங்கள் முகத்தில் அறையவே, 'கேட்டே விடுவது' என்று புறப்பட்டால், 'இசைத் தெய்வமே, சங்கீத சமுத்திரமே' என்று வழியெங்கும் பேனர் வைத்து விளம்பரம் செய்திருந்தார்கள்! 'வெறும் விளம்பரச் கச்சேரியாக முடிந்துவிடப் போகிறதே' என்ற கவலையோடு மேலே சென்றால், சபாவையே காணோம்! "கட்டவுட்டுகளுக்குப் பின்னால் இருக்குது பாருங்க சார்" என்று ஒரு மகானுபாவர் வழிகாட்ட, உள்ளே போய் ஒரு மூலையாக உட்கார்ந்தேன்.

அன்று கச்சேரியைக் கேட்டவர்கள், 'வெய்ட்'டான கச்சேரியைக் கேட்ட திருப்தியை நிச்சயம் அடைந்திருப்பார்கள். (சாரீரமும் சரி, சரீரமும் சரி, நல்ல வெய்ட்.) பின்னால் அடிக்கடி திரும்பி, உடன்பாடுகிற தோழி சசிகலாவிடம் கிசுகிசுக்கிற பாணியே புதிசு. அதிலும், 'நிதி சால சுகமா பாடட்டுமா?' என்று புரட்சித் தலைவி கேட்க, 'வேண்டாம், நமக்கு நிதி சால சுகம்தான்!' என்று தோழி சிரித்ததும் தெளிவாகவே அடியேன் காதில் விழுந்தது.

அடுத்ததாகக் குறிப்பிட வேண்டிய அம்சம் : அமைச்சர்களும், வாரியத் தலைவர்களும் முதல் இரண்டு வரிசைகளில் அடக்க ஒடுக்க மாக அமர்ந்தபடி கச்சேரியை ரசித்த விதம் தான். கண்ணப்பனும், செங்கோட்டையனும் கழுத்தை ஆட்டிய ஆட்டலில் சுளுக்கு ஏற் பட்டிருந்தால் ஆச்சரியமே இல்லை.

இனி, கச்சேரிக்கு வருவோம் :

நீல கண்ட சிவனின் பைரவி ராகக் கீர்த்தனையை விஸ்தாரமாக எடுத்துப் பாடிய போது தூக்கிவாரிப் போட்டது. கேட்பது என் காது தானா என்று காதை (மட்டும்) கிள்ளிப் பார்த்துக் கொண்டேன். அதிலும் சரணத்தில்,

'நான் என்ற ஆங்காரப் பேய் சண்டை
கூட்டுதே
பேச்சியான கோபமதை நிலை நாட்டுதே'
யை

நிரவல் பண்ணியபோது, சாகித்தியப் பொருத்தத்தை எண்ணி எண்ணிப் பார்த்து மகிழ்ந்து போனேன். பொருத்தமான சாகித்யம் மட்டுமல்ல. அழுத்தமான நிரவல். சுவரப் பிரஸ்தாரங்கள் ஒவ்வொன்றும் பின்பாட்டு சசி, உடல் தெரியாமல் அணிந்திருந்த நகைகளின் வைரங்களைப் போல் டால் அடித்தன.

'யாரென்று உனை எண்ணினாய்? என்னிடம் நடக்குமோ உன் பிடிவாதம் எல்லாம்?' என்ற சொந்த சாகித்தியத்தில் சேதாரம் நிச்சயம் சேதாரம் இல்லை! ஆனாலும் சங்கதி போடும் ஒவ்வொரு தடவையும், 'சேஷனே.... டிஎன். சேஷனே' என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லி, 'யாரென்று உனை எண்ணி' என்று நீட்டத்தான் வேண்டுமா? அடுத்த மேடையில் அம்மா கொஞ்சம் யோசிக்கட்டும். ஊதுகிற சங்கை ஊதிவிட்டேன். (டெல்லிக்காரன் பேச்சு எடுபடுமா?)

வரப்போகிற உலகத் தமிழ் மாநாடு காரணமோ என்னவோ, தொடர்ந்து வந்ததெல்லாமே தமிழ்க் கீர்த்தனைகள்தாம்.

'என்ன வேணுமானாலும் சொன்னா - உம்மைச் சும்மா விடுவேனோ சென்னா?' பதம், தர்மபுரி சுப்பராயர் பாணியில் இருந்தாலும், இதுவும் சொந்த சாகித்தியமேதான். (பாலமுரளிக்கு அப்புறம் சொந்த சாகித்யம் அதிகம் பண்ணினவர் அம்மாவாகத்தான் இருக்க முடியும்.) 'கோப்பு அனுப்பினால் பார்க்க மறுக்கிறீர் - அனுப்பா திருந்தாலோ, அழுகுணி பண்ணறீர்' என்ற அடியில் நல்ல ஆவேசம். 'பொறுமையைச் சோதிக்காதீர் என வேண்டுவேன் எல்லை மீறினால் முழி ரெண்டையும் நோண்டுவேன்' என்ற வரிகளுக்கு அரைமணி நேரம் நிரவல் அவசியம்தானா?

கடைசியாகத் திருப்புகழ் பாடுவாரோ என்று எதிர்பார்த்து ஏமாந்தேன். பாடியது தன் புகழ். 'ஐம்பது கோடியும் தமிழுக்கல்லவோ;

# மோட்டார் சைக்கிள் பரிசுப் போட்டி — 15

அருகே உள்ள கட்டங்களை, அவற்றின் அருகில் உள்ள குறிப்புகளின் உதவியோடு நிரப்புங்கள். பிறகு வட்டமிட்ட எழுத்துக்களைச் சரியாக வரிசைப்படுத் தினால் இசை பற்றிய ஒரு பழமொழி வரும். விடைகளை எழுதி கூப்பனை பத்திரப்படுத் துங்கள். இருபத்தாறு போட்டிகளும் முடிந்தபின் எல்லா கூப்பன்களையும் ஒன்றாக எங்களுக்கு அனுப்ப வேண்டும். அதிக போட்டிகளில் பங் கேற்று, மிக அதிகமான விடைகளைச் சரியாக எழுதியவருக்கு மோட்டார் சைக்கிள் பரிசு. ஆறுதல் பரிசுகளும் உண்டு. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

**போட்டி எண் — 15**

அன்னக்கிளியில் சின்னக் கண்ணன் அழைப்பதாகப் பாடியவர்: ◯□□□□

குழலிசையால் மயக்குபவன்: ◯□□□

தலைவரின் ஆசி பெற அரசியல்வாதிகள் இசைப்பது: □□◯

இது தப்பாமல் இருந்தால் பாட்டு சரியாக முடியும்: □□◯

நாட்டியக் கலையின் தலைவன்: □◯□□□

டிசம்பர் விமர்சகர்: □◯□□

பானை வாத்தியம்: □◯□

கச்சேரிகள் நடத்தும் நிறுவனம்: □◯

வட்டங்களை வரிசைப்படுத்தினால் வரும் பழமொழி: □□□ □□ □□□

என் பெயர் : ..................................................

விலாசம் : ..................................................

தமிழ்த் தஞ்சைக்கல்லவோ? என் ஜீவனும் ஜீரணமும் தமிழல்லவோ'வில் இது கண் கூடாகத் தெரிந்தது.

வயலின் வாசித்த எஸ்.டி.எஸ்., அம்மா வந்ததும், மேடையிலேயே விழுந்து சாஷ்டாங்க மாய் நமஸ்காரம் பண்ணிவிட்டுத்தான், வயலினையே வெளியே எடுத்தார். வாசிப்பு ஒசத்தி இல்லை என்றாலும், இடைஞ்சலே இல் லாத வாசிப்பு. வில் எங்கே அம்மா மீது இடித்து விடுமோ என்று முக்கால்வாசி நேரம் வாசிக் காமலே இருந்து விடுவது பெரிய குறை.

மிருதங்கம் வாசித்த சேடப்பட்டி ஓட்டி வாசிக்க வேண்டாமோ? ஆனால் சாப்பு எல் லாம் அசலான சாப்பு. சால்ஜாப்பே இல்லை. 'தனி' வாசிக்க மாட்டேன் என்று அடம்பிடித் தார். அடக்கமாம்! பயந்து பயந்தாவது வாசிக் கப்படாதோ?

கச்சேரி முடிந்து, சபா காரியதரிசி சன் மானத்தை சூட்கேஸில் கொண்டு போய்க் கொடுத்தது வித்தியாசமாகவே இருந்தது. ஆனால் அத்தோடு நிற்காமல், அமைச்சர்களும் ஒவ்வொருவராக க்யூவில் வந்து காணிக்கை சூட்கேஸ்களை புரட்சித் தலைவியிடம் கொடுத் ததுதான் மயக்கம் வருவித்தது.

'ஜெ' கச்சேரியை யார் ரசித்தார்களோ இல் லையோ அவரது கோஷ்டி ரசிகர்கள், 'ஆஹா', 'ஓஹோ', 'பலே', 'பேஷ்', 'பேஷ்' என்று தொடிக் கொருதரம் பாராட்டிக் கொண்டிருந்தார்கள். ஒரு பாட்டு முடிந்ததும் கை தட்டாமல் உட் கார்ந்திருந்த ஒருவரை, இந்த அம்மாவுடைய ரசிகர்கள் முதுகிலே டின் கட்டி அனுப்பி யதைப் பார்த்த பிறகும் என்னால் சும்மா இருக்க முடியுமா என்ன? இதோ சொல்லி விடு கிறேன் :

அகாடமி அடுத்த வருஷம் அம்மாவுக் கென்று பிரத்யேகப் பட்டம் கொடுக்க யோசிப் பது க்ஷேமம். ('மும்மூர்த்திகளுக்கும் அருளிய முதல் மூர்த்தியே...' என்கிற தினுசில்!)

# ஸ்ரீராம் டிரஸ்ட்

SHRIRAM GROUP COMPANIES
MADRAS

நிர்வாக அலுவலகம் : த.பெ. 5043, 145, லிங்கி செட்டி தெரு,
சென்னை - 600 001. தொலைபேசி : 5228545 / 510535.

* * * * * *

அன்புடையீர்,

வணக்கம். 47 ஆண்டுகளாகத் தொடர்ந்து சிறப்பாக வெளிவரும் 'அமுதசுரபி' குடும்ப இலக்கிய மாத இதழ் வெளியீட்டாளர்கள் புதிய சந்தா முதலீட்டுத் திட்டத்தை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறார்கள்.

இந்தத் திட்டத்தில் ரூ. 5000 டெபாசிட் செய்தால் ஐந்து ஆண்டுகள் நிறைவடைந்தவுடன் இருமடங்காக ரூ. 10,000 திரும்பப் பெறலாம். அத்துடன், சிறந்த மாத இதழ் 'அமுதசுரபி', மாதந்தோறும் தங்கள் இல்லத்திற்கு இலவசமாக அனுப்பப்படும். எல்லோராலும் பாராட்டப்படும்' அமுதசுரபி' தீபாவளிமலர் ஐந்து ஆண்டுகளுக்குப் பதிவுத் தபாலில் தங்கள் வீடு வந்தடையும். (இடையே விலை ஏற்றம் ஏற்பட்டாலும்)

இந்த அரிய திட்டத்தில் சேர்பவர்களுக்கு 1995 ஆம் ஆண்டு ஸ்ரீராமர் பட்டாபிஷேக (பல வண்ண)தினசரிக் காலண்டர், ஸ்ரீஜகத்குரு காவியம் (மஹாசமாதி அடைந்த பெரியவாள் சரித்திரம்) ரூ. 25 விலையுள்ளது. காப்பியப் போட்டியில் இந்தியன் வங்கியின் பரிசு பெற்றது அன்பளிப்பாக வழங்கப்படும்.

இதுபோன்று, 5 ஆண்டுகளில் இருமடங்காக அளிக்கப்படும் திட்டம் மற்ற எந்த நிதி நிறுவனங்களிலும் இல்லையாதலால் இந்த திட்டத்திற்கு உங்களது முழு ஆதரவை நாடுகிறோம்.

உங்களது இலக்கிய நண்பர்கட்கும் இந்த திட்டம் பற்றித் தெரிவிப்பின் மிக்க நன்றி.

10-1-1995க்குள் சேர்பவர்களுக்கு மட்டுமே 1995 ஆம் ஆண்டு தினசரி காலண்டர் அனுப்பப்படும்.

தங்கள் ஆதரவை என்றும் விரும்பும்

ஸ்ரீராம் டிரஸ்டுக்காக

[ஏ.வி.எஸ். ராஜா]
மானேஜிங் டிரஸ்டி.

பின்குறிப்பு-

இத்திட்டத்தில் சேர்ந்துவிடும் ஸ்ரீராம் டெபாஸிட்தாரர்களுக்கு 1995 ஆம் வருட ஸ்ரீராம பட்டாபிஷேக [வண்ண] காலண்டர், ஸ்ரீஜகத்குரு காவியம் அன்பளிப்பாக அவர்கள் வீட்டிற்கு அனுப்பப்படும்.

---

## சந்தா முதலீட்டுத் திட்ட விண்ணப்பம்

தேதி : ______ ______

அன்புடையீர்,

நான் இத்துடன் சந்தா முதலீட்டுத் திட்டத்தில் சேருவதற்கு - ரூ. 5,000/- செக் / டிராப்ட் எண். ______________________ அனுப்பியுள்ளேன்/ ளோம்.

இந்தத் தொகையை 5 ஆண்டு முடிவடைந்த பிறகே ரூ. 10,000 ஆக திரும்பப் பெற்றுக் கொள்கிறேன்.

1. முழுப்பெயர் : திரு/திருமதி/ செல்வி ______________________
2. கூட்டாக இடப்பட்டால் அவர்கள் பெயர் : ______________________
3. முகவரி : ______________________
   ______________________
4. வாரிசுதார் பெயர் / உறவு ______________________
5. 'அமுதசுரபி' இதழ்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி ______________________
   ______________________
   ______________________

அன்புள்ள

அறிமுகப்படுத்தும் ஸ்ரீராம் டெபாசிட்தாரர்கள் முகவரி (டெபாசிட் எண் குறிப்பிடவும்)

டெபாஸிட்டர் கையொப்பம்



• டி.கே. மூர்த்தி



• பத்மாசுப்பிரமணியம்



• பாரதி சிவாஜி

**போ**கிற போக்கைப் பார்த்தால், இனி இசை விழாக்களில் விருது வாங்கிக் கொள்ள யாராவது மிஞ்சுவார்களா என்று பயமாய் இருக்கிறது. இந்த வருஷம் மட்டும் விருதுகள் ஒரு டஜனைத் தாண்டி விட்டன! சிலருக்கு டபுள் விருதுகள்!

மியூசிக் அகடமியின் 'சங்கீத கலாநிதி' விருது பாலக்காடு மணிக்குப் பிறகு, இப்போதுதான் ஒரு மிருதங்க வித்துவானுக்கு வழங்கப்படுகிறது. வாங்கிக் கொள்ளுகிறவர் : டி.கே. மூர்த்தி. கே.வி. நாராயணசாமி பாடவில்லை என்பது ஒரு நியூஸ். ('மீட்டருக்கு மேல் கொஞ்சம் போட்டுக் கொடுங்கள்' கேஸ். 'மாட்டோம்' என்று மறுத்துவிட்டதாம் அகடமி. வடக்கத்தி வித்துவான்களுக்கு மட்டும் தான் அகடமி தாராளமாய் நடந்து கொள்ளும் என்று தெரிந்தும், கே.வி.என். கேட்டது தவறு தான்!)

தமிழிசைச் சங்கத்தில் பத்மா சுப்பிரமணியத்துக்கு 'இசைப் பேரறிஞர்' விருது. பத்மா பாடவும் பாடுவார்.

கிருஷ்ணகான சபாவில், மோகினி ஆட்டக் கலைஞர் பாரதி சிவாஜிக்கு 'நிருத்ய சூடாமணி' பட்டம். (ஒரு ரவுண்டு எல்லா நடனவகைக் கலைஞர்களுக்கும் பட்டம் கொடுத்து முடித்துவிட்ட திருப்தி யக்ஞராமனுக்கு இருக்கலாம்.)



• வீணை காயத்ரி



• மனோகர்



• டி. சியாம் சுந்தர்

• பாலமுரளி கிருஷ்ணா





• கே.வி.என்.



• மைசூர் துரைசாமி ஐயங்கார்



• நித்யஸ்ரீ

# எல்லோருக்கும் விருது என்பதே பேச்சு!



• சரோஜா



• லலிதா



• ஷோபனா



• ஸ்ரீலதா வினோத்




• பாபநாசம் அசோக் ரமணி

• லலிதா



• நந்தினி



கார்த்திக் ஃபைன் ஆர்ட்ஸ் இந்த வருடம் இசைப் பேரொளி விருதை, வீணை காயத்ரிக்கு வழங்குகிறது. தன்னை விடப் பெரியதாக வீணை இருந்த காலத்திலிருந்தே வாசிக்கத் தொடங்கி, இன்றுவரை தாக்குப் பிடித்திருக்கிறாரே! பட்டம் தாராளமாகக் கொடுக்கலாம்.

நுங்கம்பாக்கம் கல்சுரல் அகடமிக்கு இது வெள்ளிவிழா ஆண்டு. விருதும் கொடுத்து, தங்கப் பதக்கங்களும் கொடுத்து கௌரவிக்கப் போகிறார்கள் : கே.வி. என்னுக்கு 'சங்கீத கலா சிரோன்மணி'. பத்மா சுப்பிரமணியத்துக்கு 'நிருத்ய கலா சிரோன்மணி'. மனோகருக்கு 'நாடக கலா சிரோன்மணி'.

இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸில் மைசூர் துரைசாமி அய்யங்கார், 'சங்கீத கலா சிகாமணி' விருது பெறுகிறார். ஏற்கெனவே 'சங்கீத கலாநிதி' விருதை ஒரு பாக்கெட்டில் வாங்கிப் போட்டுக் கொண்டிருக்கிறார், இந்த வீணை வித்துவான்.

மைலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸின் 'சங்கீத கலா நிபுண' விருது, பம்பாய் சகோதரிகள் சரோஜா-லலிதாவுக்கு. (இளம் இசைக் கலைஞர்களை ஊக்குவிக்க, தங்கள் முக்தாம்பரம் டிரஸ்ட் வாயிலாக, தொடர்ந்து கணிசமாக நன்கொடை வழங்கி வரும் இந்தச் சகோதரிகளுக்கு விருது என்ன, விழாவே எடுத்துப் பாராட்டலாம்!)

பாரத் கலாசார் தனது, 'யுவ கலா பாரதி' விருதுகளை, சினிமா நடிகையும் பரதநாட்டியக் கலைஞருமான ஷோபனாவுக்கும், பரத நாட்டியக் கலைஞர் ஸ்ரீலதா வினோதுக்கும், பாடகர்கள் பாபநாசம் அசோக் ரமணிக்கும், நித்யஸ்ரீக்கும், வயலின் கலைஞர்கள் லலிதா-நந்தினிக்கும், மிருதங்கக் கலைஞர் டி. சியாம் சுந்தருக்கும் வாரி வழங்குகிறது.

கபாலி ஃபைன் ஆர்ட்ஸ் விருது வழங்கவில்லையே தவிர, எம்.எஸ்., உமையாள்புரம் சிவராமன், மனோகர், எஸ்.வி. சேகர், சுதா ராணி ரகுபதி என்று எல்லாரையும் பாராட்டி கௌரவிக்கிறது. வழக்கம் போல, உடல் ஊனமுற்றோருக்கு உதவி செய்யும் வாய்ப்பையும் இந்த வருடமும் ஏற்றுக் கொண்டிருக்கிறது. இது வெள்ளிவிழா ஆண்டு!

நாரத கான சபா, டாக்டர் பாலமுரளி கிருஷ்ணாவுக்கு 'நாதப் பிரம்மம்' விருது வழங்குகிறது.

விட்டுப் போன, விருது கொடுக்கும் சபாக்கள் மன்னிக்கவும்.

— நமது நிருபர்

## வட்டமேஜை

# கலக்கிய கவர் ஸ்டோரி!

◆ பிரேமானந்தா அரசியல் - தலையங்கம் நன்கு அலசி ஆராய்ந்து எழுதப்பட்டிருப்பதால், படித்து முடித்தபின் மனத்தைக் கனக்கச் செய்தது.

திருவண்ணாமலை, வெ. சங்கரநாராயணன்.

◆ 'அடையான அட்டை ஜோக்ஸ்' குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைத்தது.

மாங்குடி, எஸ். ஜெய்சங்கர்.

◆ கலக்கிய கவர் ஸ்டோரி அசத்தல்! மனம் கவர்ந்து மகிழ்வூட்டி, 'தை தை' என குதி போட வைத்தது.

மதுரை - 16, எல்.எம். அபிதாட்சயா.

◆ ஜாதகப் பொருத்தம், மனப் பொருத்தம் என்பதுடன் இனி இரத்தப் பொருத்தமும் அவசியம் பார்க்க வேண்டும் என்பதை நன்றாகவே உணர்த்தியது, டாக்டர் பேசுகிறார் பக்கம்.

தஞ்சாவூர் - 5, வனிதா ரவி.

◆ மேலாண்மை பொன்னுச்சாமியின் "கோடை மழை" சிறுகதை அருமை. கிராமத்துப் பின்னணியில் மக்களின் யதார்த்த நிலைகளை இயல்பாக எடுத்துக்காட்டுவதில் அவருக்கு நிகர் அவரே!

திருச்சி - 13, ப. சுப்பிரமணி.

◆ அகிலா கார்த்திகேயனின் 'பய சரிதை'யைப் படித்தவுடன் உம்மணாமூஞ்சியான என் அண்ணன் கூட சிரித்து விட்டார்!

திருச்சி - 23, எம். கணேசன்.

◆ உத்தம சோழனின் 'சிகரெட் துண்டு' யதார்த்தம் நிறைந்த உன்னதச் சிறுகதை. அது சரி, "அவனது மீசையைக் குறும்பு செய்தபடி" என்று ஒரு வரி வருகிறது, ஆனால், ஓவியத்தில் மீசையைக் காணவில்லையே, ஏன்?

வடலூர், வெ. லட்சுமிநாராயணன்.

◆ அந்தக் கடைசி இரண்டு வரி விமர்சனம் இல்லாதிருந்தால், கருத்தம்மா திரைப்பட விமர்சனம் முழுமை பெற்றிருக்காது. இரண்டு வரிகளும், ரொம்பவும் ஆழமானவை; கூர்மையானவை.

மேலகரம், வே. மாறியாடும் பெருமாள்.

## ஜோதிர்லதா கிரிஜா

"சொல்லும்மா. என்ன சொல்லப் போறே?"

"அமராவதியைப் பத்தின விஷயம்ப்பா."

"நரேன்னாம்மா?"

அஞ்சனா ஆச்சர்யத்துடன் தகப்பனாரை நிமிர்ந்து பார்த்தாள். "எப்படிப்பா ஊகிக்க முடிஞ்சது?"

"என் வயசுக்கும் அனுபவத்துக்கும் கொஞ்சம் மதிப்பு கொடும்மா. நரேன் என்னிடம் விடைபெற்ற போது, அவன் விரல்கள் ஒன்றில் அமராவதியின் மோதிரம் பளபளத்தது. இவள் வேறு புதுசா ஒரு மஞ்சள் கயிற்றைக் கழுத்தில் கட்டிக் கொண்டிருக்கா. அதை என் பார்வையிலேர்ந்து மறைக்க தலைப்பை இழுத்து போர்த்திக்கிறா. ஏதாவது கேட்கலாம்னு பார்த்தா என் கண்களைச் சந்திக்கவே பயந்தவள் போல ஒதுங்கிப் போறா...."

"இந்த லெட்டரைக் கொஞ்சம் பொறுமையாப் படிச்சுப் பாருங்கோப்பா. வாய் விட்டு எங்கிட்டப் பேச முடியாம அமராவதி எழுதிக்குடுத்த லெட்டர்...."

அவர் அதை வாங்கி கண்ணாடியை எடுத்து மாட்டிக் கொண்டு படிக்கலானார்....

படித்துவிட்டு அதை மடித்து அவளிடம் திருப்பிக் கொடுத்த அவர், "உங்கம்மா மகா புத்திசாலி. அன்னிக்கே எங்கிட்ட எச்சரிக்கை பண்ணினா.... நரேனும் அமராவதியும் காதலர்கள் என்கிறதை என்னால தாங்கிக்க முடியல்லேன்னு மட்டும் நெனச்சுடாதே, அஞ்சனா. உனக்குத் தெரியும் - எனக்குச் சாதி, மதம், மாகாணம், மொழி இதெல்லாம் விதிக்கிற பேதங்கள்ள துளிக் கூட நம்பிக்கையே கிடையாது. ஆனா, எந்த நேரமும் தூக்குல தொங்கப் போற ஒருத்தன் கிட்ட... இப்படி.. இனிமே நரேனைச் சந்திக்கிறதுக்கான வாய்ப்புக் கூட நமக்குக் கிடைக்காம போகலாம்...." என்றவாறு விம்மினார்.

"வருத்தப்படாதீங்கோப்பா."

"இதுக்கு மேல வருத்தப்படவே ஒண்ணும் இல்லே, அஞ்சனா. அத்தனை பட்டாச்சு. நீயே பார்த்து என்ன செய்யணுமோ செய்" என்றார் ராஜாராமன் விரக்தியாக.

"அமராவதியை அழைச்சுண்டு வேறே ஊருக்குப் போய், கொஞ்ச நாள் இருந்துட்டு வரலாமா அப்பா?"

"திரும்பி இங்கேதானே வந்தாகணும் அஞ்சனா? வெளியே தெரியாமல் போயிடுமா? இல்லே, ஊர் வாயை மூடித்தான் வைக்க முடியுமா? தப்போ சரியோ நடந்தது நடந்துடுத்து. கஷ்டமோ நஷ்டமோ சந்திக்க வேண்டியதுதான்."

அஞ்சனாவுக்கும் அவர் சொல்வது சரியென்றே பட்டது. 'எப்படிச் சமாளிக்கப் போகிறோம்' என்ற திகைப்பு ஒருபுறமிருந்தாலும் அமராவதிக்குக் குழந்தை பிறந்து, அதைக் கையிலெடுத்துக் கொஞ்சப் போகிறோம் என்று எண்ணிய போது ஒரு பரவசக் கிளுகிளுப்பும் ஏற்பட்டது!

## 34

ராஜாராமனின் மகன் வெள்ளையரால் சுடப்பட்டு இறந்து போனதையும் அதனால் அவர் மனைவிக்கு மூளை பிசகிவிட்டதையும் அவரிடமிருந்து அறிந்து வருந்திய சிவப்பிரகாசம் இப்போதெல்லாம் அடிக்கடி அவரைச் சந்தித்து வந்தான்.

தூத்துக்குடியில் வெள்ளைக்காரனுக்கு எதிராய்ச் சுதேசிக் கப்பலோட்டி அவனது சதியால் பலத்த இழப்புக்கும் இன்னலுக்கும் உள்ளாகித் தற்போது சிறையில் வாடும் வ. உ. சிதம்பரனாரின் நண்பர்களால் நடத்தப்பட்டு வந்த பாரதமாதா சங்கத்தில் அவன் உறுப்பினராய்ச் சேர்ந்திருந்தான்.

"என்ன, சார்? எப்படி இருக்கீங்க?" என்றவாறு எதிரே வந்து உட்கார்ந்த சிவப்பிரகாசத்தை அவர் புன்னகையுடன் ஏறிட்டார்.

"இருக்கேம்ப்பா. நீ தூத்துக்குடி போற விஷயம் என்னாச்சு?"

"அதைச் சொல்றதுக்குத்தான் சார் முக்கியமா வந்தேன். இன்னிக்கு கிளம்பறேன். பாரதமாதா சங்கத்து ரகசியக் கூட்டத்துக்குப் போறேன்கிறது என் தம்பிக்குத் தெரியாது, சார். நீங்க யாரையோ பார்த்துப் பணம் வசூல் பண்ணிட்டு வர்றதுக்காக அனுப்ப




நீங்கன்னு சொல்லி வெச்சிருக்கேன்."

"சரிப்பா.... போயிட்டுப் பத்திரமா வா."

"இது நான் கலந்துக்கற அவங்களோட முதல் ரகசியக் கூட்டம். போலீஸ்காரனான என்னைச் சேர்த்துக்க ஆரம்பத்துல ரொம்பவும் தயங்கினாங்க."

"அதுல ஆச்சர்யப்பட ஒண்ணுமில்லியே, சிவப்பிரகாசம். ஆனா நீ உன் உழைப்பால அவங்களோட மதிப்பையும் மரியாதையையும் ரொம்ப சீக்கிரம் அடைஞ்சுடுவே!"

**வா**ழ்த்தி அனுப்பிய ராஜாராமன், மறுநாள் மாலை ஆங்கில நாளிதழில் சிவப் பிரகாசத்தைப் பற்றிய அந்த அதிர்ச்சியான செய்தியைப் படித்து பதறிப் போனார்.

"தூத்துக்குடியில் ஆங்கில அரசாங்கத்துக்கு எதிராக நடந்த பாரதமாதா சங்கம் எனும் அமைப்பின் ரகசியக் கூட்டம் வளைத்துப் பிடிக்கப் பட்டது. தப்பி ஓட முயன்ற போது ஆறு பேர் சுடப்பட்டனர். அவர்களுள் காவல் துறையைச் சேர்ந்த புலனாய்வுத் துறை அலுவலக ஊழியன் சிவப்பிரகாசம் என்பவனும் ஒருவன். இவன்தான் உண்மைப் பெயரை மறைத்து, மாணிக்கவாசகம் என்ற பெயரில் மாறுவேடத்தில் இருந்தான். தேசபக்தியின் பெயரிலான தீவிரவாதம் காவல் துறைக்குள்ளேயும் ஊடுருவியுள்ள புதிய தகவலால் அரசு அதிர்ந்து போயிருக்கிறது. இதனை முளையிலேயே நசுக்காவிட்டால் விபரீதம் விளையும் என்பதால் அரசு இன்னும் கவனமான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது.

"பாரதமாதா சங்கம் எனும் இச்சங்கத்துக்கு நாடு முழுவதும் உறுப்பினர்கள் என்று தெரிய வந்துள்ளது. தூத்துக்குடியில் உள்ளது ஒரு கிளை தான் என்றும் தெரிகிறது. இவர்கள் துர்க்கை எனும் பெண் கடவுளை பவானி எனும் பெயரால் வழிபடுபவர்கள். பவானி சிலைக்கு முன்னால் தாங்கள் மேற்கொள்ளும் காரியத்தை விவரித்துச் சூளுரைத்து அவரவர் உடலிலிருந்து இரத்தம் எடுத்து நெற்றியில் பூசிக் கொள்ளுகிற அளவுக்கு இவர்கள் தீவிரவாதிகள் என்பதும் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட அறிக்கைகள், அச்சடித்த சிறு ஏடுகள் ஆகியவற்றிலிருந்து தெரிய வந்துள்ளது.

"மாறு வேடத்தில் இருந்த சிவப்பிரகாசம் அதே இலாகாவைச் சேர்ந்த அவனுடைய தம்பி ஞானப்பிரகாசத்தாலேயே சுடப்பட்டான் என்பதை விதி என்பதா இல்லை அதுதான் நியாயம் என்பதா? சுடப்பட்டபின் உயிர் பிரிவதற்கு முன்னால் தான் யார் என்பதைச் சிவப்பிரகாசம் வெளிப்படுத்த, அவனைச் சுட்டுவிட்ட ஞானப்பிரகாசம் அதிர்ந்து போனான். அண்ணன் இறந்ததும் தானும் தனது நெற்றிப் பொட்டில்

கட்டுக் கொண்டு அந்த இடத்திலேயே மாண்டான்...."

படித்ததையே திரும்பத் திரும்பப் படித்துக் கொண்டு ராஜாராமன் சிலையாக அமர்ந்திருந்தார்.

**(மணிக்கொடி முதல் பாகம் முற்றிற்று.)**

## இரண்டாம் பாகம்

# 35

**'எஸ்.** எஸ். மகாராஜா' எனும் அந்தக் கப்பலில் பயணம் செய்த அந்த ஒற்றைக் கைதிக்குள் பொங்கிய உணர்ச்சிகள் விவரிக்க இயலாதவை. அவனது பார்வை இங்குமங்கும் சுற்றிச் சுழன்று கொண்டே இருந்தது. அவனது தாங்க முடியாத பரபரப்புக்குக் காரணம், அந்தக் கப்பல் அப்போது நங்கூரம் பாய்ச்சி நின்றது சென்னைத் துறைமுகத்தில் என்பதுதான்!

"என்ன சுற்றிச் சுற்றிப் பார்க்கிறாய்?" என்று பக்கத்தில் நின்றிருந்த மற்றொரு கைதி வினவ, "இங்கே மதராசில்தான் என் நண்பர்கள் இருக்கிறார்கள். தற்செயலாய்க் கண்ணில்படுகிறார்களா என்றுதான் பார்க்கிறேன். அது வீண் ஆசை என்பதை நான் அறிவேன். இருந்தாலும் ஆவலையும் ஏக்கத்தையும் அடக்கிக் கொள்ள முடியவில்லை, மல்ஹோத்ரா!" என்றான் அவன்.

"நீ ரொம்பவும் ஆழமானவன், நரேன். நண்பர்கள் என்று சொன்னவர்களில் ஒரு பெண் நிச்சயமாக இருக்கிறாள் என்று நினைக்கிறேன். அப்படித்தானே?"

"அப்படித்தான் வைத்துக் கொள். கப்பல் எப்போது புறப்படும்?"

"இன்னும் மூன்று மணி நேரத்துக்கு மேல் இருக்கிறது, நரேன்."

இத்தனை ஆண்டுகளாகச் சென்னைக்கு வர முடியாமற் போன ஏமாற்றத்தை விடவும் சென்னைத் துறைமுகத்தில் கப்பலில் இருந்தபடி யாரையும் சந்திக்க முடியாமல் போக வேண்டியுள்ள ஏமாற்றம் அதிகக் கொடுமையாக அவனுக்குத் தோன்றியது.

"உனக்கு இடக்கை வெட்டுப்பட்ட விஷயம் உன் நண்பர்களுக்குத் தெரியுமா, நரேன்?"

"தெரியும். கடிதம் எழுதித் தெரிவித்து விட்டேன்."

"சென்னையிலிருந்து நீ புறப்பட்டு வந்து பதினேழு ஆண்டுகள் ஆகப் போகின்றன. அவர்கள் வாழ்க்கையில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பின் அவை உனக்குத் தெரிய வழி இல்லையே, நரேன்? ஹார்டிஞ்ச் குண்டெறி வழக்கில் தலைக்கு ஏழு ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்று அலிப்பூர்ச் சிறையில் இருந்தோம். அங்கிருந்து தப்பிய பின், மறுபடியும் காகோரி மெயில் கொள்ளையில் சம்பந்தப்பட்டதால் இப்போது அந்தமானுக்குக் கடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறோம்..."

"சரி, அதற்கென்ன? நீ பேசுவது புரியவில்லை. விண்டு பேசு, மல்ஹோத்ரா."

"இத்தனை ஆண்டு இடைவெளியில் அவள் வாழ்க்கையில் ஒரு மாற்றமோ திருப்பமோ ஏற்பட்டிருந்தால்? அதாவது, அவளுக்குத் திருமணம் ஆகி இருந்தால்?"

யாரோ ஒரு சட்டித் தணலை எடுத்துத் தனது வெற்று மார்பில் கொட்டி விட்டாற் போல் அவன் துடித்துப் போனான்.

"அப்படி ஒருபோதும் நடந்திருக்காது, மல்ஹோத்ரா. நீ அவளையறிய மாட்டாய். ஒருவேளை அப்படி ஒரு கட்டாயம் ஏற்பட்டிருந்தால், உயிரை விட்டிருப்பாளே தவிர, இன்னொருவனை மனத்தாலும் நினைக்க மாட்டாள்!"

மல்ஹோத்ரா பதில் சொல்லவில்லை. சற்றுப் பொறுத்து, "நீ நினைப்பது சரியாக இருந்தால் எனக்கும் மகிழ்ச்சிதான்" என்றான்.

கப்பலில் கைதிகளுக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த சிற்றறையில் இருந்தபடி இருவரும் வெளியே வேடிக்கை பார்த்தார்கள்...

**அ**ப்போதுதான் அந்த

**அடுத்த இதழில்....**

**●● ராக்கெட் ஒற்றர்கள்!**
— கவர் ஸ்டோரி

**●● ரஜினி நடிக்காமலே ரஜினி படம் எடுக்கலாம்!**
— ஓர் அறிவியல் ஆச்சர்யம்

அற்புதம் நிகழ்ந்தது. கல்லூரி மாணவர்களும் மாணவிகளுமாய்ச் சிலர் தங்கள் ஆசிரியர், ஆசிரியையுடன் கப்பலுக்குள் புகுந்தார்கள். கப்பலுக்குள் நுழைந்து பார்க்க வேண்டும் என்பது அவர்களது நெடுநாள் அவா. மூன்று மாதங்களுக்கு ஒருமுறை இப்படி வெளியே சென்று எதையேனும் வேடிக்கை பார்ப் பதை அந்த வகுப்பினர் வழக்கமாய்க் கொண் டிருந்தார்கள். இன்று அவர்கள் கப்பலைத் தேர்ந்தெடுத்தது நரேந்திரநாத் பானர்ஜியின் பெரும் பேறுதான்.

கைதிகள் இருந்த சிற்றறை வெளியே பூட்டப்பட்டிருந்தது. ஆனால் அவ்வறையில் இரண்டு சாளரங்கள் இருந்தன. ஒன்று கப் பலின் உட்புறம் பார்க்க வசதியாகவும் மற் றொன்று கடல் பக்கம் வெளியே பார்க்க வசதியாகவும் இருந்தது. மாணவ மாணவி களின் சிரிப்பும் கும்மாளமும் கேட்டு இரு வரும் திரும்பிப் பார்த்தார்கள்.

அறைக்கு வெளியே தற்செயலாக அந்தப் பக்கம் வந்த காவலாள், மாணவ மாணவி கள் அவ்வறைக்குள் நோக்குவதைக் கண்டு, "அவர்கள் அரசாங்க விருந்தாளிகள். அந்த மானுக்குப் போகிறார்கள் சுதந்திரம் வாங்க!" என்று கிண்டலாய்ச் சொல்லி விட்டு அப் பால் நகர்ந்தான்.

ஆர்வம் காட்டாமல் ஏனைய மாணவ மாணவிகள் நகர, பவித்திரா, தனக்கு அருகே இருந்த கங்காதரனிடம் மெதுவாக, "எட்டிப் பார்க்கலாமா, கங்கா? இவர்கள் சுதந்திரப் போராட்ட வீரர்கள் எனில் வணக்கம் செலுத்த விரும்புகிறேன்" என்றாள்.

உள்ளே எட்டிப் பார்த்து இருவரும் கைதிகளை நோக்கிக் கும்பிட்டார்கள்.

"என்னால் இவர்களைப் போல் கும்பிட முடியாது. ஏனெனில் எனக்கு ஒரு கை இல்லை," என்ற நரேந்திரநாத் பானர்ஜியைப் பவித்திரா வியப்பு, அதிர்ச்சி, மகிழ்ச்சி ஆகியவை ததும்பிய விழிகளால் ஏறிட்டாள்.

மெதுவான குரலில், "உங்கள் பெயர் நரேந்திரநாத் பானர்ஜியா?" என்றாள்.

"ஆமாம். உங்களுக்கு எப்படி என் பெயர் தெரியும்?"

"என்னுடைய அம்மா உங்களைப் பற்றிச் சொல்லி இருக்கிறார்."

"உங்களுடைய அம்மாவா? யார் அது?"

"அமராவதி" என்ற பவித்திரா கலங்கிப் போன விழிகளால் அவனை நோக்கிப் பரவ சத்துடன் புன்னகை செய்தாள்.

நரேந்திரநாத் பானர்ஜியின் மயிர்க்கால் கள் குத்திட்டு நிற்கலாயின. அவன் விழி களில் நீர் திரண்டது.

"ரூம்ல தனியா உக்காந்துண்டு என் னப்பா பண்ணிண்டிருக்கேள்?" என்றபடி அஞ்சனா ராஜாராமனின் அறைக்குள் நுழைந்து அவரது கட்டிலில் உட்கார்ந்தாள்.

"வேறென்னம்மா பண்ணப் போறேன், பேப்பர் படிச்சிண்டிருக்கேன். காந்தி லேட் டஸ்ட்டா என்ன சொல்லியிருக்கார்னு பார்க் கறேன்."

"ஏம்ப்பா? காந்தியால வெள்ளைக் காரனை விரட்ட முடியுமாப்பா? எனக்கென் னமோ நம்பிக்கை வர மாட்டேங்கறது."

"நமக்கு ஆபத்பாந்தவரா வந்திருக்கார், தென்ஆப்பிரிக்காவிலேர்ந்து. எந்த அளவுக்கு ஜெயிக்கப் போறாரோ தெரியல்லே."

"மாண்டலே ஜெயில்லேருந்து விடுதலை ஆகி வந்த திலகர் செத்துப் போயிட்டது நமக்குப் பெரிய நஷ்டம்ப்பா. அவரும் இருந்தா நன்னாருக்கும்."

"நன்னாத்தான் இருக்கும்! ஏன்னா ரெண்டு பேரும் ரெண்டு துருவங்களா இருந் துண்டு மோதிப்பா. வெள்ளைக்காரனுக்கு இன்னும் குஷிதான். நாம நமக்குள்ளே சண்டை போட்டா அவங்காட்டுல மழை."

"இந்த நாடு கெட்டுக் குட்டிச்சுவரானதே அதனாலதானேப்பா? ஏம்ப்பா? காங் கிரஸ்லயே மிதவாதிகள் தீவிரவாதிகள்னு ரெண்டு கட்சிகள். இது போறாதுன்னு அன் னிபெசன்ட் ஹோம் ரூல் லீக்னு ஒண்ணைத் தொடங்கினாங்க. அதுவும் போறாதுன்னு திலகர் வேற இண்டியன் ஹோம் ரூல் லீக்னு இன்னொண்ணைத் தொடங்கி வெச்சார். இப் படித் தலைக்குத் தலை நாட்டாமை பண் ணிண்டிருந்தா வெள்ளைக்காரனுக்கு இன் னும் நாம மட்டமாத்தானேப்பா போவோம்?"

"அம்மா, அஞ்சனா, நீ சொல்றது ஒரு விதத்துல சரின்னாலும், எப்பவுமே ரெண்டு புத்திசாலிகள் ஒண்ணு சேர மாட்டாம்மா. அது ஒரு மனுஷ மனத்தத்துவம்."

"ஆனா இப்ப ஹோம் ரூல் இயக்கம் இல் லாததுனால காந்தியே சாதிச்சுடுவார்னு நீங்க நம்பறேளாப்பா?"

"அப்படியும் சொல்லிட முடியாதும்மா. இப்ப ஜவாஹர்லால் நேரு இருக்கார். அவ ருக்கும் காந்திக்கும் நிறைய கருத்து வேறு பாடு இருக்கு...."

"காந்தி மாதிரி அகிம்சை, அகிம்சைன் னுண்டு கிடந்தா சுதந்திரம் இந்த யுகத்துல நடக்கிற காரியமில்லே."

"சிவில் டிஸ்ஒப்டியன்ஸ் மூவ்மென்ட்ங் கிற பொதுஜனச் சட்ட மறுப்பு இயக்கத் தைத் தொடங்கி அகிம்சை வழியிலதான் ஜனங்கள் செயல்படணும்னார். ஜனங்கள் அமைதியான முறையில ஊர்வலம் போனா லும் போலீஸ்காரன் சும்மா இருப்பானா? தடியடிப் பிரயோகம் பண்ணினான். தடி யால அடிச்சா ஜனங்கள்தான் கையைக் கட் டிண்டு சும்மா இருப்பாளா? காந்தி சொல்ற படி நடக்கணும்னா - அதாவது ஒருத்தன் அடிச்சாலும் அவனைத் திருப்பி அடிக்காம இருக்கிற அளவுக்குப் பொறுமையா இருக்

ணனும்னா - அதுக்கு ஒரு பக்குவம் வேணும். சௌரிசாவ்ராவில ஊர்வலம் போனப்போ ஜனங்கள் சும்மா இருந்தாளோ? இல்லே. திருப்பி அடிச்சா, அடி வாங்கின போலீஸ்காரன் சும்மா இருப்பானா? சுட்டான். ஜனங்கள்ள சிலர் செத்தா, அவங்க துப்பாக்கிகள் காலியாயிடுத்துன்னு தெரிஞ்சதும், ஜனங்கள் என்ன செய்தா? அவாளைத் துரத்திண்டு ஓடினா. போலீஸ்காரா ஒரு கட்டடத்துக்குள்ள பூந்துண்டு கதவைச் சாத்திண்டா. உடனே இவா அந்தக் கட்டடத்துக்கே தீ வெச்சுட்டாளே. அதனோட ரிசல்ட்? இருபத்திரண்டு போலீஸ்காரா செத்துப் போனா. 'அமைதியாச் சண்டை போட்றது'ங்கிற வார்த்தைப் பிரயோகமே தப்பு. கடைசியில சட்ட மறுப்பு இயக்கத்தையே நிறுத்தி வெச்சுட்டதா காந்திஜி அறிவிக்கும்படி ஆச்சு. தக்க நேரத்துல மறுபடியும் தொடங்குவேன்னும் அறிக்கை விட்டார்... இந்த இடைக்காலத்துல அது பத்தி நிறையப் பிரசாரம் பண்றார். சமூகக் கேடுகள் பத்தியும் பிரசாரம் பண்ணிண்டிருக்கார்; எழுதறார்."

அப்போது தொலைபேசி மணியடிக்க, அஞ்சனா எழுந்து சென்று பதிலிறுத்தாள்.

"பெரியம்மாவா? நான்தான் பவித்ரா பேசறேன்."

"என்ன, பவித்ரா?"

"நான் போர்ட் ட்ரஸ்ட்லேருந்து பேசறேன். எஸ். எஸ். மகாராஜாங்கிற கப்பலைப் பார்க்கிறதுக்காக எங்க க்ளாஸ் ஸ்டுடென்ட்ஸ், டீச்சர்ஸ் எல்லாருமா இங்க வந்தோம். அப்ப ஒரு அதிசயமான சந்திப்பு நடந்தது. யாரைச் சந்திச்சேன்னு சொல்லு, பார்ப்போம்?"

"யாரைடி?"

"எங்கப்பா! நரேந்திரநாத் பானர்ஜியைப் பார்த்தேன், பெரியம்மா! கப்பல்ல அவரையும் இன்னும் சில கைதிகளையும் அந்தமானுக்குக் கொண்டு போறா. கப்பல் புறப்பட இன்னும் ரெண்டு மணி நேரம்தான் இருக்கு. அதுக்குள்ள, தாத்தா, நீ, அம்மா மூணு பேரும் கார்ல உடனே வந்தா பார்க்கலாம். அம்மாகிட்ட சொல்லு. உடனே கிளம்புங்கோ!"

"சரிடி, உடனே வரோம்," என்ற அஞ்சனா அமராவதியிடமும் ராஜாராமனிடமும் சேதியைச் சொல்ல, அமராவதி உணர்ச்சிகளின் கொந்தளிப்பில் சிக்குண்டு அரை மயக்கமாய் உட்கார்ந்து போனாள். ராஜாராமன் அவசர அவசரமாக போர்ட் டிரஸ்டில் இருந்த தமது நண்பர் நாராயண அய்யருக்கு அனுமதிக்காக ஃபோன் செய்தார். அடுத்த மூன்றாவது நிமிடத்தில் மூவரும் காரில் பறந்தார்கள்.

(தொடரும்)

● மு. பாலகுமார், ஸ்ரீவில்லிபுத்தூர்.

*? இலங்கை பல்கலைக் கழகம் ஒன்று டாக்டர் பட்டம் அளிக்க முன்வந்ததை சந்திரிகா வேண்டாம் என்று மறுத்திருக்கிறாரே?*

! சகட்டுமேனிக்கு வாங்கி அடுக்கிக் கொண்டால் அவருக்கும் நம்ம ஊர் அரசியல்வாதிகளுக்கும் இடையில் வித்தியாசமில்லாமல் போய் விடுமே? அது சரி, தேர்தலில் ஜெயித்ததுமே டாக்டர் பட்டம் என்றால், அந்தப் பல்கலைக் கழகத்துக்கும் நம்ம ஊர் பல்கலைக் கழகங்களுக்கும் வித்தியாசமில்லை போலிருக்கே!

● கே. பாரதி, மணலூர்பேட்டை.

*? சேஷனுக்கு கருப்புக் கொடி காட்டியதன் மூலம் அ.தி.மு.க.வினர் சாதித்தது என்ன?*

! அந்த ஞாயிறு முழுவதும் மாநகரின் பிரதான நெடுஞ்சாலையில் போக்குவரத்தை ஸ்தம்பிக்கச் செய்து, மக்களின் கழுத்தறுத்தார்களே, போதாதா?

● அருண் இளம்பரிதி, திருச்சி.

*? முழுப்பக்க விளம்பரம் என்றாலே முகம் களிக்கச் செய்கிற இந்நாளில் ஜே.ஆர்.டி. டாட்டாவுக்கு 29.11.94ல் முழுப்பக்க விளம்பரம் பார்த்ததும் என்ன தோன்றியது?*

! காக்கைகளின் கத்துதல்களுக்கு மத்தியில் குயிலின் கானம் கேட்ட சந்தோஷம் ஏற்பட்டது.

● க. பழனிவேல், உ. நெமிலி.

*? "இன்று தெய்வீக ஆட்சி நடைபெறுவதற்கு மழை பெய்வதே சாட்சி" என்று அறநிலையத்துறை அமைச்சர் பேசியிருப்பது பற்றி?*

! கொலை, கொள்ளைகளும்தாம் ஏராளமாய் நடக்கிறது. அதற்காக சாத்தான் ஆட்சி நடப்பதாகச் சொல்லி விட முடியுமா என்ன!

● எஸ். குமார், காரைக்குடி.

*? எதிர்க்கட்சிகளின் தலையாய கடமை எது?*

! எதிர்ப்பது - அர்த்தமுள்ள விதத்திலும் பொதுமக்களுக்குத் தொல்லை தராத முறையிலும்.

● மு. ரவிச்சந்திரன், சேலம்.

*? "நான் என்ற அகந்தையும் அகம்பாவமும் சேஷனுக்கு அதிகரித்து விட்டது" என ஜெ. அறிக்கையொன்றில் கூறியிருப்பது குறித்து...?*

! ஊனமுற்றோர் நலனுக்கான மாநாட்டில் கூட உலகத் தலைவியாகத் தன்னைக் காட்டிக் கொண்டு, மயன் மாளிகையையும் மலர் தூவிய வரவேற்பையும் எதிர்பார்க்கும் ஜெ., தமக்குப் போட்டியாக அகந்தைக்கு இன்னொருவர் தோன்றுவதை விரும்பவில்லை என்பது தெளிவு.





# முதல்வர்-கவர்னர் பனிப்போர் முடிவது எப்போது?

● முகவை முத்துசாமி, தொண்டி.

*? புரியாத புதிராக தங்களுக்குத் தோன்றுவது எது?*

! தாஜ் ஹோட்டல் தாக்குதலைக் கூட, ஆமோதிக்காவிட்டாலும் புரிந்து கொள்ள முடியும்; ஆந்திரா தேர்தலின் போது வன்முறைகளைக் கூட, விரும்பாவிட்டாலும் புரிந்து கொள்ள முடியும்; ஒருசில மக்களின் உணர்வுகள் தூண்டி விடப்பட்டிருப்பதாக. ஆனால் நாகபுரி டெஸ்டின் போது மேற்கிந்திய அணி மீது பார்வையாளர்கள் கற்களையும் ஆரஞ்சு தோலிகளையும் வீசி அவமதித்ததைப் புரிந்து கொள்ளவே முடியலை, சாமி! அதுவும் மேற்கிந்திய அணி தோற்றுக் கொண்டிருக்கும் போது! இந்த அளவுக்கு நமது பண்பாடு சீரழியக் காரணம் என்ன? யோசிப்போம்.

● எம். ஜெயமுருகன், ரிஷிவந்தியம்.

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
பத்மா மணி,
13, ஸ்ரீராம் காலனி,
ஆழ்வார்பேட்டை, சென்னை - 18.

*? "கவர்னரின் அனுமதியில்லாமல் அமைச்சர்களின் இலாகா மாற்றம் சட்டத்துக்குப் புறம்பானது அல்ல" என்று 'ஜெ' கூறுவது?*

! சட்டத்துக்குப் புறம்பானதாக இல்லாதிருக்கலாம்; ஆனால் நல்ல மரபுகளுக்குப் புறம்பானது என்பதில் ஐயமில்லை. ஜனநாயகத்தில் சட்டம் அளவுக்கு நல்ல மரபுகளும் முக்கியம்தான். ஹரிபாஸ்கர் பதவி நீட்டிப்பு விஷயத்திலோ, மரபை மட்டுமின்றி சட்டத்தையும் 'ஜெ' புறக்கணித்திருக்கலாம் என்று கருதப்படுவதால் வழக்கை உயர்நீதி மன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டிருக்கிறது.

● **எச். மோகன், மன்னார்குடி.**

*? முதல்வர் - கவர்னர் பனிப்போர் முற்றுப் பெறுவது எப்போது?*

! இருவரில் ஒருவர் பதவி இழக்கும் போது!

● **புளியரை கணேசன், சென்னை.**

*? "சட்டங்களைத் திருத்தி அமைப்பதாலே சமூகம் திருந்தி விடாது'' என்று ஆர்.எம்.வீ. பேசியிருக்கிறாரே?*

! இவர் சட்டத்தையும் திருத்த வேண்டாம்; சமூகத்தையும் திருத்த வேண்டாம். தமக்குக் கீழ் உள்ள ரேஷன் கடைகளைத் திருத்தினாலே போதும்! பில்லை ஒருநாள் போடுவதும் பொருளுக்கு இன்னொரு நாள் வரச் சொல்வதும்; கண்ணெதிரே டின் டின்னாக யார் யாருக்கோ எண்ணெய்யும் சர்க்கரையும் பறிபோவதும்... மக்கள் படும் அவதி சொல்லி





* —ஐச் வேஷம்...



* வேண்டாம் பட்டம்!



* எதைத் திருத்துவது?



* முழுபக்க விளம்பரம்

மாளாது, கணேசா!

● **கே. ஆர். வேலுச்சாமி, அன்னூர்.**

*? பத்திரிகைத் தொழில் இப்போது எப்படி இருக்கிறது?*

! பெண் வழக்கறிஞரைக் கூட ஆசைகாட்டி ஈர்த்து, அரைகுறை ஆடையுடன் போஸ் கொடுக்கச் செய்து, மேலட்டையில் பிரசுரித்துக் காசு பண்ணும் நிலைக்குத் தாழ்ந்து போயிற்று.

● **பி.என். ஜெய்சங்கர், திருவாரூர்.**

*? பெண்ணாசை, பொன்னாசையால் இந்திய விண்வெளி விஞ்ஞான ரகசியங்கள் வெளிநாடுகளுக்கு விலைபோன மாபெரும் சதித்திட்டம் குறித்து...?*

! நம் நாட்டில் படிக்காத பாமரர் நிறைய இருப்பதால் படித்தவனெல்லாம் பரமயோக்கியன் என்று எண்ணி ஏமாறுவது சகஜமாயிருக்கிறது. பார்க்கப் போனால் படிக்காதவனை விட படித்தவன் பண்ணும் தில்லுமுல்லுகள்தாம் அதிகம்! பணம் என்றால் பிணமும் வாய் திறக்குமெனில் விஞ்ஞானி எம்மாத்திரம்? பொன்னாசைக்கு அடுத்தது பெண்ணாசைதானே? எனவே இதில் எல்லாம் வியப்பில்லை. வருந்துவதற்குரிய விஷயம் நமது ராணுவத்தின் துப்பறியும் பிரிவு தூங்கி வழிகிறதே என்பதுதான். பாக் ஊடுறுவல், பயங்கரவாதிகள் மூலம் மட்டுமின்றி, உளவுக்காரர்கள் மூலமும் நடக்கும் என்பதை எதிர்பார்த்துச் செயல்பட்டிருக்க வேண்டாமா?

● **பத்மா மணி, சென்னை.**❑

*? காவல் துறையைக் கையில் வைத்திருக்கும் முதல்வர் தாஜ் ஓட்டலில் அராஜகம் புரிந்தவர்களைப் பிடித்து, அந்த ஓட்டலுக்கு நஷ்டஈடு வழங்க முன்வருவாரா?*

! பஸ் அடித்து நொறுக்கப்பட்ட போது அது அ.தி.மு.க. இளைஞர் அணியின் கைங்கர்யம் என்பது ஊர் அறிந்த ரகசியமாகி விட்டது. எனவே நஷ்டஈடு தந்து சமாளிக்கும் அவசியம் ஏற்பட்டது. அதற்காக நடந்த, நடக்கிற, நடக்கப் போகிற தாக்குதல்களில் எல்லாம் அ.தி.மு.க. தொடர்பை அம்பலத்துக்கா கொண்டு வருவார்கள்? மறைக்கத் தான் முயற்சி செய்வார்கள்.

● **முருகேசன், தேனி.**

*? தமிழ்நாட்டில் தங்களை மெய்சிலிர்க்க வைத்த சம்பவம்?*

! டி.எஸ்.பியை பணயக் கைதியாக வீரப்பன் பிடித்துக் கொண்டு போய் விட்டான் என்று தெரிந்ததும் ஸ்ரீபாலும் தேவாரமும் விழுந்தடித்துக் கொண்டு கோவைக்கு ஓடி, கலெக்டர் சங்கர் காரியாலய அறையில் மௌன விரதம் காத்த வீரச் சம்பவம்தான். அடடா! என்ன சுறுசுறுப்பு! என்ன சாணக்கியம்!



# கொங்கு நாட்டைக் கலக்கும் நால்வர் அணி!

ஒரு தவுல் சுமார் பதினைந்து கிலோ எடை இருக்கும். ஆனால் அதை வாசிக்கிறவனோட, தவுலை விட மூணு கிலோ எடை குறைச்சல். அவன் உட்கார்ந்து வாசிக்கும் போது, இரண்டு பக்கமும் இலகுவாய் வாசிக்கக் கைகள் எட்டவில்லை. ஆனாலும் இந்தப் பக்கமும், அந்தப் பக்கமும் சாய்ந்து சமாளிக்கிறான். தவுலை மடியில் வைத்தால், வலிக்கும் என்று, தரையில் வைத்து வாசிக்கிறான். பெரிய வித்வான்கள் போல, முகத்திலே பாவம்.

கடந்த பிப்ரவரி பதினாலாம் தேதி, தாராபுரம் மாரியம்மன் கோவிலில் அமைச்சர் சர்வராமூர்த்தி கலந்து கொண்ட விழாவில், தனியாகச் சுமார் ஒரு மணி நேரம் தவுல் கச்சேரி செய்து அனைவரையும் அசத்தினான்.

அவன்தான் கணேஷ். வயது ஐந்து! பெரியார் மாவட்டம் தாராபுரத்தில் இருக்கிறான். படிப்பது உள்ளூர் பள்ளிக்கூடத்தில் முதல் வகுப்பு. இவனுக்கு தவுல் வாசிக்க ஆர்வம் வந்தது எப்படி?

குடும்பமே இசைக் குடும்பம். தாத்தா, அப்பா, பெரியப்பா என்று அனைவருமே தவுல், நாதஸ்வரக் கலைஞர்கள்தான். "இவனோட, தாத்தா தவுல் வாசிக்கும் போது, இவன் உன்னிப்பா பார்த்துக்கிட்டேயிருப்பான். அவ்வப்போது, ஆர்வம் மிகுதியில், தவுலை தட்டிப் பார்ப்பான். ஒருமுறை குருவாயூர் போயிருந்த போது அங்கே பார்த்த சின்ன (பொம்மை) தவுலை வாங்கித் தந்தால்தான் ஆச்சு என்று அடம்பிடிக்க, இவனோட அப்பா வாங்கித் தந்தாரு. அதை கழுத்தை விட்டுக் கழட்டாம தட்டிக் கொண்டே இருந்தான்" என்கிறார் கணேஷின் தாய் கல்யாணி.

"தவுல் கலைஞரான உடுமலை அங்குசாமி, கணேஷுக்குப் பெரியப்பா. அவர்தான் குருவாய் இருந்து கணேஷுக்கு தவுல் கற்றுத் தருகிறார். அவரும் தாராபுரத்திலேயே வசிப்பதால், தினமும் கற்றுக் கொடுக்க வசதியாய் உள்ளது.." என்கிறார் கணேஷின் தந்தை வடிவேல் (நாதஸ்வரக் கலைஞர்).

கணேஷின் பெரியப்பா மகன் மணிகண்டனும் (வயது 12) நன்றாய் தவுல் வாசிக்கிறான். இவன் தவுல் கற்றுக் கொள்ளத் துவங்கியது ஐந்து வருடங்களுக்கு முன்பு.

இதே போல, கணேஷின் இன்னொரு பெரியப்பாவின் இரண்டு மகள்களான அகிலாண்டேஸ்வரி (வயது 15), விஜயலட்சுமி (வயது 14) இருவரும் நாதஸ்வரம் கற்றுக் கொண்டு, நன்றாய் வாசிக்கிறார்கள். இந்த நால்வர் அணி, அண்மைக் காலமாய் தமிழ்நாட்டில் குறிப்பாக கொங்கு நாட்டுப் பகுதியில் மிகப் பிரபலம். கோவில் விழாக்கள், திருமண நிகழ்ச்சிகள், வரவேற்புகள் என்று நிறைய நிகழ்ச்சிகள் வழங்கி வருகிறார்கள்.

விராலி மலையில் நடந்த அருணகிரிநாதர் விழாவில் கணேஷ் அண்டு பார்ட்டியின் ஒரு மணி நேர நிகழ்ச்சிக்கு ஏற்பாடாகி இருந்தது. இவர்கள் இசையில் லயித்துப் போன மாவட்ட கலெக்டர், 'இன்னும் வாசியுங்கள்' என்று உற்சாகப் படுத்த, நிகழ்ச்சி நாலரை மணி நேரம் நடந்தது. ஒரே பாராட்டுத்தான் இந்த சிறுவர், சிறுமியருக்கு.

சென்னையில் பாரத் கலாசார் ஆதரவில் இவர்கள் நிகழ்ச்சி நடைபெற்றபோது, செம்மங்குடி, "பிரமாதமாய் இருக்கு உங்க வாசிப்பு. நீங்க நாலு பேரும் என்னிக்கும் பிரிஞ்சு போகாம, இப்படியே இருக்கணும்" என்று ஆசீர்வதித்ததைக் குடும்பமே பாக்கியமாய்க் கருதுகிறது!

ரேடியோ, தூர்தர்ஷன், சன் டி.வி. என்று எதையும் இவர்கள் விட்டு வைக்கவில்லை. இதுவரை டபுள் செஞ்சுரி போட்டிருக்கும் இவர்களுக்கு அநேகமாய், தஞ்சையில் நடக்கும் தமிழ் மாநாட்டின் போது வாசிக்கவும் வாய்ப்புக் கிட்டலாம்!

தாராபுரத்திலிருந்து : **சந்திரா**

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

REGISTERED NO. M. 439
Registered as Newspaper i

